
# என் உயிரே கண்ணம்மா

ரமணிசந்திரன்



# என் உயிரே கண்ணம்மா

## 1

அன்றாட வழக்கம் போலவே அன்றும் அதிகாலையில் எழுந்து கிழ்ப்புறச் சன்னலில் சாய்ந்தபடி வெளியே நோக்கினாள் பாரதி.

வானிலும் பூமியிலுமாக விடியலின் வண்ணக் கோலங்கள் அவள் மனதில் அமைதியைப் பரப்புவதும் வழக்கமே.

ஆனால் அன்று அவை அடியோடு தோற்றதோடு ஆத்திரமே பொங்கியது.

சூரியன், அக்கினி, வாயு... எல்லாமே ஆண் பெயர்கள்.

சூரியனாம், ஏன், சக்தி உள்ள சூரியை என்று பெண்ணாக உருவகப்படுத்தக் கூடாதா?

அவளுக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் அப்படித்தான் பெயர் வைப்பாள்.

அதையும்விட அவளே அந்தச் சூரியை ஆக இருந்தால் இந்த உலகத்தில் தவறு செய்யும் ஆண்களை எல்லாம் எரித்துவிடுவாள்.

அதிலும் பணக்கார ஆண்களைப் பொசுக்கி விடுவாள்.

சக்தியிருந்தால்...

கார்கால மின்னலாய்க் கண்களில் கனல் தெறிக்கையி லேயே, எண்ணங்களின் போக்கு பைத்தியக்காரத்தனமாய் இருப்பதைப் பாரதி உணர்ந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இந்த மாதிரிக் கிறுக்குத்தனமான கற்பனைகளில் நேரத் தைச் செலவிடுவதைவிட அடுத்து என்ன செய்யலாம் என்று ஆக்கப்பூர்வமாய் யோசிப்பது நல்லது.

ஆனால் என்ன முயன்றும் ஆக்கப்பூர்வமான யோசனை ஒன்றுமே தோன்ற மறுத்ததுதான் அநியாயமாய் இருந்தது.

மண்டை ஓட்டுக்குள் இருந்த சாம்பல் நிறப் பொருளை முழு அளவில் வேலை வாங்கி ஆயிற்று.

அது காட்டிய வழிகள் அத்தனையையும் முயன்றாயிற்று.

ஒரு பலனையும் காணோமே!

அந்தச் சிற்றூரின் ஓரமாய், ஒரு மாடி வீட்டின் முன்புற மாய் 'மது பேப்பர்ஸ்' என்று பளிச்செனக் கருநீல எழுத்துக்க ளில் ஒரு போர்டைப் பார்த்தபோது அவள் பெரிதாக ஒன்றும் எண்ணிவிடவில்லை.

பத்திரிகைக் கடையாக்கும் என்று அசுவாரசியமாக நினைத்தபடி சைக்கிளை வேகமாக மிதித்தாள்.

வேலை முடிந்த பிறகு ஊரை விட்டுச் சற்று ஒதுக்குப் புறமாய் இருந்த அனாதை ஆசிரமத்தில் தன்னால் ஆன பணியையும் அவள் ஏற்றிருந்தாள்.

வேலை விரைவாக முடிந்து போய்விட, அந்தப் பிள்ளை களோடு விளையாட்டு, பாடம் என்று ஈடுபடுகையில் 'மது பேப்பர்ஸ்' அடியோடு மறந்து போயிற்று.



ஆனால் அந்த வீட்டில் பத்திரிக்கை கடை தொடங்காதது மட்டுமில்லாமல் ஆள் சந்தடி பெருகியது.

பணணைக் குடும்பத்தினர் — பங்காளிகள் பத்து பேரும் அங்கங்கே கூடிப் பேசினார்கள்.

கடைசியாக, ''பெரிய தொழிற்சாலை வருகிறதாம் பாரதி. நம் ஆசிரமத்தைக் காலிசெய்ய வேண்டும்போலத் தெரிகிறது'' என்று கவலையுடன் கூறினார் அவள் வேலை செய்த கடையின் முதலாளி தாயுமானவர்.

அனாதை ஆசிரமத்தை நடத்துகிறவரும் அவரேதான்.

தாயுமானவரது கடை சற்றுப் பெரியதுதான். அதாவது அந்த ஊருக்கு.

வருமானமும் நன்றாகவே வந்தது.

தன் ஒரே மகனுக்காக விழுந்து விழுந்து சம்பாதித்தார்.

ஆனால் 'ஸ்டேட்'சுக்குப் படிக்கப் போன பிள்ளைக்கு பிறந்த நாடு பிடிக்காமல் போயிற்று.

அந்த சுவர்க்கபுரியை விட்டு இந்த ''பிளடி கண்ட்ரி''க்கு வரப் போவதே இல்லை என்று எழுதிவிட்டான்.

கொஞ்ச காலம் பித்துப் பிடித்தாற்போல இருந்தார் பெற்றவர்.

அச்சமயத்தில் இரு வகுப்பாருக்கு இடையே நடந்த சமூகச் சண்டையில் நாலு குழந்தைகள் யாரும் அற்ற அனா தைகள் ஆகிப் போயின.

ஏதோ, வழி கண்டாற்போலத் தாயுமானவர் உயிர்த்தெ ழுந்தார்.

நாலு குழந்தைகளையும் தன் நிழலில் ஏற்றுக் கொண் டார்.

ஏற்போருக்குத் தானே சுமையும் பெருகும்.

வீட்டில் இடம் பற்றாமல் போயிற்று.

பண்ணைக் குடும்பத்தில் பெரியவருக்குச் சற்று இளகிய மனது போலும்.

தனது பழைய கல்வீட்டை வாடகையின்றிப் பயன்படுத்திக் கொள்ளச் சொன்னார்.

இன்று அந்த ஆசிரமத்துப் பிள்ளைகளின் எண்ணிக்கை இருபது.

ஆசிரமத்தைக் காலி செய்வது என்றால் இந்த இருபது பேரையும் என்ன செய்வது?

''அந்தத் தொழிற்சாலையை இந்த ஆசிரமத்தின் மேலே தான் கட்டியாக வேண்டுமா சார்?'' என்றாள் அவள் ஆத்திரத்துடன்.

''இது மட்டும் இல்லை பாரதி. நிறைய இடம், இருபது இருபத்தைந்து ஏக்கர் வாங்குகிறார்களாம். பண்ணைக் குடும்பத்து நிலம் பூராவையும் எடுத்துக் கொள்ளப் போகிறார்களாம்.''

முகம் தெளிவுற, ''இருக்காது சார்'' என்று அடித்துச் சொன்னாள் பாரதி. ''பண்ணைக் குடும்பத்தில் பயங்கரமான பாலிடிக்ஸ். நிறைய வாங்கும் போது எப்படிச் சேர்ந்து வாங்கினார்கள் என்பதே உலகத்தின் எட்டாவது அதிசயம். எல்லோரையும் ஒன்று சேர்த்து அவ்வளவு நிலத்தையுமாக யாரால் வாங்க முடியும்?'' என்று விவரம் பேசினாள்.

ஆனால் தாயுமானவரின் கவலை அவ்வளவு எளிதில் குறைவதாக இல்லை. ''அந்த மதுசூதனன் - மில்லின் எம்.டி. அதைச் செய்து முடிக்கப் போகிறாரே.''

தாயுமானவர் தன்னால் ஆன முயற்சி செய்திருப்பார் என்பதில் பாரதிக்கு நம்பிக்கை இருந்தது.

''பெரியவர் என்ன சொல்கிறார் சார்?''

''என்னிடம் இதுபற்றிக் கேளாதே. தாயு' என்கிறார். பிள்ளைகள் தலையெடுத்து விட்டார்கள். இனி அவர்கள் முடிவு தான் என்று விட்டார். பிள்ளைகள் தான் துடித்துக் கொண்டு நிற்கிறார்களே, அங்கே பட்டணத்தில் சினிமா ஸ்டுடியோவில் கொட்ட வேண்டுமாமே... பிள்ளைகளிடமும் பேசிப் பார்த்தேன் பாரதி. இவ்வளவு நாள் ஒரு பைசா வாடகை தராமல் எங்கள் அப்பாவை ஏமாற்றியது போல் எங்களிடம் நடக்காது என்று ஏளனமாய்ப் பேசுகிறார்கள். இந்தப் பிள்ளைகளை என்ன செய்வது? மீண்டும் தெருவில் விட நேர்ந்து விடுமோ என்று ஒரே கவலையாக இருக்கிறது'' என்று பெருமூச்சு விட்டார் பெரியவர்.



கடையின் வரவு செலவு, ஆசிரமத்தின் செலவு கணக்கு எல்லாம் பாரதியின் கையில்தான் இருந்தது.

அதனாலேயே நாமே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அங்கே ஆசிரமத்தை மாற்றிக் கொண்டால் என்ன என்று கேட்க முடியாமல் போயிற்று.

இப்போதே ஆசிரமச் செலவில் பாதி யாசகத்தில் தான் - கவுரமாகச் சொல்லப் போனால் 'டொனேஷனில்' தான் நடந்து கொண்டு இருந்தது.

பாரதிகூடத் தன் சம்பளத்தில் செலவு போக மிச்சத்தை ஆசிரமச் செலவில் தான் போட்டு வந்தாள்.

மூன்று மாதமும் ஆறு மாதமும் ஆக இரு பச்சைக் குழந்தைகள் வேறு.

என்ன செய்வது என்று அவளுக்கும் திகைப்பாகத்தான் இருந்தது.

ஆனால் தாயுமானவரைப் போன்று அவள் இடிந்து போய்விடவில்லை.

அடுத்து என்ன செய்யலாம் என்று அதே நினைவாய் இரவு பகல் சிந்தித்துச் செயலாற்றினாள்.

முதலில் பண்ணைக் குடும்பத்துப் பெண்களை அணுகினாள்.

பொங்கலின் போது புது நெல்லுக்கு என்ன செய்வீர்கள், வக்கு இல்லாதவர்கள் போல வாங்கிச் சமைப்பீர்களா என்று கவுரவத்தில் குத்திப் பேசினாள். அனாதைப் பிள்ளைகளுக்கு இருக்கிற ஒரே கூரையைப் பிடுங்கி எறிந்தால் கடவுள் சும்மா விடமாட்டார் என்றாள்.

பஞ்சாயத்து போர்டு சேர்மனை சந்தித்தாள். கெஞ்ச லோடு ஒரு மிரட்டலையும் போட்டு வைத்தாள்.

கலெக்டர் ஆபீசு வரை சென்று வந்தாள்.

பண்ணை நிலத்தில் உழுது பயிரிடும் குடியானவர்களை ஒன்று திரட்ட முயன்றாள்.

''இந்தப் பண்ணைக் குடும்பத்தில் யாரும் நிலத்தில் இறங்கி குனிந்து நிமிர்ந்து வேலை செய்கிறவர்கள் இல்லை, அங்கிள். எல்லாம் குத்தகைத்தான். நம்ம மாரி குடும்பம் கூட ஒரு துண்டு நிலத்தில் விவசாயம் செய்கிறார்களே. விவசாயி அனுமதி இல்லாமல் அவன் உழுது பயிரிடும் நிலத்தை விற்க முடியாது என்று படித்திருக்கிறேன். அதனால் இவர்களை தூண்டிவிடலாம்'' என்று அவள் விளக்கியபோது தாயுமான வருக்கு ஆச்சரியமாக இருந்ததே தவிர நம்பிக்கை வரவில்லை.

''நூறு ரூபாயை நீட்டினால் குடும்பம் முழுவதும் குடித் துவிட்டு காட்டிய இடத்தில் எல்லாம் கையெழுத்துப் போடு வார்கள். பாரதி, அத்தோடு பண்ணை விசுவாசம் வேறு. ச்சு, ஒன்றும் பிரயோசனம் இல்லையம்மா. செங்கல்பட்டில் கருணை இல்லம் ஒன்று இருக்கிறது. இந்தப் பிள்ளைகளை யும் ஏற்றுக் கொள்ள முடியுமா என்று எழுதிக் கேட்கப் போகிறேன்'' என்றார் அவர். ''அவர்கள் முடியாது என்று விட்டால் - இருபது பிள்ளைகளை ஒருமிக்க ஏற்பது மிகவும் கடினம்தான் இல்லையா? - பிறகு இவர்கள் கதி? கடவுளே!'' என்றார் அவர் வேதனையோடு.



அவளுக்கும் நெஞ்சுக்குள் பிசைந்தது.

இந்தப் பிள்ளைகளின் பராமரிப்பு என்ற ஒன்று இல்லை யானால் அதோகதியாகிவிடுவார் தாயுமானவர்.

பிள்ளைகளின் கதியும் அதுவேதான் - தெருவில் அலைந்து திருடனாய், பொறுக்கியாய், பிச்சைக்காரனாய்...

அத்தோடு கூட அவளது நிலைமையும் தான் என்ன ஆகும்?

புயலில் சிக்கிய சருகுபோல் ஆதாரம் இல்லாமல் அலை புரண்டது, மாறி அவளது வாழ்வு ஒரு நிலைக்கு வந்தது, தாயுமானவராலும் இந்தச் சிறுவர்களாலும் தானே.

உணவுக்கும் உறைவிடத்துக்கும் தாயுமானவர் கொடுத்த சம்பளம் வகை செய்ய, 'அக்கா அக்கா என்று அந்தப் பிஞ்சுகளின் பிரியம் அல்லவா அவளது வாழ்விலும் ஓர் அர்த்தம் இருக்கிறது என்பதை அவளுக்கு உணர்த்தியது.

உண்ண வேண்டும், உடல் சுத்தம் செய்ய வேண்டும் என்ற எண்ணம்கூட இல்லாமல் நினைவு மரத்திருந்த அந்த நாட்கள் மீண்டும் வரக்கூடும்.

அந்தப் பொறுமையை எண்ணிப்பார்க்கக் கூட இன்று அவளால் இயலவில்லை.

அந்த நிலைமை வருமாறு விடக்கூடாது.

ஆனால் தாயுமானவர் சொல்வதும் மெய்யே.

தனக்குரிய நன்மை தீமைகூடச் சரிவரத் தெரியாத அந்தக் குடியானவர்களை முழுமையாக நம்பிச் செயலில் இறங்க முடியாது.

இந்தப் பணத்தில் ஓர் இரட்டை வடம் வாங்கித் தருகி றேன் என்றால் பண்ணை வீட்டுப் பெண்கள் ஊமையாகி விடுவார்கள்.

பஞ்சாயத்து சேர்மன் அரசியல்வாதி. அரைக் கணத்தில் ஆயிரம் நிறம் மாறுவார்.

கலெக்டரைப் பார்க்கவே முடியவில்லையே - அந்தப் பி.ஏ.வால் அப்படி என்ன செய்துவிட முடியும்? அவரும் தான் ஏன் செய்யப் போகிறார்?

திரும்பிய இடம் எல்லாம் தோல்வி தன் அகன்ற வாயைப் பிளந்து கொண்டு பூதமாய்க் காத்திருந்தது.

ஆக, ஐந்து ஆண்டுகளாகச் சிறுகச் சிறுகச் சேர்த்த அமைதி பறக்கப் போகிறது.

இருபது பிள்ளைகள் நடுத்தெருவில் நிற்கப் போகிறார் கள்.

ஒரு முதியவரின் மனது ஒடியப் போகிறது.

இத்தனைக்கும் காரணமாய் இங்கே என்று எங்கிருந்து வந்தான் இந்தப் பாவி!

ஒரு ஜீப்பை இங்கும் அங்குமாய் ஓட்டிச் செல்கையில் வாட்டசாட்டமாய் அவன் அவள் கண்களில் பட்டிருக்கிறான் - அரைகுறையாய் ஒரு மொத்த வடிவமாய்த்தான்.

அவனை நன்றாகப் பார்ப்பதை அவள் வேண்டும் என்றே தவிர்த்திருந்தாள்.

ஏதோ ஒரு தரம் அவளை அவன் அழைப்பது கூடக் கேட்டது. அவள்தான் சைக்கிளின் வேகத்தை சிறிதும் குறைக் காமல் ஓட்டிச் சென்றுவிட்டாள்.

சொல்லப் போனால் வேகத்தை அதிகப்படுத்தியே சென் றாள்.

ஆனால் நின்று பேசியிருக்க வேண்டுமோ?

சட்டென ஒன்று தோன்றியது.



இத்தனை சாட்சிக்காரர்களின் கால்களில் விழுந்து சோர் வதைவிட அந்தச் சண்டைக்காரனையே சந்தித்துப் பேசினால் என்ன?

மாறு எண்ணி மனது குழம்புமுன் ஒரு காகிதத்தை எடுத்து அவனுக்கு - அந்த மதுசூதனனுக்கு ஒரு கடிதம், அவனைச் சந்திக்க விரும்புவதாக எழுதித் தபாலில் சேர்த்து விட்டாள்.

## 2

மதுசூதனனுக்கும் அவளை - பாரதியைச் சந்தித்துப் பேசுவதில் ஆர்வம் இருந்தது.

அவசியமும் இருந்தது.

இந்த மாதிரி சம பூமியாய் இருபது ஏக்கர் நிலம் மொத்தமாய் வில்லங்கம் ஏதும் இல்லாமல் வேறு எங்கே கிடைக்கும்?

எல்லையோடு ஓடும் வாய்க்கால் நீர் வேறு ஒரு வரப்பிர சாதம்.

வெயிலில் வரண்டாலும் நிலத்தடி நீர் இருக்கும் அல் லவா?

பண்ணைக் குடும்பத்தினரை வளைப்பது கூட ஓரளவு இலகுவாகவே முடிந்து போயிற்று.

பிரச்சினையே இல்லாமல் நிலம் கைமாறியிருக்கும்.

நிலத்தை அகழ்ந்து அஸ்திவார வேலைகூட முடிந்திருக் கும். இந்நேரம் - அந்தப் பெண்ணின் குறுக்கீடு மட்டும் இல்லாதிருந்தால்...

பண்ணைக் குடும்பத்திலேயே இருவர், முதல் நாள் தலையை உருட்டிவிட்டுச் சென்றவர்கள்தான், மறுநாள்

முணுமுணுத்தார்கள். வயலை விற்று விட்டு அரிசி வாங்கிச் சாப்பிடுவதா என்று மனைவி கேட்கிறாளாம்.

மூலம் தேடிப் பார்க்கையில் பாரதி வேறு சொன்னாள் என்றார்கள்.

வீட்டு அரிசிக்குத் தேவையான மாற்று நிலம் பக்கத்து ஊரில் வாங்கித் தருவதாகக் கூறிச் சமாளித்தான்.

பண்ணை விவசாயிகளிடம் வீடு தேடிச் சென்று பேசி அவள் தூண்டிவிடுவதாகக் கேள்வியுற்றான்.

பஞ்சாயத்து அலுவலகத்துக்குப் போனால் அங்கேயும் அவள் இருந்தாள்.

பஞ்சாயத்துத் தலைவரிடம், அங்க்கிள் போட்டுக் குழை யடித்துக் கொண்டிருந்தாள். ''குடும்பம், குழந்தை குட்டி யோடு அவர்கள் என்ன ஆவார்கள், அங்க்கிள்? நீங்களும் பிள்ளை குட்டிக்காரர். அந்த ஏழை ஜனங்கள் வயிறு எரிந்தால் கடவுள் உங்களைச் சும்மா விடுவாரா என்று யோசித்துச் செய்யுங்கள்... அங்க்கிள், நளினி எப்படி இருக்கிறாள்? ஏதோ அடிக்கடி தலைவலி வருவதாகச் சொன்னாளே, உடனே டெஸ்ட் செய்து பாருங்கள் அங்க்கிள். பெரிதாக எதுவும் இருந்து, கவனியாமல் மேலும் வளர விட்டு விடக்கூடாது பாருங்கள்...''

மின் வெட்டாய் கீழ்ப் பார்வை ஒன்று அவன் புறமாய்ப் பாய்ந்து மீள, ''உங்களைப் பார்க்க ஆயிரம் பேர், உங்கள் வேலையை நான் கெடுத்தேன் என்று இருக்கக் கூடாது பாருங்கள். பிறகு வருகிறேன். நீங்கள் முதலில் நளினியைப் பாருங்கள்'' என்று வேகமாகப் பேசிக் கைகுவித்தவள் மேலே நில்லாமல் சென்று விட்டாள்.

அவன் அயர்ந்து போனான்.

என்ன சாபம்!

வயிறு எரிந்தால் உருப்படாதாம்.

கடவுளைக் காட்டி ஒரு மிரட்டல்.



கூடவே மகளைப் பற்றி மகளாய்த்தான் இருக்க வேண் டும். ஒரு வயிற்றுக் கலக்கல் வேறு.

இந்த நேரத்தில் இவரிடம் மேலே பேசிப் பயன் இராது.

கொண்டு வந்திருந்த டாக்குமெண்டுகளைப் பஞ்சாயத்து சேர்மனிடம் கொடுத்துவிட்டு, ''கொஞ்சம் பார்த்து வையுங் கள் சார். நான் நாளை வருகிறேன்'' என்று வெளியேறினான்.

மாவட்டக் கலெக்டரிடம் சென்றான்.

''மனு ஒன்று வந்திருக்கிறதே, மிஸ்டர் மதுசூதனன்'' என்றார் அவர்.

சொன்னதோடு நில்லாமல் மனுவையும் அவன் கையில் கொடுத்தார்.

பார்த்ததும் அவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

பாரதியின் கையொப்பம் தெளிவாக இருந்தது. அவளது கையெழுத்தின் பின்னே காமா சோமா என்று கோணல் மாணலாய் நாலைந்து ஒப்பம்கள்.

கோபத்தை அடக்கிக் கொண்டு, ''என்ன சார், ஒரு பெண்...'' என்று தொடங்கினான் அவன்.

''அவள் பின்னேயும் சில பேர் நிற்கிறார்களே சார்?''

''அவர்களைத் தூண்டி விடுவது எல்லாம் அவளே தான் சார். வேண்டும் என்றே வம்புக்கு வருகிறாள். தனியாகப் பணம் அடிக்கப் பார்க்கிறாள் என்று நினைக்கிறேன்.''

''அவள் அந்த மாதிரிப் பெண் இல்லை என்று கேள்விப் பட்டேன் மிஸ்டர் மதுசூதனன். என்னைப் பொறுத்த வரை யில் உங்களுக்கு உதவி செய்யும்படியாக உத்தரவு. அதனா லேயே மிஸ் பாரதியை நான் சந்திக்கவில்லை. ஆனால் அவள் மனுவை எழுத்து மூலம் பி.ஏ.யிடம் கொடுத்துப் போய்விட்டாள். அவள் சொன்னபடி கேட்க வேறு நாலைந்து பேர்.''

''அவர்களுக்குமே இது நல்லதுதானே சார். நிரந்தரமாக நல்ல வருமானம் வரும்.''

''அதை அவர்களிடம் சொல்லி 'கன்வின்ஸ்' பண்ணுங்கள் மதுசூதனன். அந்தப் பெண்ணிடம் சொல்லுங்கள்; குடியானவர்களிடம் பேசுங்கள்... ஊர் முக்கியஸ்தர்களிடம் எடுத்துக் கூறுங்கள். எப்படியாவது எதிர்ப்பு இல்லாமல் சமாளிக்கப் பாருங்கள். உங்களுக்காக நானும் ஊரில் பெரியவர்களிடம் பேசலாம். ஆனால் இப்போதைக்கு நேரம் இல்லை. நாளை மறுநாள் தொடங்கி டில்லியில் ஒரு வார மீட்டிங் இருக்கிறது. அதற்குத் தேவையானவற்றைக்கூட நான் இன்னமும் தயார் பண்ணி முடிக்கவில்லை...''

குறிப்பு அறிந்து எழுந்தான் மதுசூதனன்.

''நோ... நோ. நான் அதற்காகச் சொல்லவில்லை மதுசூதனன். உட்காருங்கள். உங்களோடு பேச நேரம் இல்லை என்றால் நீங்கள் டெலிஃபோனில் கேட்டபோதே வரவேண்டாம் என்றிருப்பேனே. உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும் என்பதற்காக வரச் சொன்னேன். பாருங்கள் மிஸ்டர் மது, எப்போது எதிர்ப்பு என்று ஒன்று தோன்றிவிட்டதோ, பிறகு அது வலுப்பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கியம். இது நாலைந்து பேராகச் சிறிய அளவில் இருக்கும்போதே சரிகட்டிக் கொண்டுபோய் விடப் பாருங்கள். போராட்டம் அது இது என்று தொடங்கினார்களானால் கண்ட கண்ட அரசியல் கட்சிக்காரர்களும் உள்ளே நுழைந்து ஒன்றையும் உருப்பட விடாமல் நாறடித்து விடுவார்கள். அப்புறம் உங்களுக்கு நரை விழுகிற காலத்தில்கூட உங்கள் மில் நடக்கத் தொடங்குவது சாத்தியம் ஆகாது... பொதுவாகச் சாட்சிக்காரர்களை சமாளித்துக் கொண்டே போவதை விடச் சண்டைக் காரனை நேரில் பார்ப்பது நல்லது'' என்று எழுந்தார் மாவட்டத் தலைவர்.

''பெஸ்ட் ஆப் லக்'' என்று கை குலுக்கி அனுப்பி வைத்தார்.



மதுசூதனனுக்கும் ஓரிரு சமயம் அதே எண்ணம் தோன்றியது உண்டு. ஆனால் தானாகச் சென்றால் அவள் மேலும் விறைத்துக் கொள்ளக் கூடாதே என்று தான் தயங்கினான். பணம் மிக அதிகமாகக் கேட்பாளோ என்றும் நினைத்தான்.

ஆனால் இனியும் தயக்கம் காட்டுவது தவறு என்ற முடிவுக்கு வந்தான்.

அதே எண்ணத்தில்தான் ஒரு நாள் அவள் சைக்கிளில் முன்னே செல்லக் கண்டு, அழைத்தபடி ஜீப்பை ஓரமாக நிறுத்தினான்.

ஆனால் அவளோ அவனைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் பெடலை வேகமாக மிதித்து விரைந்து சென்று விட்டாள்.

முகத்தில் அறைந்தாற் போல இருந்தது மதுசூதனனுக்கு.

ஜீப்பில் வேகமாகச் சென்று இடித்தால் - லேசாக இடித்தால் கூட இவள் என்ன ஆவாள்?

என்னவோ, அவனுக்கும் மனம்தான் வர மறுத்தது.

மாறாக, விறைப்பாக நிமிர்ந்து அமர்ந்தபடியே அவள் வேகமாகச் சென்ற விதத்தை ரசிக்கவே அவனுக்குத் தோன்றியது.

ஒருவேளை நல்ல பாம்பு போல அழகோ?

இவ்வளவு அழகாக இருந்துகொண்டு இவளுக்கு இந்தக் கெட்ட புத்தி ஏன்?

இந்தத் தொழிற்சாலையினால் எத்தனை பேருக்கு நிரந்தரமாய் நல்ல வருமானம் கிடைக்கும்?

இதைத் தடுப்பதில் இவளுக்கு என்ன லாபம்?

அல்லது லாபத்துக்காகத்தானா?

தன் வழக்கப்படி எதிராளியைப் பற்றி விவரங்களைச் சேகரிக்கத் தொடங்கினான் மதுசூதனன்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாகச் சரக்கு எடுக்கச் சென்ற தாயுமானவரோடு இவளும் வந்தாள் என்பது தவிர அதற்கு முன்பான அவளது கதை யாருக்குமே தெரியவில்லை.

பெற்றோர், உடன் பிறந்தவர் என்று யாரும் இருப்பதாகத் தோன்றவில்லை.

ஏதேனும் விபத்தில் உற்றாரை இழந்து தவித்து நின்றவளைக் கண்டு இரங்கித் தாயுமானவர் தன்னோடு அழைத்து வந்திருக்க வேண்டும் என்று யூகித்தான் அவன்.

அவளாக யாரிடமும் வலியச் சென்று பழகுவதும் இல்லை; வந்து பழகியவர்களிடம் முகம் முறிக்கவும் இல்லை - அவனைத் தவிர.

முதியவரிடம் பணிவாக இருந்தாள்; பிள்ளைகளிடம் பரிவு காட்டினாள்; உடனொத்த பெண்களோடு தோழமை பூண்டாள்.

ஓர் இளம்பெண்ணிடம் காணப்படக் கூடிய - இம் எனுமுன் மற்றவர்களால் பூதப்படுத்தப்படுகிற ஒரு தவறை அவள் செய்யவே இல்லை.

கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுத் தேடியவர்கள் கூட அவளிடம் அந்தக் குற்றம் சுமத்த முடியவில்லை.

இளவயது ஆண்களை அவள் நிமிர்ந்து பார்ப்பதுகூட இல்லை.

ஒருவேளை அதனால்தான் தன்னோடும் பேசாமல் போனாளோ என்று ஒரு கணம் அற்ப திருப்திப்பட்டு விட்டு பிறகு அப்படியில்லை என்று ஒதுக்கினான் மதுசூதனன்.

யாராவது ஆண்கள் வம்புக்கு நெருங்கினால் அடித்து விடுவாள் என்றுகூட ஒரு கதை இருந்தது. யாருடனும் அவள் பிரியா நட்பு கொள்ளவும் இல்லை; யாரையும் அவள் விரோதித்துக் கொள்ளவும் இல்லை — அதிலும் அவனைத் தவிர.



தாயுமானவரது கடையின் அருகிலேயே இரண்டே அறைகள் கொண்ட வாடகை வீடு அவளுடையது.

கடை எட்டு மணிவரை இருந்தாலும் இவளது கணக்கு வழக்குப் பொறுப்பு நாலு மணிக்குள் முடிந்துவிடும். அங்கிருந்து நேரே கிளம்பி, தாயுமானவர் பராமரித்து வரும் நாலைந்து அனாதைப் பிள்ளைகளுக்கும் சற்று நேரம் உதவி விட்டுத் திரும்புகிறவள். அதன்பின் தன் அறைக்குள் முடங்கி விடுவாள்.

உல்லாசமாய் ஒரு சினிமா, ஆறுதலாய் ஒரு கோயில் என்று எதுவும் கிடையாது.

வந்த புதிதில் அவ்வப்போது வெளியூர் சென்று வந்தாலும் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளாக அதுவும் இல்லை.

வயதுக்குரிய உல்லாசம், கேளிக்கை என்று எதுவும் இல்லாது இறுகிக் கிடக்கும் இவளை, அதிக நஷ்டப்பட்டு விடாமல் எப்படி அணுகுவது என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் அவளது கடிதம் வந்தது அவனை வியப்படையச் செய்தது.

பணம் கேட்கச் சரியான நேரம் வந்துவிட்டது என்ற எண்ணம் போலும்.

சந்திக்க நேரம், நாள் என்று எதையும் குறிப்பிட்டுக் கூறி, தன்னைத் தயார் படுத்திக் கொள்ள விலையை ஏற்றிக் கொள்ள அவளுக்கு அவகாசம் கொடுக்க அவனுக்கு மனம் இல்லை.

அவள் வேலை முடிந்து சைக்கிளில் கிளம்பி ஊரைத் தாண்டிச் செல்லும் இடத்தில் காத்திருந்தான்.

அன்றுபோல நில்லாமல் செல்வாளோ என்று உள்ளூர ஓர் எண்ணம் ஓடியது.

ஆனால் அந்தக் கடிதத்தில் கண்டது உண்மையென்றால் நிற்பாள் என்ற உறுதியோடு ஜீப்பில் இருந்து இறங்கி நின்றான்.

பாதையின் இருபுறமும் வயல்கள்தான்.

சில இடங்களில் வாழை.

மற்றபடி நெல் முற்றி பசுமை மாறி மஞ்சள் நிறம் பாய்ந்திருந்தது.

அறுவடை முடிந்து, மீண்டும் உழுது நாற்று நடுமுன் அவன் வேலை முடிய வேண்டும்.

இந்தப் பயிர்ப் பிரதேசங்களை எல்லாம் அழிப்பது என்றால் அவனுக்கும் கொஞ்சம் உறுத்தலாகத்தான் இருந்தது. ஆனால்... தூரத்தில் கிணிங்கிய சைக்கிள் மணி அவனை வந்த காரியத்துக்குத் திருப்பியது.

கீழ்க்கண்ணால் கவனித்தான் - அளந்தான்.

தூரத்திலேயே அவனது ஜீப்பை பாரதியும் பார்த்து விட்டாள்.

தனக்காக அவன் காத்திருக்கிறான் என்பதும் உடனேயே புரிந்துவிட்டது.

இவ்வளவு விரைவில் அவனோடு பேசவேண்டும் என்று எதிர்பார்த்து இராததால் சட்டென அவள் மனது குழம்பிப் போயிற்று.

அந்த அளவில் அவனுக்கு வெற்றிதான்.

சைக்கிளின் வேகத்தை வெகுவாகக் குறைத்து வேகமாக யோசித்தாள் பாரதி.

அவனிடம் என்னென்ன சொல்லவேண்டும்? தாயுமானவரின் கதை, அனாதைப் பிள்ளைகளின் கதி, தன்... இல்லை



இல்லை. தனக்காக இரங்கும்படி யாரையும் அவள் ஒருநாளும் கெஞ்சுவதாக இல்லை. மற்றது மட்டும்தான் கூறவேண்டும்.

ஆனால் அவனை இளகவைக்க முடியுமா என்று வேறு சந்தேகமாக இருந்தது அவளுக்கு.

பண்ணைக் குடும்பம் மொத்தத்தையும் ஒன்று சேர்க்கிறவன் - ஒன்று சேர்த்துத் தன் எண்ணத்துக்கு இணங்க வைக்கிறவன் என்றால் அவன் திட்டம் போட்டு வேலை செய்யும் மகா கெட்டிக்காரனாகத்தான் இருக்க வேண்டும்.

அவள் அறிந்த வரையில் கெட்டிக்காரர்கள் எல்லாமே குரூர புத்தி உடையவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

இவனாவது இளகுவதாவது?

என்னதான் 'ஸ்லோ சைக்கிள் ரேஸ்' நடத்தினாலும் அவள் நின்ற இடம் வந்துதான் விட்டது.

ஒரு வேக மூச்சுடன் சைக்கிளை நிறுத்தி இறங்கினாள்.

சாலைக்கு முதுகு காட்டி நின்று வயற்காட்டை ரசித்துக் கொண்டு இருந்தான் அவன்.

அல்லது ரசிப்பதுபோலக் காட்டிக் கொண்டு இருந்தானோ?

சைக்கிள் மணியை அடித்துப் பார்க்க வெகுவாக ஓர் உந்துதல் தோன்றிய போதும், அவனுக்கு இந்தச் சமயத்தில் வெறுப்பேற்றக் கூடாது என்று கூறிய அறிவுக்குப் பணிந்து, ''மிஸ்டர் மதுசூதனன்'' என்று அவனை அழைத்தாள்.

சில கணங்கள் தாமதித்துவிட்டு மெல்லத் திரும்பினான் அவன்.

அவளை ஒரு தரம் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''இப்போது நானும்கூட நில்லாமல் போய்விடலாம். ஆனால் எனக்கு மட்டுமரியாதை பற்றிக் கொஞ்சம் தெரியும்'' என்றான் மப்பான குரலில்.

அவளை மட்டம் தட்டிக் குன்றிக் குழம்ப வைத்து விட்டுப் பிறகு விஷயம் பேச எண்ணியிருந்தான் அவன்.

ஆனால் அவன் எதிர்பாராத விதமாக அவளது கண்கள் பளிச்சிட்டன. இரு விரல்களால் அடிவைத்து, ''கொஞ்...ச்சம் தானா?'' என்று தன்னிச்சையாய்க் கூறி விட்டவள் சட்டென நாக்கைக் கடித்துக் கொண்டு அமைதியானாள்.

வியப்பை விழிகளில் காட்டி, ''பரவாயில்லையே!'' என்று மெச்சினான் மதுசூதனன்.

ஆனால் அந்த மெச்சுதலை ஏற்க மனமில்லாததுபோல எங்கோ பார்த்தாள் பாரதி. பிறகு திரும்பி, ''நான் உங்களிடம் பேச வேண்டி இருப்பது வேறு விஷயம்'' என்றாள் உணர்ச்சியற்ற குரலில்.

''உண்மை'' என்றான் அவனும் குரல் இறுக. ''சொல் நீ எவ்வளவு எதிர்பார்க்கிறாய்?''

''முதலில் மரியாதை கொடுத்துப் பேசுங்கள். 'நீ' யாமே'' என்றாள் பாரதி ஆத்திரத்துடன்.

''மரியாதையா? உனக்கா? உன்போலத் தெளிந்த குட்டையைக் குழப்பி மீன் பிடிக்கிறவர்களுக்கு மரியாதை வேறு தரவேண்டுமா? அது இல்லாமலே உன் விலையைச் சொல்லலாம்'' என்றான் அவன் எகத்தாளத்துடன்.

''விலையா!?'' என்றாள் பாரதி கோபமும் குழப்பமுமாக.

''ஆமாம். பணத்துக்காகத்தானே இந்த நாடகம் எல்லாம். சொல்லு. ஆனால் ஒரேயடியாக உயரப் பறக்க எண்ணாதே. ஐயாயிரத்துக்கு மேல் ஒரு பைசா தரமாட்டேன்'' என்றான் அவன் கறாராக.

''என்ன உளறுகிறீர்கள்? உங்களிடம் யார் பணம் கேட்டது? என்னைப் பொறுத்தவரையில் உங்கள் பணத்தை எல்லாம் ஒட்டு மொத்தமாகக் கட்டிக் கடலில் போடுங்கள்.



போட்டுவிட்டு அத்தோடு சேர்ந்து நீங்களும்கூட அதற்குள்ளேயே குதியுங்கள்'' என்று கொதிப்புடன் கூறித் திரும்பினாள் பாரதி.

## 3

திரும்பி, சைக்கிள் ஸ்டாண்டை நகர்த்தி சைக்கிளில் ஏற, பாரதி முயன்றபோது அவன் கரம் ஹாண்டில்பாரில் அழுந்தியிருந்தது.

''மரியாதையாகக் கையை எடுங்கள்'' என்று சீறினாள் அவள்.

''கட்டாயம். ஆனால் ஒன்று சொல்லிவிட்டுப் போகிறாயா? பணம் முக்கியம் இல்லையென்றால் வேறு எதற்காகக் கடிதம் எழுதினாய்?'' - யோசனையோடு கேட்டான் அவன்.

படபடப்பு அடங்காமல், ''உங்களுக்குக்கூட கொஞ்சமேனும் மனிதாபிமானம் இருக்கும். நியாய அநியாயம் பற்றிய பகுத்தறிவு இருக்கும் என்று தவறாக நினைத்து எழுதிவிட்டேன். ஆனால் உங்களுக்குப் பணத்தின் பேச்சு மட்டும்தான் புரியும்போல இருக்கிறது'' - கொட்டினாள் அவள்.

''மனிதாபிமானமே இல்லாமல் அப்படி என்னம்மா நான் அநியாயம் செய்துவிட்டேன்?'' என்று சற்று அளவுக்கு அதிகமாகவே வியந்தான் அவன்.

அவனது பாவனை அவளுக்கு மேலும் சினமூட்டியது. 'ஆத்திரம் அறிவின் எதிரி' என்று உள்ளூரக் கூறியபடி அதை அடக்கிக் கொண்டு, ''இந்த இடத்தில் இப்படி ஒரு தொழிற்

சாலையைத் தொடங்குவது எந்த வகையில் மனிதாபிமானம்? ஏன் மனிதத் தன்மையே எப்படி ஆகும்?'' என்று நிதானமாகக் கேட்டாள் பாரதி.

''ஏன், அதில் என்ன தவறு? கர்நாடகம் கைவிரித்தால் காய்ந்துபோகும் பூமி இது. பயிர் இல்லாவிட்டால் இந்த ஏழை மக்கள் பட்டினிதான் கிடக்க வேண்டும். அப்படி இல்லாமல் எத்தனையோ பேருக்கு நிரந்தரமான வேலை கிடைக்கும். அத்தனை பேர் வீட்டிலும் வளம் பெருகும். வீடு மட்டும் இல்லாமல் நாடும் வளம் பெறும். ஓர் ஆண்டுக்கு எத்தனை கோடி ரூபாய்க்கு வெளிநாடுகளில் இருந்து காகிதம் வாங்குகிறோம் தெரியுமா? அது குறைந்து அன்னியச் செலாவணி மிச்சமாகும். வீடு, நாடு இரண்டையும் வளப்படுத்துவதில் மனிதாபிமானம் எந்த இடத்தில் மைனஸ் ஆகிறது?'' அழுத்தம் திருத்தமாகக் கேட்டான் அவன்.

சற்றுத் திகைத்துவிட்டு, ''பெரிய பண்ணையார் பண்ணை வீடு பற்றி உங்களிடம் சொல்லவில்லை?'' என்று அவனைக்கூர்ந்து நோக்கியபடி கேட்டாள் அவள்.

''ஏன்? பண்ணை வீட்டில் பேய் நடமாடுகிறதாமா?'' - சிறு கேலி இலங்கத் தொடங்கியவன் அவளது முகம் கடுப்பதைக் காணவும், ''ஏதோ இரண்டு மூன்று பிள்ளைகளைத் தாயுமானவர் அங்கே தங்க வைத்திருக்கிறார். விரைவில் காலி செய்து தந்துவிடுவார் என்றும் கூறினார்.''

இரண்டு மூன்றா? தங்க வைத்திருக்கிறாரா?

அவளுக்கு குமுறிக் கொண்டு வந்தது.

அனாதை இல்லத்தை ஒன்றும் இல்லாதது போலக் காட்டியிருக்கிறார் பெரிய பண்ணையார். நல்ல குணம் உள்ளவர்; ஒரு தரும காரியத்துக்கு வீட்டை இலவசமாகத் தந்திருக்கிறார் என்று எண்ணினாளே, வீடு பாழடைந்து விடாமல் பராமரிப்பார்கள் என்று நினைத்துக் கொடுத்திருப்பாரோ.



ஒரு முடிவுக்கு வந்தவளாக, ''என்னோடு வர முடியுமா?'' என்று கேட்டாள்.

''சந்தோஷமாய்!'' என்று கண்ணால் சிரித்தபடி தலை தாழ்த்தினான் அவன்.

கிண்டலா என்று உள்ளூரப் புகைந்தபடி, ''பண்ணை வீட்டுக்கு'' என்றாள் அவள் சுருக்கமாக.

''எங்கே வேண்டுமானாலும்!'' என்றான் அவன் பழைய மாதிரியே.

என்ன அர்த்தத்தில் பேசுகிறான் என்று வெகுண்ட போதும் அதை வெளிப்படையாக அவளால் கேட்க முடியவில்லை.

கேட்டாலும் வெகு எளிதாகக் கண்ணியப் போர்வை போர்த்தி விடக்கூடிய வார்த்தைகள் தானே அவை.

ஆனால் இதை இலகுவாக எடுத்து அவனோடு இணைந்து நகைக்கவும் மனம் வராமல், ''பண்ணை வீடு தவிர வேறு எங்கும் உங்களை நான் அழைத்துச் செல்வதாக இல்லை. போகலாமா?'' என்று கண்டிப்பான குரலில் கூறி மீண்டும் திரும்பினாள்.

ஆனால் அவனது கை ஹாண்டில்பாரை விட்டு நகராது இருக்கவும் சினத்தை விழிகளில் காட்டியபடி அவனை அண்ணாந்து பார்த்தாள்.

அண்ணாந்துதான் நோக்க வேண்டியிருந்தது.

இவன் ஏன் இவ்வளவு உயரமாய் இருக்க வேண்டும்? கோபப் பார்வையைக்கூடச் சரியாகப் பார்க்க முடியவில்லையே என்று அதையும் பிழையாய் அவன் மீதே சாட்டி அவனது கையை முறைத்தாள்.

வெகு பணிவாகக் காட்டிக் கையை எடுத்தவன், ''என்னையும் சேர்த்துச் சுமக்க உன் சைக்கிளால் முடியுமோ என்னவோ? அதைவிட உன்னோடு உன் சைக்கிளையும்

சேர்த்து இந்த மாருதி ஜிப்சி சுமக்கட்டுமே, சைக்கிளைப் பின்புறம் போட்டுவிட்டு...'' என்று பதவிசாகச் சொல்லிக் கொண்டே போனவனை அவள் இடைமறித்தாள்.

''தேவையில்லை. பண்ணை வீடு உங்களுக்குத் தெரியும் அல்லவா? சாலை வழியே வாருங்கள்'' என்றவள் வினாடிக் குள் சைக்கிளில் ஏறிப் பறந்து விட்டாள்.

தோளில் பின் கொண்டு குத்திப் படிந்திருந்த துப்பட்டா வின் முந்தானை காற்றில் பறக்க வயல்களின் வரப்பில் அவள் லாவகமாக சைக்கிள் ஓட்டிச் செல்வதை ரசித்தபடி சற்று நேரம் நின்றான் மதுசூதனன்.

இயல்பாக வெளிப்பட்ட இந்த நவீனமும், நேரான பார்வையும் நிமிர்வும் கள்ளத்தனத்தோடு எப்படி இணைய முடியும்?

இணைந்து விடக்கூடாதே என்று தன் மனம் கவலையுறு வதை ஓர் ஆச்சரியத்தோடு உணர்ந்தவனாக ஜிப்பை எடுத் தான் அவன்.

அவனுக்காகப் பண்ணை வீட்டின் வாசலில் காத்திருந் தாள் பாரதி.

சிறு வேக மூச்சுகள் அவள் விரைந்து வந்த விதத்தை விளக்கின.

ஆனால் மேல் உதட்டின் மேலும் நெற்றியிலுமாக லேசாகப் பளபளத்த வியர்வையையும் விம்மித் தணியும் உடலையும் ரசித்துக் கொண்டு நிற்க இடமின்றி அவனை உள்ளே அழைத்துச் சென்றாள் அவள்.

ஒரு முதிர்ந்த பெண்மணியின் கைகளில் ஓர் ஆறுமாதக் குழந்தை பாரதியைக் கண்டதும், தன் இரு சிறு பற்களைக் காட்டி அவளிடம் தாவியது.

புன்னகையோடு குழந்தையை வாங்கிக் கொண்டாள் பாரதி.



இரு முக மலர்ச்சிகளும் மனதைக் குளிர்விக்க குழந் தைக்கு விளையாட்டுக் காட்டும் விதமாகக் கையை நீட்டிச் சொடக்குப் போட்ட மதுசூதனனுக்குச் சட்டென ஒரு மாதிரி யாகி முகம் சுண்டிப் போயிற்று.

குழந்தையின் அருகாக அவன் கையை நீட்டியிருந்ததை விடவும் அதிகமாக அவள் பின்னடைந்திருந்தாள்.

இந்தப் பெண் அவனை என்னவென்று எண்ணிக் கொண் டாள்?

குழந்தைக்கு விளையாட்டுக் காட்டும் பாவனையில் அவளைத் தகாத முறையில் தொட முயலும் கயவன் என்றா?

மகாப் பெரிய ரதி என்று நினைத்துக் கொண்டாளாக்கும் என்று ஆத்திரமாய் எண்ணம் ஓடுகையிலேயே 'ரதியே தானே' என்றும் அவனது ரசிக மனம் கூறியது.

அதை அடக்கியபடி கோபமாகவே அவள் முகத்தைப் பார்த்தவனுக்கு இப்போது திகைப்பு உண்டாயிற்று.

அவனது கை நீண்டதையும் தான் பின்னடைந்ததையும் உணரக்கூட இல்லாததுபோல இயல்பாக அங்கே தொட்டி லில் கிடந்த சிசுவைக் காட்டி ஏதோ சொல்லிக் கொண்டு இருந்தாள் அவள்.

அப்படியானால் அவனை அயோக்கியன் என்று முடிவு கட்டி அவள் பின் நகரவில்லை.

ஓர் ஆணின் கரம் நெருங்கியதும் அனிச்சை செயலாக அவளது உடல் பின்னடைந்து இருக்கிறது.

சைக்கிளின் ஹாண்டில் பாரைப் பிடித்தபோது அவள் சினம் கொண்டதையும் நினைவு கூர்ந்தான்.

ஏனோ மனம் லேசாகிவிட அவளது பேச்சைக் கவனித் தான்.

''... இரண்டு மாதக் குழந்தையாக ஆசிரமப் படியில் கிடந்த இந்த ப்ரீதிதான் கடைசியாக இங்கு வந்து சேர்ந்த மனிதப் பிறவி. இப்படி வாருங்கள். மற்றவர்களையும் பார்க்கலாம்...'' என்று திரும்பிப் பின்புறமாக அவனை அழைத்துச் சென்றாள் பாரதி.

வீட்டின் பின்புறமாகப் பல சிறுவர்கள் பந்து விளையாடிக் கொண்டு இருந்தனர்.

கொஞ்சம் பெரியவர்கள் நெட்பால் ஒரு பக்கம் ஆடினார்கள்.

இவர்களை - முக்கியமாக பாரதியைக் கண்டதும், ''அக்கா, காட்ச்'' என்று பந்தை வீசினான் ஒரு சிறுவன்.

''நீங்கள் ரெஃப்ரியாக வாங்கள் அக்கா. இந்த மாரிக்கு ரூல்சே தெரியவில்லை'' என்று புகாரும் வந்தது.

முறுவல் செய்தபடியே ''உங்களுக்குத் தெரியும் இல்லையா? அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள்'' என்றாள் பாரதி.

கொஞ்சம் சிரியசான ஒரு சிறுமி அருகில் வந்து ''அக்கா, டீச்சர் நேற்று சொல்லித் தந்த கணக்கு எனக்கு விடை சரியாக வரவே மாட்டேன் என்கிறது. சொல்லித் தர்றீங்களா?'' என்றாள் கெஞ்சுதலாக.

''நாளைக்கு டீச்சரிடம் இன்னொரு தரம் கேள். அப்போதும் தெரியவில்லையானால் பிறகு நான் பார்க்கிறேன்'' என்று அனுப்பி வைத்துவிட்டு மாரியை அழைத்து, ''மாரி, இவளைக் கொஞ்ச நேரம் காற்றில் வைத்திருந்துவிட்டு உள்ளே கொண்டு போ'' என்று கையில் இருந்த குழந்தையை அவனிடம் கொடுத்தாள்.

அப்போதும் அவள் மாரியிடம் குழந்தையைக் கொடுத்த விதம் மதுசூதனனுடைய கருத்தில் பதிந்தது.



தன்னுடைய ஒருவிரல்கூட அவனோடு உராய்ந்து விடாதபடி குழந்தையின் தோள்புறமாய்ப் பற்றி அவன் கையில் வைத்தாள் அவள்.

இப்போதும் அவள் வேண்டுமென்று கவனம் காட்டி இதைச் செய்ததாகத் தெரியவில்லை. இயல்பாகவே ஓர் ஒதுக்கம் அவளிடம் இருந்தது.

கிராமப்புறத்து ஒதுக்கம், இரண்டுதரம் மெட்ராஸ பஸ்சில் சென்று வந்தால் மாறிப்போய் விடும் என்று நினைக்கையிலேயே ஒரு முரண்பாடும் தோன்றியது.

இவளது நிமிர்ந்த நடையும், சுரிதாரும் 'கிராமமற்ற நங்கை'க்கு ஒத்துப்போகவில்லை.

ஒருவேளை ஆண்வாடையே அறியாமல் அல்லி சாம்ராஜ்யத்தில் வளர்ந்திருப்பாள் போலும் என்று உள்ளூரச் சிரித்துக் கொண்டான் அவன்.

''எண்ணிப் பார்த்தீர்களா? அந்தச் சின்னக் குழந்தைகளோடு சேர்த்து மொத்தம் இருபது பேர் — இனி இந்தப் பக்கம் வாருங்கள்'' என்று அழைத்துச் சென்றாள்.

சமையல் அறையில் சாதம் கொதித்துக் கொண்டு இருந்தது. ரசம் பொரியலுக்காக காய்களை நறுக்கிக் கொண்டு இருந்தாள் ஒரு மூதாட்டி.

பாரதியைக் கண்டதும், ''காய்கறிக் கணக்கு உன் மேசை மேலே வைத்திருக்கேனேம்மா'' என்றாள்.

''அதற்காக வரவில்லை பாட்டி. இவருக்கு நம் ஆசிரமத்தைக் காட்ட வந்தேன்'' என்று சமாதானம் கூறி விட்டு வெளியேறினார்கள்.

''ரசம் வாசனையாக இருக்கிறது, பாட்டி'' என்று தன் பங்குக்கு ஒரு ஐஸ் வைத்துவிட்டு யோசனையோடு பாரதியைப் பின்தொடர்ந்தான் மதுசூதனன்.

ஒரு பாய், போர்வை, தலையணை என்று எளிய படுக்கைகளைக் கொண்ட படுக்கை அறையைக் காட்டினாள்.

கடைசியாக அவளிடம் கேட்டான். ''எவ்வளவோ எளிமையாத்தான் தாயுமானவர் அங்கிள் இந்த இல்லத்தை நடத்துகிறார். ஆனாலும் இதைப் பார்த்தால் 'ஏதோ இரண்டு அனாதைப் பிள்ளைகளைத் தங்க வைத்து இருக்கிற மாதிரியா உங்களுக்குத் தோன்றுகிறது? இதையா நினைத்த மாத்திரத்தில் காலி செய்து தந்துவிட வேண்டும் என்கிறீர்கள்?''

அவளது கேள்விக்குப் பதில் கூறாமல் அவன் வேறு பேசினான்.

''என்னதான் குறைவாகக் கணக்குப் போட்டாலும் ஒரு குழந்தைக்கு உணவுக்கு மட்டுமே ஒரு நாளைக்கு எப்படியும் ஏழு ரூபாய் ஆகும். உடை, படிப்பு, மற்ற ஆட்கள் சம்பளம் என்று எப்படியும் மாதம் ஐயாயிரத்துக்கு மேலேயே ஆகும். தாயுமானவரின் அந்த நடுத்தரக் கடையின் வருமானம் இதைத் தாங்குமா?''

''அது மட்டும் அல்ல. ஊரில் நில வருமானத்தையும் அங்கிள் இதில்தான் செலவு செய்கிறார். கொஞ்சம் கவுரமான பிச்சை வேறு. என்ன கஷ்டப்பட்டாலும் இந்த இல்லத்தை விடாமல் நன்றாக நடத்திவர வேண்டும் என்ற ஒரே ஒரு லட்சியம்தான் அவருக்கு. இதற்காகவே உயிர் வாழ்கிறார் என்றுகூடச் சொல்லலாம். இது கலைந்து போனால் அவரது மனமும் ஒடிந்து போகும்.''

இதற்கு மேல் இவன் மனதில் படும்படியாக எப்படிச் சொல்வது?

''ஏனோ? அவருக்கு ஒரு பிள்ளை இருப்பதாகக் கேள்விப்பட்டேனே. சொந்தப் பிள்ளையை விட்டு விட்டு மனம் ஒடிகிற அளவுக்கு இந்தப் பிள்ளைகளிடம் அவருக்கு என்ன ஈடுபாடு?''



இந்த அன்னியனிடம் எந்த அளவுக்குத் தாயுமானவரின் சொந்த விஷயம் பற்றிப் பேசுவது என்று பாரதி சற்றுத் தயங்கினாள்.

ஆனால் அவரது விஷயம் ரகசியம் என்று இல்லை.

அத்தோடு, பட்டும்படாமலும் பேசும் இவன் மனதை அவருக்காகவே கரைக்க வேண்டியிருந்தது.

ஒரு பெருமூச்சுடன் தாயுமானவருடைய மகனைப் பற்றிச் சொன்னாள்.

''அத்தோடு இந்த அனாதைப் பிள்ளைகளைப் பற்றி எண்ணிப் பாருங்கள் மிஸ்டர். ஏதோ தங்க நிழலும், உண்ண உணவும், கல்வியுமாக நல்லபடியாகப் பிழைத்துப் போவார்கள். இவர்களை மீண்டும் நடுத் தெருவுக்குக் கொணர்ந்து நாசப்படுத்துவதா? அது கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவு எதிர்ப்பும்.''

''ம்ம். பண்ணைக் குடும்பத்துப் பெண்களைக் குத்திக் கிளப்புவது, பஞ்சாயத்துச் சேர்மனைப் பயமுறுத்துவது, குடியானவர்களைத் தூண்டிவிடுவது...''

சற்றே கன்னங்கள் சிவந்தபோதும் பார்வை தளராமல் அவனது விழிகளைச் சந்தித்தாள் பாரதி.

''தாயுமானவர்... இந்தப் பிள்ளைகள்... அடுத்து உன் விஷயம்?''

சட்டென முகம் வெளுக்க, ''என்ன என் விஷயம்?'' என்று லேசான படபடப்புடன் வினவினாள் பாரதி.

''அதுதான், இந்தப் பண்ணை விட்டு விவகாரம் உன்னையும் ஒருவகையில் பாதிக்கிறதோ என்று எனக்குத் தோன்றுகிறது. மற்றபடி நீ இந்த அளவுக்கு முனைவானேன்?''

தலையை நிமிர்த்தி, ''கொஞ்சமேனும் இரக்கம் இருக்குமானால் உங்கள் திட்டத்தைக் கைவிட இந்த இரு காரணங்

களே போதுமானவை. என்னைப் பற்றிய விவரம் உங்களுக்கு அனாவசியம்'' என்றாள் அவள் சற்று எடுப்பாகவே.

கணநேர அமைதிக்குப் பிறகு, ''ஐயாம் சாரி'' என்றான் மதுசூதனன் மெதுவாக.

ஆச்சரியத்துடன் அவன் முகத்தைப் பார்த்த பாரதிக்கு இவன் யாரிடமும் மன்னிப்பை வேண்டிப் பழக்கம் இல்லாத வன் என்று தோன்றியது.

உடனேயே, அவன் சற்றே நிலைகுலைந்து நிற்கும் சமயத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்தாள்.

''மெய்யாகவே வருந்துவதானால் அதைச் செயலில் காட்டுங்களேன்'' என்றாள் அவசரமாக.

''எப்படியோ?'' என்று அவன் கேட்ட விதத்திலேயே அவள் சுதாரித்துக் கொண்டது புரிந்தது.

ஆனாலும் விடாமல் வந்தவழியே திருப்பிப் போவது என்று சொல்லும்போதே வாலைச் சுருட்டிக் கொண்டு என்று தொடர் மனதில் தோன்றி அவளுக்குள் சிரிப்பூட்டியது.

அதை ஊகித்தவன்போல அவனது விழிகள் பளபளத் தது. ''ஆ! மிகவும் கடினமாயிற்றே. முன்வைத்த காலைப் பின் வைப்பது எங்கள் பரம்பரைக்கே வழக்கமில்லையே'' என்றான் வெகு சாதாரணமாக.

கேலி போல இலகுவாகப் பேசியபோதும் அவன் இளகுவதாக இல்லை என்பது பாரதிக்குத் தெளிவாகப் புரிபட அவளது முகம் வாடிப் போயிற்று.

நெஞ்சின்மேல் பாறாங்கல் ஒன்று ஏறி அமர்ந்தது. இனி என்ன செய்ய முடியும்?



## 4

செய்வதற்கு ஒன்றும் இல்லை என்பது நன்றாகவே பாரதிக்குப் புரிந்தது.

இவனிடம் என்ன சொன்னாலும் பாறையில் முட்டுவது போலப் பயன் ஒன்றும் இல்லையே.

செய்கையற்றுப் போன கையாலாகாத்தனம் அவன் மேல் ஆத்திரமாய் மாற நிமிர்ந்து, ''உங்களுடைய சுயலாபத் துக்கு முன் எத்தனை பேர் அழிந்தாலும் உங்களுக்கு ஒன்றும் இல்லையல்லவா? சரியான சுயநலம்...'' என்று குமுறிக் கொண்டே போனவளைக் கையை உயர்த்தித் தடுத்தான் அவன்.

''சொந்த லாபம் மட்டும் அல்ல என்று முன்பு சொல்ல வில்லையா?''

''ஆமாமாம். பிரமாதமாய் அளந்தீர்களே, நாட்டு வளம், தொழிலாளர் வருமானம் என்று'' என்று ஏளனம் பேசினாள் பாரதி.

பொறுமை இழந்தவனாய் அவனும் வேகமாகவே உரைத்தான். '' நீ ஒத்துக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் இது நாட்டுக்கு வளம் தருவதுதான். இதன் முதல் கட்ட மதிப்பீடு என்ன தெரியுமா? முப்பத்து மூன்று லட்சம். அடுத்த கட்டமே மூன்று கோடி. விரைவிலேயே முப்பது கோடி பெறுமானத்துக்குக் கொண்டு வரவும் திட்டமிட்டு இருக்கிறேன். அப்போது எத்தனை பேருக்கு வேலை கிடைக் கும் தெரியுமா? இது ஒரு சின்ன நகரமாகவே மாறிவிடும்.''

''அத்தோடு லாபமாகச் சொந்தக் கணக்கில் மட்டான பணமா ஏறும்? அத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது கேவலம் இருபது சின்னப் பிள்ளைகள், ஒரு முதியவர்

இவர்களுடைய எதிர்காலம் நாசமாவது என்ன பெரிய விஷயமா? வெறும் சுண்டைக்காய்!'' என்றாள் அவள் ஏகத்தளமாக.

அவனும் முகம் சிவக்க, ''அழிந்துதானே தீர வேண்டும் என்று என்ன விதி? இந்த வீட்டை விட்டு வெளியேறினால் அவர்கள் எல்லோரும் செத்துவிடுவார்கள் என்று சாபமா? வேறு இடத்திற்கு இல்லத்தை மாற்றுவதுதானே'' என்றான் கிண்டலும் கோபமுமாக.

''பணக்காரத் திமிர் பேசுகிறதாக்கும்''

ஓர் அன்னியனிடம் அளவு மீறிப் பேசுகிறோம் என்பது புரிந்தபோதும் அடக்கிக் கொள்ளத் தோன்றவில்லை அவளுக்கு. காரணகாரியம் காட்டி உள்ள நிலையைச் சொல்லி, எவ்வளவு உருக்கமாய்க் கெஞ்சியும் பயனற்றுப் போனதில் அவள் கொதித்துப் போயிருந்தாள்.

''இந்த சிறுவர்களை இன்னொரு இடத்தில் வைத்துப் பராமரிக்கலாம் என்று யோசனை கூறுவதில் பணத்திமிர் எங்கே வந்து குதித்ததாம்?'' என்று பதிலுக்குக் கேட்டான் அவன்.

''இப்போது பார்த்தீர்கள் இல்லையா? சாப்பாடு ரசமும் சாதமும், அப்படியும் பாதிச் செலவுக்குப் பிச்சை எடுக்கிறோம் என்றேனே. இருபது பிள்ளைகள் தங்கும் அளவு இடம் பிடித்து வாடகை கொடுப்பது எங்களால் முடியுமா என்று யோசிக்கக்கூட உங்களுக்குத் தோன்றவில்லையே! செயலைப்பற்றிக் கவலையே இல்லாமல் நினைத்ததை நடத்தி வந்த பணக்காரப் பழக்கம் தானே?''

அவளது கடைசி வாக்கியத்தை கவனியாதவன்போல, ''வாடகைக்கு எடுப்பானேன்? புதிதாகக் கட்டிக் கொள்வது. வெகு இலகுவாகச் சொன்னான், சினவெடிப்பு படர்ந்த அவளது முகத்தில் பார்வையைப் பதித்தபடியே.

எல்லை மீறிய சினத்தில் கைநீட்டி விடுவோமே என்று கைகளை இறுக மூடிக் கொண்டாள் பாரதி.



திரும்பி நின்று இறுகிய குரலால், ''தயவு செய்து உடனே இந்த இடத்தை விட்டுப் போய்விடுங்கள். ப்ளீஸ் கெட் அவுட்'' என்றாள்.

அவனுக்கு எல்லாம் வேடிக்கையாகவே தோன்றியதோ?

''கட்டாயம் — கட்டாயமாய்ப் போய் விட வேண்டுமா? பின்னே, இந்தப் பிள்ளைகளுக்காக இதைவிட வசதியாக ஒரு கட்டிடம் கட்டித் தரும் என் உத்தேசத்தைக் கூடக் கைவிட்டுவிட வேண்டுமா?'' என்று வருத்தம் காட்டி வினவினான்.

பிரமித்துப் போனாள் பாரதி, ''எ... என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று வாயைப் பிளந்தாள்.

ஆவலும், எல்லாம் கேலிப் புரட்டு என்று முடித்துவிடுவானோ என்ற பயமும், நம்பிக்கையும் உடனேயே அவநம்பிக்கையுமாகப் போட்டிப் போட்டுக் கொண்டு அவள் முகத்தில் வர்ண ஜாலம் காட்டின.

''இந்தப் பழைய வீட்டுக்குப் பதிலாக வேறு கட்டித் தருகிறேன் என்றேன்'' என்றான் அவன் நமுட்டுச் சிரிப்புடன்.

இன்னமும் அவளுக்கு முழுநம்பிக்கை பிறக்கவில்லை ''எ... எப்படி?'' என்று தடுமாறினாள்.

'' எப்படி என்றால்? எல்லாம் செங்கல், சிமெண்ட், மணல் வைத்ததுதான். அல்லது என்னால் முடியுமா என்று கேட்கிறாயா நான்தான் பணம் படைத்தவன். அதிலும் செலவைப்பற்றி யோசிக்கக்கூடத் தோன்றாத பணத்திமிர் பிடித்தவன் ஆயிற்றே'' என்று கேலி போல மட்டம் தட்டினான் மதுசூதனன்.

அவளுக்கு முகம் கன்றிச் சிவந்து போயிற்று.

தலைகுனிந்து நின்றவள் ஒரு பெரிய மூச்செடுத்து ''அப்போது ஆத்திரத்தில் ஏதேதோ கூறிவிட்டேன், சா... மிஸ்டர்..'' என்று தடுமாறினாள்.

''என் நண்பர்கள் என்னை வெறுமனே 'மது' என்று அழைப்பார்கள்'' என்றான் அவன் புன்னகையோடு.

அந்தத் தோழமையை ஏற்க மனம் வரவில்லை அவ ளுக்கு. ஆனால் இவ்வளவு பெரிய உதவி செய்கிறவனிடம் தட்டிப்பேசவும் மனம் வராமல், ''வந்து... என்னை மன் னித்து விடுங்கள்'' என்றாள் தாழ்ந்த குரலில்.

உடனேயே ஒரு சந்தேகம் உலுக்க, ''கட்டிடம் கட்டுவதா னால் எவ்வளவு ஆகும் என்று உங்களுக்குத் தெரியும் இல்லையா'' என்று கொஞ்சம் பயத்துடனேயே வினவினாள்.

அவள் கேட்ட பாவனையில் அவன் வாய்விட்டுச் சிரித்துவிட்டான். பிறகு, ''உன்னை விடவும் மிக நன்றாகவே தெரியும். வெறும் சிமிண்ட் தளம் போட்டு, இடைத் தடுப்புக ளுக்குப் 'பிளைவுட்' வைத்துக் கட்டினாலும்கூட இந்த அளவில் கட்டக் குறைந்தது ஒரு லட்சம் ரூபாய் செல வாகும்'' என்று அவன் கூறவும் அவள் மீண்டும் பிரமித்தாள்.

''அவ்...வ்வளவு ஆகுமா!''

இவ்வளவு பணத்தைத் தனக்குப் பயன்தராத ஒரு விஷ யத்துக்காக எப்படிச் செலவு செய்வான் என்ற திகைப்பும் உண்டாயிற்று.

அவன் காரணத்தைச் சொன்னான்.

''ஒரு லட்சம் சற்றுப் பெரிய தொகைதான். ஆனால் இந்தப் பிள்ளைகள் — உன் அருமைத் தம்பி தங்கைகளுக்கு ஏதாவது ஒரு வழி செய்து தராவிட்டால் நீ ஒன்றில்லாவிட் டால் மற்றொன்று என்று ஏதாவது ஒரு பூதத்தைக் கிளப்பி விட்டுக் கொண்டே இருப்பாய், ஏதோ ஒரு நாள் கடைசியாக வெற்றி எனக்குத்தான் என்றாலும் என் வேலை தாமதப்பட் டுப் போகும். மிஷினுக்காக, கட்டிடம் கட்டுவதற்காக, நிலத்துக்காக என்று எவ்வளவு பணம் கட்டியிருக்கிறேன் தெரியுமா? வேலை நடந்தால் தானே பிரயோசனம்?'' என்று விளக்கியவன் தொடர்ந்தான்.



''அத்தோடு புண்ணியம் வேறு டன்டன்னாக லாபம் வரும்'' என்று சீரியசாகவே சொல்லி, அவளது விழிகள் விரியவும் வரிசைப் பல் தெரிய நகைத்தான்.

தன்னை அறியாமல் கூடச் சேர்ந்து சிரித்தாள் பாரதியும். உடனே அமைதியாகி, ''ஆக எல்லாம் லாப நஷ்டக் கணக்குத் தான். இல்லையா?'' என்றாள் சிறு ஏமாற்றத்துடன்.

''லாப நஷ்டம் பார்க்கவில்லை என்றால் உலகத்தில் ஒரு முன்னேற்றமும் ஏற்படாது'' என்றான் அவன் கடைசி வார்த் தையை விடாமல்.

அதன் பிறகு மதுசூதனன் பாரதியை அடிக்கடி சந்தித் தான்.

பிள்ளைகளுக்கான இல்லம் பற்றி வெகுவாக விவாதித் தார்கள்.

பிள்ளைகளுடைய தேவையைப் பற்றித் தாயுமானவரிட மும், பாரதியிடமும் திரும்பத் திரும்பக் கேட்டு அறிந்து கொண்டான்.

ஒருநாள், ஒரு தானப் பத்திரத்துடன் தாயுமானவரிடம் வந்தான்.

பண்ணை வீட்டைக் காலி செய்து விடுவதாக எழுதி ஸ்டாம்பில் கையெழுத்து வாங்கிக் கொண்டு பத்திரத்தைக் கொடுத்து விடைபெற்றான்.

பின்னோடு வந்து, ''அங்கிள் ஒன்றும் சொன்ன பேச்சு மாறுகிறவர் இல்லை தெரியுமா?'' — எரிச்சலாக மொழிந் தாள் பாரதி.

''அவர் உத்தமர் என்று எனக்கு நன்றாகத் தெரியுமே'' என்றான் மதுசூதனன்.

''பின் ஏன்...'' என்று தொடங்கியவளை இடைமறித்து, ''நீ மாற வைத்து விடுவாயோ என்று ஒரே ஒரு பயம்தான்'' என்று அஞ்சியவனைப் போலப் பேசி முடித்தான்.

''நா...ன் ஒன்...'' என்று ஆத்திரத்துடன் தொடங்கிய பாரதி அவன் கண்களில் சிரிப்பைக் கண்டதும் நிறுத்தி ''ஏன் இப்படியெல்லாம் சீண்டிப் பேசவேண்டும்'' என்றாள் மிடுக்காக.

''என்ன செய்வது? நீ கோபப்படும் போது பார்க்க மிகவும் அழகாக இருக்கிறதே...'' என்று பெரிதாகக் காரணம் சொன்னான் அவன்.

சட்டென அவள் முகம் இறுகிப் போயிற்று.

கவனியாதவன் போல அவன் தொடர்ந்தான். ''கூடவே நானும் ஒரு பத்திரம் கொடுத்து இருப்பதைப் பார்க்கவில்லையா பாரதி? மூன்று மாதத்திற்குள்ளாக நல்லதாக ஆசிரமம் ஒன்று கட்டித் தரவில்லை என்றால் என்னுடைய மில் வேலையைத் தடுத்து நிறுத்தும் உரிமையை நான் தாயுமானவருக்கு அளித்திருக்கிறேன். ஏன் தெரியுமா? பக்காவாகக் கட்டிடம் கட்டுமுன் இப்போதைக்கு இல்லத்துப் பிள்ளைகளை ஓலைக் குடிசைகளுக்கு மாற்றப் போகிறேன். பிறகு இல்லத்துக்கான கட்டிடத்தையும் ஆலைக் கட்டிடத்துக்கான வேலையையும் ஒன்றாகவே தொடங்குவதாக இருக்கிறேன். ஆனால், அதற்குள்ளாக, வெறும் ஓலைக் குடிசையைத் தந்து ஏமாற்றிவிட்டான் என்று யாரும், தாயுமானவர் எண்ணமாட்டார்தான் — ஆனால் நினைக்க கூடும் இல்லையா? அதனால் தான். இந்தப் பத்திரங்களும் கையெழுத்துகளும்'' என்று விளக்கி முடித்தான்.

தான் அப்படி எண்ணக் கூடும் என்றே பாரதிக்கும் தோன்றியது. ஆனால் அவனது விளக்கத்தின் பின் அது மாதிரிக் கவனமே சின்னபுத்தியாகத் தோன்றிவிட மெல்லிய குரல், ''சாரி'' என்று முணுமுணுத்தாள்.

''வருத்தப்பட ஒன்றுமில்லை பாரதி. பாச விஷயத்தில் கொடுப்பதோ, எடுப்பதோ எப்படியும் இருந்து கொள்ளலாம். ஆனால் பண விஷயத்தில் கறாராக இருப்பதுதான் நல்லது.... இன்று மாலை உன் பிள்ளைகளின் — ஐ மீன் உன் ஆசிரமப் பிள்ளைகளின் குடிசைகளைப் பார்க்க வருகிறாயா?'' என்று பேச்சை மாற்றினான் அவன்.



அந்தக் குடிசைகளைப் பார்க்கையில் அவைகளை ஓலைக் குடிசைகள் என்று சொல்வதே அநியாயமாகப்பட்டது பாரதிக்கு.

மின் விளக்கு வசதி தவிரப் பழங்காலப் பர்ணசாலைகள் இப்படித்தான் இருந்திருக்குமோ என்று எண்ணினாள்.

காற்றுக்கும் வெளிச்சத்துக்குமாக அகலமான மூங்கில் தட்டி ஜன்னல்களுடன், உண்ண, உறங்க, படிக்க என்று விசாலமாய் அந்தக் குடில்கள் அமைக்கப்பட்டிருந்தன.

சின்ன ஜன்னல்களும் பெரிய கற்சுவர்களுமாய் இருந்த பண்ணை வீடு மாறி இந்தப் பர்ணசாலை வாசம் பிள்ளைகளுக்கும் பிடித்துப் போயிற்று.

ஆனால் சிறுவர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுத்த ஆசிரியருக்கும், பாரதிக்கும் தான் சற்று அதிகத் தூரம் சென்று வர வேண்டியிருந்தது.

ஆசிரியர் பஸ் பிரயாணி. இரண்டு ஸ்டாப்பில் தள்ளி இறங்கி ஏறினார்.

பாரதியும் சைக்கிளில் சற்று அதிக தூரம் செல்லச் சளைக்கவில்லை.

பிள்ளைகளுக்கான கட்டிட வேலையும் விரைவாகவே நடந்தது.

காகித ஆலையைக் கட்டவந்த இன்ஜினீயரே இதன் பொறுப்பையும் ஏற்றார்.

ஆழத்தோண்டி உறுதியாகப் போடப்பட்ட காங்க்ரீட் அஸ்திவாரத்தைப் பார்க்கையில் பாரதிக்குப் பெருமையாக இருந்தது.

பெரிய குளம்தான் தோண்டுகிறார்களோ எனும்படியாக மில் கட்டிடத்தின் அஸ்திவாரத்துக்காகத் தோண்டியிருந்த விதம் அவளை ஆச்சரியப்பட வைத்தது.

ஓய்வு கிடைக்கையில் இவை அனைத்தையுமே அவள் சென்று பார்ப்பது உண்டு.

பல சமயங்களில் கறுப்புக் கண்ணாடியும் காட்டன் டீ ஷர்ட்டுமாகக் கூடவே இருந்து வேலையைக் கவனித்த மதுசூதனனையும் சந்திக்க நேர்ந்ததுண்டு.

கேலியும் சிரிப்புமாகப் பணியாட்களிடம் அவன் வேலை வாங்கிய விதம் அவளது ரசனைக்குரிய ஒன்று.

குடிலுக்குச் சென்று திரும்புகையில்கூட அவ்வப்போது வழியில் அவனைப் பார்க்க நேருவதும் நடப்பே.

சில சமயங்களில் அவளது சைக்கிளைத் தூக்கி ஜீப்பின் பின்புறம் போட்டுக் கொண்டு அவளை அவளது வீட்டில் கொணர்ந்து விட்டுவிட்டுப் போவான்.

சற்று நேரம் பேசிவிட்டு வேறு வழி செல்வதும் உண்டு.

''எப்போதும் சுரிதாரே அணிகிறாயே, சேலை உனக்கு இன்னமும் அழகாய் இராதா?'' என்று ஒருதரம் இயல்பாகக் கேட்டான் அவன்.

வடகம் பிடிக்குமா சிப்ஸ் ருசியா என்பது போல வெகு சாதாரணமாய்.

ஆனால், ''எனக்குப் பிடித்ததை நான் அணிகிறேன்'' என்றாள் அவள் வெட்டென.

வியந்த பார்வை ஒன்றை அவள்புறம் செலுத்திவிட்டு, ''அதாவது என் விஷயத்தில் தலையிட நீ யார் என்கிறாயாக் கும்?'' என்றான் அவன் குரல் மாறாமலே.

பதில் பேசாமல் சற்று தூரம் நடந்துவிட்டு, ''எனக்குச் சுரிதார்தான் வ...வசதி'' என்றாள் அவள் தாழ்ந்த குரலில்.



அவன் தன் வெண்ணிறப் பல்வரிசையை அழகாகக் காட்டிவிட்டு, ''எனக்குக் காட்டன் டீ ஷர்ட் தான் பிடிக்கும்... வசதியும் கூட'' என்று மேலே பேசினான்.

ஆனால் இரவின் தனிமையில் யோசிக்கும் போது, அவளது உடையைப் பற்றி வெகு சாதாரணமாக அவன் பேசுகிறான் என்றால் அவனுக்குச் சற்று அதிக இடம் கொடுத்து விட்டாற்போல உணர்ந்தாள் பாரதி.

அதை ஈடுகட்டுவது போல நாலைந்து நாட்கள் கட்டிட வேலை நடக்கும் இடத்தின் பக்கமே போகவில்லை.

ஆனால், ஐந்தாம் நாள், ஊரில் இருந்து வந்ததாகச் சொல்லி இல்லத்துச் சிறுவர்களுக்காக இரண்டு கூடை மாம்பழங்களுடன் வந்த மதுசூதனன் அவளது ஒதுக்கத்தைக் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை.

அவ்வப்போது இதுபோல உண்டி வகைகள் மதுசூதன னிடமிருந்து இல்லத்துப் பிள்ளைகளுக்கு வருவதும் வழக்க மாகி விட்ட விஷயம்தான். அவர்களது பற்றாக்குறையை உணர்ந்து தனது தர்மத்தைச் சொல்லாமலே அவன் செய்கி றான் என்று பாரதி ஊகித்திருந்தாள்.

வழக்கமான கலகலப்புடன் சமையல்காரப் பாட்டியிடம் கூடச் சிரித்துப் பேசிய அவனைத் தவறாக எண்ணியதற்காகத் தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

தன் இறுக்கம் தளர்ந்து பழையபடி பழகவும் தொடங்கி னாள்.

மற்றொரு சமயம், ''நேரம் அதிகமாக ஆகிவிட்டால் மாரி வந்ததும் அவனை அழைத்துக் கொண்டு திரும்பலாமே பாரதி. இருளில் தனியாக ஏன் வரவேண்டும்?'' என்று இதமாகச் சொன்னான் அவன்.

''ஏனோ?''

''தனியாக வரப் பயமாக இல்லையா?''

''பயமா? எனக்கா?'' என்றாள் அவள் அலட்சியமாக.

''அதுதானே, உனக்கு ஏன் பயம்?'' என்று ஒப்புவது போலக் கூறிவிட்டு அவளுக்குக் கால் இருக்கிறதா என்று குனிந்து பார்த்தான் மதுசூதனன்.

அவளுக்குச் சிரிப்பு பீறிட்டது, சிரித்து முடித்ததும் ''இவ்வளவு பயப்படுகிற நீங்கள் இந்த நேரத்தில் தனியாக இங்கே எப்படி...?'' என்று கேலியாக வினவினாள்.

ஒருகணம் தயங்கிவிட்டு, ''சும்மா வாக்கிங் வந்தேன்'' என்றான் அவன்.

எப்படியோ இனிமையாகக் காலம் கழிந்து வந்த சமயத்தில் ஒரு சம்பவம் நடந்தது.

## 5

அன்று ஆசிரமத்தில் குழந்தை சுசி வெகுவாக அழுதுவிட்டாள்.

புதிதாக ஒரு பல் முளைப்பதற்காக ஈறு வீங்கியிருந்தது.

அதனால் வந்த காய்ச்சலும் வலியுமாக ஒரே அழுகை.

ஒரு கால் ஆஸ்பிரினைக் கொடுத்து தோளில் போட்டுக் கொண்டு நடந்து ஒருவாறு அவளைத் தூங்க வைத்துவிட்டு வெளியே வரும்போது சூரியன் மறைந்து இருள் பரவத் தொடங்கியிருந்தது.

இந்த மாதிரி நேரங்களில் இங்கும் அங்கும் அலைவதை விட, இல்லத்துக் கட்டிடம் முடிவடைந்தபின் இங்கேயே



ஒரு குடிசையில் தங்கிக் கொண்டு விட்டால் நல்லதோ என்று தோன்றியது அவளுக்கு.

சொல்லப் போனால் கடையில் அவளுக்கு அதிக வேலை கிடையாது.

வரவு செலவுக் கணக்கோடு, யாரேனும் உண்ணப் போகிறபோது, ஏதேனும் காரியமாய் வெளியே செல்லுகிற போது அவரது வேலையைப் பார்க்க வேண்டும். இல்லாத சாமானுக்கு இன்டென்ட் எடுத்து 'டெலிவரி' ஆகிற சாமான் கணக்குப் பார்த்து... இப்படித்தான். அதிலும் முக்கியமான கணக்கு வழக்குகளை மாலை நாலு மணியோடு முடித்து விட்டு அதன்மேல் வருகிறவற்றை மறுநாள் கணக்கில் சேர்த்துக் கொள்வதுதான் தாயுமானவரின் கடையில் பழக்கம்.

எனவே நாலு மணியோடு அங்குள்ள வேலைகளை முடித்துவிட்டு இங்கேயே தங்கிவிட்டால்...

எண்ணமிடுகையிலேயே ஒன்று மனதில் உறுத்தியது.

அந்த மாதிரி இங்கேயே தங்கிவிட்டால் இந்த அளவுக்கு மதுசூதனனைச் சந்திக்க முடியாதே... ஆனால் அந்த ஆளை நான் ஏன் பார்க்க வேண்டும், என்று ஒரு திடுக்கிடலுடன் எண்ணினாள்.

அவனைப் பாராது இருப்பது ஓர் இழப்பு என்று ஏன் தோன்ற வேண்டும் என்று சிறு கோபத்துடன் யோசிக்கையிலேயே காரணமும் தெரிந்துவிட்டது.

மதுசூதனனை அடிக்கடி சந்தித்தால்தானே கட்டிடத்தைப் பற்றிப் பேசி சீக்கிரமாக முடிக்கச் சொல்ல முடியும்? மற்றபடி அவனைப் பற்றி அவளுக்கு என்ன... என்று ஓடிய எண்ணத் தொடரின் ஊடே, ''அய்யோ, என்னை விடு'' என்று பதறிய ஒரு பெண் குரல் குறுக்கிட்டது.

''அடத் திமிறாத புள்ளே... ரா...சு, இவ கையைப் பிடிச்சுக்க...'' என்று சிறு குழறலுடன் வந்த ஆண் குரல்

நடப்பதை விளக்கிவிடப் பாரதியின் உடல் ஒருகணம் பனிப் பாறையாக இறுகிப் போயிற்று.

மறுகணம் சைக்கிளை விட்டு இறங்கி, அது 'ஸ்டாண்ட்' போடாததால் விழுவதைக்கூட கவனியாது சத்தம் வந்த திசை விரைந்தாள்.

எதிர்பார்த்த காட்சிதான்.

வெகு அருகிலேயும் கூடத்தான்.

சுள்ளிப் பொறுக்கிவந்த ஒரு குடியானவப் பெண்ணை இருவர் — அவர்களும் அந்தப் பக்கம் அவ்வப்போது கண்ணில் படுகிறவர்கள்தான், லேசான குடிவெறி வேறு. மடக்கிக் கொண்டு இருந்தனர்.

''அவளை விடு'' என்ற பாரதியின் அதட்டலை மதிக்கக் குடிபோதைக்கு மனமில்லை.

''அடச் சும்மா போவியா... அல்லது நாங்களும் ரெண்டு பேராச்சு. நீயும் வேணுமானாக்க வா...ஆ...!''

சமாளித்து நிமிரவே இடம் தராமல் இருவரையுமே புரட்டி எடுத்து விட்டாள் பாரதி.

எதிர்த்து நிற்க முயன்று முடியாமல் விழுந்த இருவரும் அவளிடம் மன்னிப்பை வேண்டினர்.

''இனி ஒரு தரம் இந்த மாதிரிப் பிழை செய்யக் கண்டால் முதுகெலும்பை ஒடித்துவிடுவேன். ஓடுங்கள்'' என்று விரட்டி அடித்து, நொண்டிக் கொண்டே அவர்கள் பயத்துடன் விரைவதை வெறுப்பும் சினமுமாக வெறித்துக் கொண்டு நின்றாள்.

அவர்கள் சற்றுத் தொலை சென்றதும் அருவருப்புடன் கைகளைத் தூசி தட்டியவள் அதன் எதிரொலியைப் போல யாரோ கை தட்டும் ஓசை கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பி னாள்.



கண்களில் வியப்பும் பாராட்டுமாய், ''பிரமாதம்!'' என்ற வன் மதுசூதனன்தான். ''இரண்டு பேரும் குறைந்தது நாலு நாள் ஒத்தடம் தேடுவார்கள்'' என்று சிரித்தான்.

நேராகப் பார்த்துவிட்டு, சைக்கிளை நோக்கி நடந்தபடி, ''நீங்களெல்லாம் சந்திரகுப்த மௌரியர் காலத்தில் இருந்தி ருக்க வேண்டும். மாறு கால் மாறு கை வாங்கியிருப்பார்கள். தெரியுமா? எல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா நிற்பதா? உதவிக்கு வரவேண்டாமா?'' என்றாள் அவள் வேகத்துடன்.

''உதவியா? உனக்கா? அவசியம் இருந்தால்தானே? தேவை இல்லாமல் மூக்கை நுழைத்தேன் என்று எனக்கும் நாலு சாத்திவிட்டால் இங்கே எந்த ஆஸ்பத்திரியில் போய் விழுவது? ஒத்தடம் கொடுக்கத் தாயார் கூட இல்லாத பிள்ளை ஆயிற்றே நான்'' என்றான் அவன் லகுவாக.

''தாயார் மட்டும்தான் ஒத்தடம் கொடுப்பார்களா? மனைவி செய்ய மாட்டார்களா?'' என்று அவனைப் போலவே இலகுக் குரலில் தொடங்கிப் பேசிய பாரதிக்கு சட்டென மூச்சடைத்தது, நடக்க முடியாமல் கால்கள் பின் னின.

பரவி வந்த இருள் அதையெல்லாம் மறைத்ததோ? எதையும் கவனியாமல், ''உன் அடிக்கு ஒத்தடம் கொடுக்க என்று ஒரு திடீர் மனைவிக்குப் பிரம்மச்சாரியான நான் எங்கே போவேனாம்?'' என்று அவன் கேலியாகவே தொடர்ந்தான்.

அவளது மூச்சு விடுபட்டதோடு அவளது பேச்சிலும் பாவனையிலுமாகச் சிரிப்பும் வந்தது.

''ஏதோ நம் பங்குக்காக உதவி என்று கீழே கிடந்த உன் சைக்கிளை எடுத்து ''ஸ்டாண்ட்'' போட்டு வைத்தேன். அந்தப் பெண்ணுக்கு வேறு புத்தி சொல்லி அனுப்பி வைத் தேன்.''

''ஆமாமாம், எவ்வளவு பெரிய உதவி! இதற்கு என்னால் இயன்ற மட்டும் ஒரு மூட்டை நன்றி உங்களுக்கு உரித்தாகு க...'' என்று சீரியஸாகச் சொல்ல முயன்று முடியாமல் சிரித்தாள் பாரதி.

சில கணங்கள் அமைதியாக இருந்துவிட்டு, ''சுரிதார் தான் வசதி என்று நீ சொன்னதன் காரணம் இப்போது புரிகிறது. பயமில்லை என்றதும் கூடத்தான். ஆனால் கராத் தேயில் உன்னைவிடக் கெட்டிக்காரன் யாராவது வந்தால்?'' என்று அமர்ந்த குரலில் வினவினான் மதுசூதனன்.

முயன்றும் இந்தக் குரலுக்குக் கேலியாகப் பதிலிறுக்க முடியாமல் போய்விட, ''என்னிடம் சிறுகத்தி ஒன்றும் இருக்கிறது'' என்றாள் அவள் சன்னக் குரலில்.

''ஓ!''

தன் கத்தியை அவன் பெரிதாக மதிக்கவில்லை என்பது பாரதிக்குப் புரிந்தது. ஆனால் இவன் மதியாததால் கத்தியின் கூர்மை ஒன்றும் குறைந்துவிடப் போவது இல்லையே. ஆனால் ஏனோ அவனிடம் வாதாடவும் மனம் வராததால், பேச்சை மாற்றும் முயற்சியாக, ''நீங்கள் இந்த நேரத்தில் இங்கே எப்படி வந்தீர்கள்?'' என்று வினவினாள்.

''சும்மா ஒரு 'வாக்கிங்' வந்தேன்'' என்றான் அவன்.

''ம்... ஆண்கள் என்றால் எந்த நேரம், எந்த இடம் என்று இல்லாமல் துணையே இல்லாமல் உலாவக் கிளம்பி விட லாம். பெண்கள் என்றால் எல்லாம் எதிர்மாறு. இது ''அநியா யமாகத் தெரியவில்லை?'' என்று கொஞ்சம் கோபமாக உரைத்தாள் அவள்.

''நியாயமோ அநியாயமோ, இதன் விஷயம் உன்னை ஒன்றும் தடுத்ததாகத் தெரியவில்லையே!'' என்று பதில் கூறியபடி சைக்கிள் 'ஸ்டாண்ட்'டை நீக்கி அவள் புறமாய் நகர்த்தினான் மதுசூதனன்.



அவன் தன்புறமாக சைக்கிளை நகர்த்தக்கூடும் என்கிற எண்ணம் இல்லாமல் காலை எடுத்து வைத்துவிடவே, பாரதியின் காலில் சைக்கிள் லேசாக — மிக லேசாகத்தான் உராய்ந்துவிட்டது.

ஆனால் அதற்குள்ளாகவே, ''ஆ!'' என்று துடித்துப் போனாள் அவள்.

''என்ன என்ன?'' என்று அவன் பதறவும், ''ஒன்றும் இல்லை. நீங்கள் உலாவப் போங்கள். நான் கிளம்புகிறேன்'' என்று சமாளித்து சைக்கிளில் ஏற முயன்றாள் பாரதி.

''பொறு'' என்று பாண்ட் பையிலிருந்து ஒரு சிறு டார்ச்சை எடுத்து அவள் காலில் அடித்துப் பார்த்தான் மதுசூதனன்.

இரு விரல்களின் மேல் அப்படியே சருமம் வழன்றிருக்க வும், ''இது ஒன்றும் இல்லையா?'' என்றான் கோபத்துடன்.

அவனது கோபம் ஏனோ மனதிற்குச் சுகமாக இருக்க, ''வீட்டிற்குப் போய் மருந்து போட்டுக் கொண்டால் நாளையே குணமாகிக் காய்ந்துவிடும்'' என்றாள் பாரதி இதமாக.

ஒருகணம் அசைவற்று நின்றுவிட்டு, ''உன் வீடு போவ தற்குள் ரத்தம் கொட்டத் தொடங்கிவிடும். முதலில் மில் ''ஸைட்''டுக்குப் போய் மருந்து போட்டுக் கொண்டு உன்னை ஜீப்பில் கொண்டு விடுகிறேன். இல்லை பரவா யில்லை என்கிற வாதம் ஏதும் வேண்டாம்'' என்று கண்டிப் பான குரலில் கூறி அவளை அழைத்துச் சென்றான் அவன்.

சைக்கிளை அவன் உருட்டி வர வெகு கவனத்துடன் நடந்தும்கூட 'சைட்'டை அடைகையில் அவள் காலில் லேசாக ரத்தம் கசியத் தொடங்கிவிட்டது.

மில்லுக்குச் சொந்தமான இடம் தொடங்கும் பகுதியி லேயே ஓர் அலுவலகம் அதை ஒட்டி மதுசூதனனுக்கு இரு அறைகளும் இருந்தன. டெம்ப்ரவரியாக சிமெண்ட் ஷீட்

கூரை போட்டுக் கட்டிய கட்டிடம்தான். ஆனால் நவீன வசதிகளுடன் கூடியது.

சலாம் இட்ட காவலாளியின் கண்களில் குறுகுறுப்பு இருந்ததோ என்று பாரதிக்கு ஒரு சந்தேகம்.

உள்ளே அவனது அறைக்குள் வருமாறு அவன் அழைத்த போது தயங்கி நின்றாள். ''இங்கேயே மருந்தைக் கொண்டு வாருங்களேன்'' என்றாள் மெதுவாக.

அவனது புருவங்கள் உச்சிமேட்டைத் தொட்டன. ''இரண்டு மல்லர்களை அடித்து வீழ்த்திய மறத்தி, வீரப் போரின் அடையாளமாக விழுப்புண் வேறு. இப்போது என்ன ஆகி விட்டது? அப்படியே நான்தான் என்னுடைய வழக்கப்படி காமவெறி கொண்டு கை நீட்டினாலும் உன் கராத்தே, கத்திகபடாவெல்லாம் எங்கே போய்விடும்? உன் வீரத்தையெல்லாம் ஒன்று திரட்டிப் பிடித்து வைத்துக் கொண்டு உள்ளே வந்தே மருந்தைப் போட்டுக் கொள்'' என்று உள்ளே சென்றான் அவன்.

அவனது குரலில் இருந்த குத்தலும் கேலியும் மனதை வருத்த மெல்ல அவனைப் பின்தொடர்ந்தாள் பாரதி.

ஒரு குஷன் வைத்த நாற்காலியின் புறம் கையைக் காட்டிவிட்டு ஒரு பீரோவைத் திறந்தான் அவன்.

''உள்ளே பாட்டில் பாட்டிலாய் விஸ்கி வாங்கி அடுக்கி வைத்திருக்கிறேன் தெரியுமா? ஒரு புட்டியை உள்ளே தள்ளி விட்டு குட்டிக்கு உன்னை நாடாவிட்டால் என் பெயர் மதுசூதனன் ஆக இருக்க முடியுமா?'' என்றான் ஏகத்தாளமாக.

உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் நாற்காலியில் அமர்ந்தாள் பாரதி.

டெட்டால், பஞ்சு, மருந்து எல்லாம் கொணர்ந்தான் அவன்.



ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு அவன் முகத்தைப் பார்த்ததும் நிறுத்திக் கொண்டாள் அவள்.

அவனுடைய முகத்தில் இருந்த இறுக்கத்துக்கு நேர் விரோதமாய்க் கைவிரல்கள் மிகுந்த மென்மையுடன் அவளது காயத்தைச் சுத்தம் செய்து மருந்திட்டன.

அவனது தொடுகையைச் சகிக்கப் பல்லைக் கடித்துக் கொண்டு காத்திருந்த அவளுக்கு அந்த மென்மை ஆச்சரியமான சுகமாகிப் போயிற்று.

சின்னதாய் ஒரு கட்டுகூட.

காரியத்தில் கவனமாகக் குனிந்திருந்த அவனது தலை மட்டுமே அவளது பார்வையில் பட்டது.

அடர்ந்த சுருண்டு பளபளத்த தலைமயிரைப் பார்க்கையில் நிலைமை மறந்து விரல்களால் அளையத் தோன்றியது.

அந்த எண்ணம் தந்த திகைப்பையும் மீறி அவனது மவுனம் அவளை வருத்தியது.

''என்மேல் கோபமா?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள். அவளை மேலும் வாட வைத்துவிட்டு, ''பின்னே உள்ளேவர அப்படித் தயங்கினாயே, நான் என்ன அவ்வளவு மட்ட மானவனா? அந்தப் பட்டிக்காட்டான்களுக்கும் எனக்கும் வித்தியாசமே இல்லையா?'' என்று கேட்டான் அவன்.

''அய்யோ! அந்த நினைப்பே எனக்கு இல்லை. இந்த நேரத்தில் உங்கள் அறைக்குள் வந்தால் யாராவது தவறாக எண்ணக்கூடுமே என்றுதான்... உங்கள் வாட்ச்மேன்கூட ஒரு மாதிரிப் பார்க்கவில்லை? எனக்கு அப்படித் தோன்றியது...''

வினாடிக்குள் அவன் முகத்தின் கடுமை மறைந்தது.

''அப்படியானால் என்மேல் நம்பிக்கை இருக்கிறது?'' என்றான் ஒற்றைப் புருவத்தை மட்டும் கேலி போலத் தூக்கி.

கேலியாகவே எடுத்து, ''நூறு சதவிதம்'' என்று முறுவலித்தாள் பாரதி.

''நூறு சதவிதமா'' என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில்.

ஏன்? என்பதுபோல அவள் நோக்கவும் லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன். ''ரொம்பவும் அதிகப்படி'' என்றவன், அதுபற்றி அவள் மேலும் துருவுமுன் ''கிளம்பு கிளம்பு, முதலில் ஓர் ஏடி.எஸ் இஞ்ஜக்ஷன் போட வேண்டும். ஜீப்பிலேயே கொண்டு போய் விட்டுவிடுகிறேன். இந்தாப்பா பரிசுத்தம், அந்த சைக்கிளை ஜீப்பின் பின்புறம் ஏற்று'' என்று காவலாளைப் பணித்தபடியே வெளியே விரைந்தான்.

பாரதி நல்ல ஆரோக்கியமான பெண் என்பதால் கால் காயம் மறுநாளே காய்ந்துவிட்டது.

கூடவே அன்றையத் தினத்திலிருந்து மதுசூதனனுடன் அவளால் இலகுவாகப் பழக முடிந்தது.

எப்போதும் கையெட்டாத தூரம் விலகியே நின்று பழகியவள், ''இந்தப் ப்ரீதியைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்களேன்'' என்று தானாக அவனது மடியில் குழந்தையை வைக்கும் அளவுக்கு மெல்ல மெல்ல மாறிப் போனாள்.

வெறும் ஆசிரமப் பேச்சுமாறி, ''பஞ்சு தூவினாற் போல அந்த மேகத்துணுக்குகளைப் பாருங்கள்,'' ''மாங்குயில் கூவுவது கேட்கிறதா?'' என்று தன்னுடைய சின்னச் சின்ன சந்தோஷங்களை அவனுடன் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினாள்.

அப்போதும் அவனாக, ''மஞ்சளும் கறுப்புமாக அந்தத் ''தேன் சிட்டு பூவரசம் பூவில் தேன் அருந்துவதைப் பார்... இந்தப் பக்கமாய்...'' என்று அவளது கையைப் பற்றிச் சொல்லுகையில் பட்டெனத் தட்டிவிடத்தான் செய்தாள்.



ஆனாலும் முன்னைப்போல உன்னுடைய இடம் அங்கேதான். அதற்குமேல் அருகே வராதே என்று சொல்லாமல் சொல்வதை நிறுத்திவிட்டிருந்தாள்.

அவனும் அதுபோன்ற பிழைகளை மீண்டும் செய்யாது போகவே மேற்கொண்டு பிசிர்தட்டாது போயிற்று.

பொதுவான விஷயங்களில்கூட இருவருக்கும் அபிப்ராய பேதமே வரவில்லை என்பது இல்லை — ஏன் திட்டவட்டமாக வரவே செய்தது. சில அடிப்படைக் கொள்கைகளில் கூட வேறுபாடு இருக்கவே செய்தது.

ஒருநாள் ஓர் அனாதைக் குழந்தையைக் கண்டெடுத்தவர்கள் ஆசிரமத்துக்குக் கொண்டு வந்தார்கள்.

பிறந்து ஒருவாரம்கூட ஆகியிராது. சாலை ஓரத்தில் மர நிழலில் கிடந்து கத்திக் கொண்டு இருந்ததாம்.

மாரி வந்து விஷயத்தைச் சொன்னதும் தாயுமானவரிடம் சொல்லிவிட்டு பால்புட்டி, குழந்தை உணவு டின் எல்லாம் எடுத்துக் கொண்டு சைக்களில் பறந்து வந்தாள் பாரதி.

குழந்தைக்கு எங்கே வலித்துவிடுமோ என்ற பயத்தில் சட்டெனத் தூக்கக்கூட அவளுக்குத் தைரியம் வரவில்லை.

சமையல்காரப் பாட்டியின் உதவியோடு குளிப்பாட்டித் துடைத்து பால் கரைத்துப் புகட்டி உறங்க வைத்தார்கள்.

அவ்வளவு சின்னக் குழந்தையை அதுவரை பார்த்திராத பாரதிக்கு மனம் உருகிப் போயிற்று.

ஆனால் மதுசூதனனோ ஆத்திரப்பட்டான். ''ஐந்தறிவு படைத்த மிருகங்கள்கூடப் பெற்றவற்றைப் பேணிப் பராமரிக்கின்றன. பெற்றுப் போட்டு விட்டு ஓடியிருக்கிறாளே. உடம்புத் தினவு எடுக்கும்போது அல்லவா இந்த விளைவின் நினைவு வந்திருக்க வேண்டும்?'' என்று திட்டினான்.

ஆனால் அவன் எதிர்பாராதவிதமாக, ''உடம்புத் தினவு தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று சீறினாள் பாரதி. ''எந்த ராஸ்கல் தன் பலத்தால் அந்தப் பெண்ணுக்குச் சுமை ஏற்றினானோ? முதலில் அவனை நிற்க வைத்துச் சுட வேண்டும்'' என்று பொரிந்து கொட்டினாள்.

''அப்படித்தான் என்று மட்டும் எப்படித் தெரியும்'' என்று திருப்பிக் கேட்டான் அவன்.

''ஆனால் இப்படித்தான் என்று மட்டும் எப்படித் தெரியு மாம்?'' என்று திருப்பினாள் அவள்.

கோபமாகப் பேசியபோதும் அவளது கண்களில் நீர் திரையிடக் கண்டு தணிந்து, ''ஓ.கே.ஓ.கே. நீ கூறுவது போலவே, வைத்துக் கொள்ளலாம். ஆனால் எல்லாப் பெண் களையும் உன்னைப் போல உத்தமியாக எண்ணிவிடக் கூடாது பாரதி'' என்று இதமான குரலில் சொல்லிக் கொண்டி ருந்த மதுசூதனன் அவள் எழவும் நிறுத்தினான்.

''நான் ஒன்றும்...'' என்று தொடங்கிய பாரதி சட்டெனத் திரும்பி உள்ளே சென்றாள்!

திரும்பி வரும்போது கண்கள் சற்றே சிவந்திருப்பதை யும் முகம் கழுவித் துடைக்கப்பட்டிருப்பதையும் காணத் தவறவில்லை அவன்.

அதன்பிறகு பெண்களைப் பற்றி அவளிடம் மட்டமாக அவன் பேசுவதே இல்லை — வேடிக்கைக்காகக் கூட.

ஆசிரமக் கட்டிடம் மடமடவென்று வளர்ந்து தளம் போட்டு வாசக்கால் வைத்தார்கள்.

''அன்று பூஜை செய்வார்கள். நீ அஸ்திவாரத்து பூஜைக் குத்தான் வரவில்லை. இதற்காவது வந்துவிடு'' என்றிருந் தான் மதுசூதனன்.



சரியென்று வந்தபோதும் பூஜை நேரத்தில், ''நீங்கள் நடத்துங்கள்'' என்று விலகிப் போய்விட்டாள் அவள்.

பூஜை முடிந்தபிறகு திரும்பி வந்தவள், விளக்கம் கூறு வது போல, ''எனக்கு இந்த சாமி பூதம் என்பதில் எல்லாம் நம்பிக்கை கிடையாது'' என்றாள் விட்டேற்றியாக.

''இந்தச் சடங்குகளில் நம்பிக்கை இல்லாவிட்டாலும் நமக்கெல்லாம் மேலே உள்ள கடவுளுக்கு என்று நினைத்து வணங்கிக் கொள்வதுதானே'' என்றான் அவன்.

சட்டென முகம் மாறிச் சினக்க, ''எனக்குக் கடவுள் நம்பிக்கையே கிடையாது. கடவுள் என்று ஒன்றும் இல்லை எல்லாம் பொய்'' என்றாள் அவள் குரோதப் பார்வையுடன்.

மிகவும் ஆச்சரியமாகப் போயிற்று அவனுக்கு.

இவள் இவ்வளவு ஆத்திரப்படுவானேன்?

ஒருவேளை உற்றாரை, பெற்றோரை இழக்க நேர்ந்த போது காக்குமாறு கடவுளை மிகவும் வேண்டியிருப் பாளோ? அது நடவாது அனாதையானதால் வந்த வெறுப்போ?

நிலைமையை லேசாக்க எண்ணி, ''அன்றைக்குப் பஞ்சா யத்து சேர்மனிடம் கடவுள் சும்மா விடுவாரா என்று யாரோ — அது நீ தான் என்று கூட லேசாக ஒரு ஞாபகம் — மிரட்டியதாக நினைவு வருகிறதே?'' என்றான் தீவிரமாக யோசிக்கும் பாவனையோடு.

முகத்தில் அசடு வழிந்த போதும் விடாமல், ''ஆனால் அவருக்கு அந்த நம்பிக்கை உண்டே'' என்றாள் பாரதி.

அவன் சிரிக்கத் தொடங்கி விடவே தானும் அதில் இணைந்தாள்.

பாரதி சென்ற பிறகு, தாயுமானவரிடம் அதுபற்றி மதுசூ தனன் விசாரித்தான்.

''அளவு மீறிய தவிப்பும் இழப்பும் தான் இந்த மாதிரிப்

பெண்ணின் இறை நம்பிக்கையை அழித்திருக்க முடியும் இல்லையா அங்கிள்? பாரதிக்கும் அதுபோலத் துயரங்கள் தான் நேர்ந்ததாமா?'' என்று கேட்டான்.

சில கணங்கள் யோசனையோடு அவனைப் பார்த்தார் பெரியவர். ''ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக ஊரில் கொஞ் சம் பணமும் சரக்கும் ஏற்பாடு செய்து கொண்டு திரும்பி வரும்போது இவளைச் சந்தித்தேன். ஒன்றுமே இல்லை; உயிர்மீதும் பற்றில்லை'' என்றார். எனக்கு அப்போதுதான் ஊன்றுகோலாக இந்தப் பிள்ளைகள் கிடைத்த நேரம். இவ ளும் அந்தக் கோலையே பற்றிக் கொள்ளட்டுமே என்று அழைத்து வந்தேன். இதற்குமேல் அவளது முன்கதை மூலக் கதையெல்லாம் கேட்டு அவளை நான் கஷ்டப்படுத்தியது இல்லை. உங்களுக்கும் அது தேவையிராது என்று நினைக்கி றேன்...''

''தேவயில்லை தான்'' என்றான் மதுசூதனனும்.

ஆசிரமத்துக் கட்டிடம் வேகவேகமாய் வளர்ந்து நிறைவு எய்தியது.

பிள்ளைகள் அங்கு குடிபோனார்கள்.

சில தினங்களில் மில்லுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

அன்றையத் தினம் பாரதியின் வாழ்வை அடியோடு மாற்றி அமைத்தது.

## 6

மில்லுக்கு அடிக்கல் நாட்டு விழாவுக்காகப் பிரமாதமாக ஏற்பாடுகள் நடந்தன.

மின்விளக்கு அலங்காரங்கள், மேடைகள், விருந்து ஏற் பாடுகள் என்று தடபுடல்பட்டது.



வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த பாரதிக்கு திடு மென ஒன்று உறைத்தது.

இல்லத்துக் கட்டிடத்தை அவ்வளவு விரைவாகக் கட்டி முடித்தானே — இங்கே ஏன் இவ்வளவு தாமதம்?

ஐந்தாறு ஆசிரமக் கட்டிடங்களை உள்ளே வைத்து விடலாம் போல இது பெரிய அளவிலான வேலைதான்.

அவ்வளவு இடத்திற்குமாக இரண்டு மூன்று ஆள் ஆழத் திற்குத் தோண்டி இருந்தார்கள்தான்.

ஆனாலும் அஸ்திவாரமே இனிமேல்தான் இடவேண் டும் என்றால் சற்று அதிகப்படித் தாமதமாகத்தான் அவளுக் குத் தோன்றியது.

தோன்றியதை மறைக்காமல் மதுசூதனனிடம் கேட்டும் விட்டாள்.

''அடிப்படைக் கல்லை நாட்ட மந்திரிக்கு இதுவரை நாள் கிடைக்கவில்லை'' என்றான் அவன்.

''உங்கள் மந்திரிதான் கொத்தனாரா? அவர் அஸ்திவாரம் போடவில்லை என்றால் கட்டிடம் வளராதாமா?'' என்று கேலி பேசினாள் பாரதி.

முறுவலித்துவிட்டு, ''அதுவேதான் விஷயம்'' என்றான் அவன். ''இதற்குத் தன்னை அழைக்கவில்லை என்றால் மந்திரிக்கு முகச் சிணுக்கம் வரும். முட்டுக்கட்டை என்று ஏதும் போடாவிட்டாலும் அப்புறம் எதற்கும் ஆள் அகப்பட மாட்டார். மந்திரியே ஒதுங்கிவிட்டால் சம்பந்தப்பட்ட இலா காவில் நம் ஃபைல் அடுத்த மேசைக்குக்கூட நகராது. அதனால் இப்போது ஒரு மாதம் பிந்தி வேலையைத் தொடங் கினாலும் பிறகு அதற்கு ஈடுகட்டிவிடும்'' என்று அவன் விளக்கவும் 'அடேயப்பா!' என்றிருந்தது அவளுக்கு.

பணக்காரர்களும் பாடுபடத்தான் வேண்டும் போலும் என்று எண்ணினாள். கொஞ்சம் வித்தியாசமான பாடு!

ஊகித்தவனாகச் சிரித்தான் அவன்.

தான் நினைப்பதை எல்லாம் ஊகித்து அறிந்து கொண்டு விடுகிறானே என்று உள்ளூர ஓர் அச்சம் உண்டாயிற்று பாரதிக்கு.

உதட்டைக் கடித்த வண்ணம் அவள் நிற்பதை ஒரு நமட்டுச் சிரிப்புடன் ஓரக்கண்ணால் பார்த்தவன் தன் வேலையைத் தொடர்ந்தான்.

''மந்திரியோடு வரும் போலீசாருக்கு ஒரு தனி டென்ட் கொடுக்க வேண்டும் பிரகாசம். இங்கே தஞ்சையிலிருந்து வருகிறவர்களுக்கு இரண்டு மந்திரம், இரண்டு மூன்று ஊர்களில் ஆள் திரட்டி வரச் சொன்னேனே, நாளை ஒன்பதுக்கெல்லாம் வந்துவிடவேண்டும். கூட்டம் கணிசமாக இருந்தால்தான் மந்திரிக்கு குளிர்ச்சியாக இருக்கும். தியாகராஜன், நீங்கள் ஏ.ஈ. ஆபீசிலேயே இருந்து விடுங்கள்.

அவள் மெல்ல நகரவும், ''நாளை நிகழ்ச்சிக்கு நீயும் வருவாயில்லையா, பாரதி? உன் உடையில் மாற்றம் உண்டா?'' என்று வினவினான்.

மறுநாளைய அவளது ஆடை அவனுக்கு ரகசியம்

பொதுவாக மதுசூதனனுக்குச் சேலையில் — அதையும் ஒழுங்காகக் கொசுவமிட்டுக் கட்டினால் அதில் ஒரு லயிப்பு உண்டு. உலகத்திலேயே நம் தமிழ்நாட்டுச் சேலை போல அழகு இல்லை என்பான்.

ஏனோ, அவனை மகிழ்விக்க வேண்டும் என்று தோன்றவே மறுநாள் கட்டுவதற்காக தங்க நிறத்தில் கறுப்புப் பூக்கள் போட்ட ஒரு 'சிந்தடிக்' கோட்டா சேலை வாங்கி வைத்திருந்



தாள் பாரதி. கறுப்பு பைப்பிங்குடன் சேலை வண்ணத்திலேயே ரவிக்கையும், பாவாடையும் கூடத் தைத்திருந்தாள்.

எத்தனையோ ஊகிக்கிறவனுக்கு இந்தச் சேலையை ஊகிக்க முடியாது என்பதில் பெரிய வெற்றி கண்டாற்போல அவளுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

அந்தச் சிரிப்புடனேயே தலையை அசைத்து விட்டுப் போய்விட்டாள்.

மந்திரி முன் ஆசிரமப் பிள்ளைகளின் சிறு நிகழ்ச்சி ஒன்று இருந்தது.

அதற்குத் தயார் செய்வதற்காகச் சீக்கிரமாகவே தன் ஆடை ஆலங்காரங்களை பாரதி முடித்து கொள்ள வேண்டியிருந்தது.

காலையிலேயே குளித்துவிட்டு அந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு நிற்கையில் ஒரு மாதிரி இருந்தது.

ஐந்து ஆண்டுகள்! அதற்கு முன்புக்கூட சாதாரணமாக அணிவது பாவாடை தாவணிதான்.

எப்போதாவது அதிசயமாய் ஆசைப்பட்டால் ஒரோரு சமயம்...

மாற்றிவிடலாமா என்று யோசிக்கையில் கதவு தட்டப் பட்டது.

அவளை 'சைட்'டுக்கு அழைத்து செல்லவென்று மதுசூதனன் ஏற்பாடு செய்த காரின் டிரைவர் தாத்தாவாக இருக்கும் என்று எண்ணியபடியே திறந்து பார்த்தால் மதுசூதனன்.

''வா...வ்! பாரதி, நீ ரதியேதான்'' என்றான்.

சிறு வெட்கச் சிரிப்புடன் நிமிர்ந்தவள், அவனது பார்வை தனது இடையில் பதிந்திருக்கக் கண்டாள்.

தொளதொளப்பான சுரிதாரினுள் எப்போதும் மறைந்திருந்த பகுதி வெளெரென்று தங்க நிறத்தில் பளபளத்தது.

அவனது பார்வையில் அவள் உடம்பில் கூச்சம் உண்டாயிற்று.

நேரடியாகச் சொல்ல மனம் வராமல் நாசுக்காக விளக்க எண்ணி, ''நேராக முகத்தைப் பார்த்துப் பேச தைரியம் இல்லையாக்கும்!'' என்றாள் கேலி போல.

வேண்டுமென்றே அந்தக் குறிப்பை ஏற்க மறுத்து, ''நான் அழகை ரசிப்பவன். அது எங்கே இருந்தாலும்'' என்றான் அவன் துணிச்சலாக.

அவளுக்கு லேசாக கோபம் வந்தது. ''அதற்காகச் சிலசமயம் செருப்படிகூட வாங்க வேண்டியிருக்கும். தெரியுமா?'' என்றாள் துடுக்காக.

''ஆகா! என்னமாதிரி நாகரீகம் பாரேன். இதைக் கேள் ரதிதேவி, ஒரு பாராட்டை எத்தனையோ வகையில் அழகாகவே ஏற்கலாம். ஒரு புன்முறுவல், ஒரு வெட்கச் சிவப்பு அல்லது ஒரு நன்றி. அதை விட்டுவிட்டு செருப்படி என்று மிரட்டுவதா? அப்படித்தான் யாராவது வந்து அடிக்கிறவரை என் கை மட்டும் சும்மாவா இருக்கும்?''

இவன் என் இடுப்பை எப்படிப் பார்க்கலாம் என்று தோன்றியபோதும் அவன் பேச்சில் இருந்த உண்மையால் பாரதி குன்றிப் போனாள்.

''சாரி'' என்றாள் மெல்ல.

''அவ்வளவுதானா?'' என்றான் அவன் விடாக் கண்டனாக.

''ந... நன்றி'' என்றாள் அவள், கன்னங்கள் சூடேற.



''ஆ. இதுசரி, இப்போது உன்முறை. சொல்லு எப்படி இருக்கிறது? என்று கேட்டான் அவன்.

''எது?'' என்று நிமிர்ந்து அவனைப் பார்த்த பாரதி பிரமித்தாள்.

முழுக்க முழுக்க வெண்ணிற உடையில் மெல்லிய கறுப்பு பெல்ட் இடையைச் சுற்றிவர ஆறடி உயரத்தில் அழகனாக நின்றான் அவன்.

அவள் பேச்சிழந்து நிற்க அவன் எடுத்துக் கொடுத்தான் ''அப்படியே மன்மதன்தான். இல்லை?''

''சுயபுராணமா? என்ன தற்பெருமை?'' என்று சிரித்தாள் பாரதி. உள்ளூர மன்மதனே தான் என்றது மனது.

''இல்லாததைச் சொன்னால் தற்பெருமை தான் நான் உள்ளதைத்தானே சொன்னேன்? அத்தோடு உன்போலவே என் பெயரிலும் மன்மதன் இருக்கிறான் பார்.''

''எப்...ஓ!''

''ஆமாம். உன் பெயரில் முதல் எழுத்தை விட வேண்டும். என்னுடையதில் இரண்டாவது. மூன்றாவது எழுத்துக்களை நீக்கினால் நான் மன்மதன் ஆகிவிடுகிறேன். நீ ரதிதான் என்பதை நானே சொல்லிவிட்டேன். இனி என்னைப்பற்றிய அபிப்பிராயம் நீதான் சொல்ல வேண்டும். நிஜமாகப் பரவாயில்லையா?'' என்று கேட்டான் அவன்.

அவன் தன்னை ரதியென்று அழைத்தால் உண்டான மயக்கமோ, அல்லது முக்கியமான விழாவில் தன் தோற்றம் பற்றி ஐயுறுகிறானோ என்பதால் ஏற்பட்ட பரிவோ அன்றி உண்மையைச் சொல்லும் உந்துதலோ ''உங்களுக்கும் பெயர் பொருத்தம்தான்'' என்று சொல்லிவிட்டுக் கன்னம் சிவந்தாள் பாரதி.

ஓர் ஆண் மகனைப் பாராட்டி, அதிலும் அவனது தோற்றத்தைப் பற்றி பாராட்டி அறிந்திராத தன்மையால் இன்றையப் புதுமையில் சட்டெனக் குழம்பிப் போனாள் அவள்.

ஆர்வத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த மதுசூதனன் திடுமென சிரித்தான். ''ஆகா கல்லில்! இருந்து கூட நார் உரிக்கலாம் என்று இப்போதுதானே தெரிகிறது'' என்று மேலும் நகைத்தான்.

அவளும் சிரித்துவிட, அந்தச் சிரிப்பு வாடுமுன்பாகவே, ''கிளம்பு, கிளம்பு உன்னை நானே சைட்டுக்குக் கொண்டு விட்டுவிட்டுப் போகிறேன்'' என்று அழைத்துச் சென்றான்.

''டிரைவர் தாத்தாவை அனுப்புவதாகச் சொன்னீர்களே?'' என்று வினவியபடியே ஆசிரமப் பிள்ளைகளின் நிகழ்ச்சிக்காகத் தேவையாய் இருந்த பொருட்கள் அடங்கிய பையை அவனிடம் கொடுத்துவிட்டுக் கதவைப் பூட்டினாள் பாரதி.

உன் அலங்காரத்தைப் பார்க்கும் ஆவலில் வந்தேன் என்றால் என்ன சொல்லுவாளோ என்று மெய்யை மறைத்து, ''நானே இந்தப் பக்கம் வரவேண்டியிருந்ததால் அப்படியே உன்னையும் அழைத்துப் போய்விடலாம் என்று வந்தேன்'' என்று உரைத்தான் அவன்.

''ஆனால் நீங்கள் பாட்டில் இங்கே சுற்றிக் கொண்டு இருக்கிறீர்களே, உங்கள் கொத்தனார் மந்திரி, கட்டியக் காரர்கள், காவலர்கள் இல்லாமல் தைரியமாகத்தனியே வந்து விடுவாரா?'' என்று விழிகளில் குறும்பு மின்னக் கேட்டாள் அவள்.

''ம்... கிண்டலா? முதலாவதாக மந்திரி எனக்கு மட்டும் இல்லை உனக்கும்தான். அடுத்து அவருக்குத் துணையாக என் பார்ட்னர்கள் வருகிறார்கள். அதனால் நான் இல்லாமல்



அவர் ஒன்றும் ஏங்கிப் போய்விட மாட்டார் அத்தோடு இங்கத்தி பொறுப்பு தான் முழுமையாக என்னுடையது. அதனால்...'' என்றவன் சட்டெனக் காரை நிறுத்தினான்.

அங்கே ஒரு பூக்காரப் பெண் பல வண்ணங்களில் டிசம்பர் பூக்களைத் தொடுத்து வைத்திருந்தாள்.

''ஆசிரமத்து நாடகத்தில் அந்தப் பெண் சுகந்தியின் மஞ்சள் டிரஸ்சுக்கு வெள்ளையை விட இந்த வயலட் கலர் டிசம்பர் பூச்சரத்தை ஐடையில் சுற்றிவிட்டால் எடுப்பாய் இராதா? வாங்கலாமா?'' என்று வினவினான்.

அவன் எதிர்பாராத வண்ணம், ''இந்த வயலட் கலர் எதனோடும் சகிக்காது. எனக்கு அறவே பிடிக்காது'' என்றாள் அவள் சுள்ளென்று.

அவன் வியப்புடன் திரும்பித் தன்னை நோக்குவதை உணர்ந்தும், நேர் எதிரே பார்த்தபடி விறைப்பாக அமர்ந்திருந்தாள்.

அப்போதைக்கு ஒன்றும் சொல்லாமல் காரைக் கிளப்பினான் மதுசூதனன்.

சற்றுதூரம் சென்றதும், ''ஏன் இந்தக் கோபம்?'' என்று கேட்டான்.

அவள் பதில் பேசாது இருக்கவும், ''உன் வேலையில் தலையிட்டேன் என்பதாலா? சாரிம்மா'' என்று அவன் இறங்கி வரவும் அவளுக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

''நா... நானும் வந்து ஏதோ நினைப்பில் ...சரி... சரி...'' என்று தடுமாறுகையில் இரு பெரிய நீர்மணிகள் விழிகளில் திரண்டு உதிர்ந்துவிட்டன.

வேகமாகக் காரைச் சாலை ஓரத்தில் ஒதுக்கி நிறுத்தி விட்டு ஒரு விரலால் அவள் முகத்தைத் திருப்பி ''நானாகப்

பார்த்துப் பார்த்துச் செய்ததில் வேறு யாரும் ஏதேனும் சொன்னால் எனக்குக் கூடக் கோபம் தான் வரும். ஆனால், இதற்குப் போய் அழுவார்களா? என்ன ரதி, இது'' என்றான் கனிவான குரலில்.

சற்று அதிகமாகவே நடுங்கத் தொடங்கிய கீழ் உதட்டின் மேல் பற்களால் அழுத்தி, ஒருவாறு சமாளித்து, ''நான்... நான்... வந்து என் பெயர் பா..ரதி'' என்று முறுவலிக்க முயன்றாள் பாரதி.

''ம்ஹூம் அது வெறும் இடுகுறிப் பெயர். நான் அழைத்தது காரணப் பெயர் — அதிலும் சரியான காரணப் பெயர் ஆயிற்றே'' என்று வாதிட்டபடி 'கார்க் கம்பார்ட் மென்டி'லிருந்து ஒரு சின்ன டவலை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டுக் காரை மீண்டும் எடுத்தான் அவன்.

ஒரு பெருமூச்சுடன் முகத்தை அழுந்தத் துடைத்து விட்டு, ''பாரதி கூட ஓரளவு அப்படிதான் தெரியுமா? படிக்கும்போது நான் தான் வகுப்பில் முதல்...'' என்றாள் அவள்.

''ஓ. கலைமயாணியா? ஆனால் நூற்றுக்கு நூறு சரியான காரணப் பெயர் ரதி என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.''

சிரிக்கச் சிரிக்க வாதம் செய்தபடியே அவளை ஆசிரமத்தில் விட்டு விட்டு மற்றதைக் கவனிக்கப் போனான் மதுசூதனன்.

''அக்கா அக்கா, உங்களுக்குச் சேலை ரொம்ப அழகாக இருக்குதுக்கா'' என்று அவளைச் சூழ்ந்து கொண்டு விழி மலரப் பாராட்டினர் சிறுவர்கள்.

அந்த மகிழ்ச்சியாலும், பிள்ளைகளின் அலங்காரத்துக்காகத் தஞ்சையிலிருந்து மதுசூதனன் தருவித்திருந்த பெண்மணியின் வேலையைச் சரிபார்ப்பதிலும், சின்னச் சின்ன குறிப்புகளை நாட்டிய நாடகத்தில் பங்கு ஏற்கும் பிள்ளைகளுக்கு நினைவூட்டுவதிலுமாக இடையில் ஏற்பட்ட மனச் சிணுக்கம் பாரதிக்கு மறந்தே போயிற்று.



அமைச்சர் வந்ததிலிருந்து அவருடனேயே சுற்றிக் கொண்டிருந்தான் மதுசூதனன்.

பூனை மாதிரி இந்த மனிதரா முசுட்டுத்தனம் பண்ணக்கூடும் என்று பாரதிக்கு ஆச்சரியமாய் இருந்தது.

ஆனால் ருத்திராட்சப் பூனையோ?

இல்லத்துச் சிறுவர்களின் நாட்டிய நாடகம் அவரைக் கவர்ந்தாற்போல இருந்தது.

விதம் விதமாய் அவர்களோடு படம் எடுத்துக் கொண்டார்.

சமயத்தைப் பயன்படுத்தி மதுசூதனன் மந்திரியிடம் ஏதோ சொல்வதையும், தாயுமானவரை அறிமுகப்படுத்தி வைப்பதையும் கண்டாள்.

அதன் பிறகு தேடுவது போல அவனது பார்வை இங்கும் அங்குமாய் அலைந்தது.

ஆனால் பாரதி பண்ணைக் குடும்பத்தின் பின்னேயே ஒதுங்கிவிட்டாள்.

சென்னையில் குடியேறிவிட்டவர்கள் தவிர மற்றபடி அவர்களில் ஊரில் இருந்த அனைவருமே விழாவுக்கு வந்திருந்தனர்.

என்னவோ அவளது மதிப்பு உயர்ந்துவிட்டாற்போல பண்ணைக் குடும்பத்துப் பெண்கள் எல்லோருமே அவளிடம் ஆர்வம் காட்டிப் பேசினர்.

மில்லைப் பற்றிய விவரம் எல்லாம் அவளிடம் கேட்டார்கள். மதுசூதனனைப் பற்றியும்தான்.

தான் அறிந்தமட்டும் கூறிவிட்டு, ஆசிரமத்துப் பிள்ளைக ளின் உணவைப் பார்க்கப் போனாள் பாரதி.

சாப்பிட்டதும் முன்னதாகவே மதுசூதனன் ஏற்பாடு செய்திருந்த காரில் அவர்களை இல்லத்துக்கு அனுப்பி வைத் துவிட்டுத் திரும்பினான்.

உணவு முடிந்து, மந்திரி விடைபெற்றுச் சென்று கூட்டம் கலைந்த பிறகு மதுசூதனன் இரண்டு மூன்று பேரோடு பாரதியிடம் வந்தான்.

''மீட் மிஸ் பாரதி. பாரதி, இவர் என் பார்ட்னருடைய மகன். இவருக்கும் மில்லில் பங்கு இருக்கிறது...'' என்ற அறிமுகத்தில் புதியவன் குறுக்கிட்டான்.

கண்கள் பளபளக்க, ''ஹல்லோ, வாட் எ ப்யூட்டி?'' என்று சட்டென அவளது கையைப் பற்றி குலுக்கி விட்டான்.

கொதிப்புடன் ஓர் உதறலில் கைகளை விடுவித்துக் கொண்டாள் பாரதி.

சட்டெனத் திரும்பி வேகமாக நடந்து அவ்விடம் விட்டு அகன்று போய்விட்டாள்.

''ஷ். பாரதி, நில்... என்ன இது...'' என்ற மதுசூதனனின் குரல் அவளது காதில் விழுந்தது போலவே தெரியவில்லை.

விழத்தான் செய்தது. ஆனால், அதற்கு மதிப்புக் கொடுத்து நின்று அந்த மனிதர்களோடு பேச அவளுக்கு விருப்பம் இல்லை.

ஏன், அறிமுகம் செய்வித்த அவனுடன்கூடப் பேசப் பிரியம் இன்றி, தனது வெளிநடப்பினாலேயே அவனையும் அவமானம் செய்தபடி விரைந்து சென்று விட்டாள்.



## 7

வேகமாகத் தன் இருப்பிடத்துக்கே சென்று விட லாமோ என்றால், அவனோடு காரில் வந்ததன் பலன் சைக்கிள் வீட்டில் தங்கிப் போயிற்று. 'சைட்' பஸ் பாதையிலி ருந்தும் வெகுதூரம்.

ஆயினும் அங்கு நிற்கவோ அடியோடு விருப்பம் இல்லை. ஏன், வெறுப்பாகவே இருந்தது.

''ராஸ்கல், என்ன திமிர் இருந்தால் கையைத் தொடு வான்? பியூட்டியாமே; கண்ணை நோண்டியிருக்க வேண் டும்'' என்று ஆத்திரமாகப் பொருமியபடி நடந்து கொண்டே இருந்தாள்.

எவ்வளவு தூரம், நேரம் நடந்தாளோ? அருகில் காரை நிறுத்தி, ''ஏறிக் கொள். உன் வீட்டில் கொண்டு விடுகிறேன்'' என்றான் மதுசூதனன்.

பெரிய மூச்சுகளுடன் அவள் பேசாமல் நிற்கவே, ''ஏறு, பாரதி. இங்கிருந்து உன் இருப்பிடத்துக்கு நடப்பது முடியாத காரியம். வேறு வண்டிகளும் கிடையாது. அத்தோடு உன் னோடு நான் கொஞ்சம் பேசவும் வேண்டும்'' என்றான் அவன்.

அவள் ஏறி அமர்ந்து, வண்டி ஓடத் தொடங்கியதுமே அவனும் தொடங்கி விட்டான்.

''ஒருவருக்கு அறிமுகம் செய்து வைத்தால் இப்படித் தான் அவமானப்படுத்துவதா? அறிமுகம் செய்வித்தவனுக்கு எவ்வளவு கேவலம்? அந்த மனிதன்தான் என்ன நினைப் பான்?''

''அவன் என்ன நினைத்தாலும் எனக்கு ஒன்றும் இல்லை'' என்றாள் பாரதி கோபத்துடனேயே.

''எனக்கு இருக்கிறது; உனக்கும் இருக்கிறது. ஆனால் இன்றைய மூடில் உனக்கு இது புரிவது கஷ்டம்'' என்றான் அவன். ''ஆனால் அந்த அளவுக்கு யோசித்துக் கண்டு கொள்ளாவிட்டாலும் இன்று நீ நடந்து கொண்ட விதம் சரியில்லை'' என்று கண்டித்தான்.

''என்ன சரியில்லை? அவன் மட்டும் எடுத்த எடுப்பில் கையைத் தொடலாமோ?''

''கை குலுக்கத்தானே தொட்டான், கற்பழிக்க அல் லவே. எதற்காக இந்த ஆத்திரம்?''

உதடுகளை அழுந்த மூடிக் கொண்டு சில கணங்கள் உட்கார்ந்திருந்தாள் பாரதி. பிறகு, ''அப்படித்தான் நான். எனக்கு அவனைப் பிடிக்கவில்லை. பிடிக்காதவர்களிடம் கடனே என்று இளிப்பது என்னால் முடியாத காரியம்'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

அப்போதும் அவன் விடுவதாக இல்லை. ''சிரிக்க வேண்டாம். சும்மாவேனும் நிற்கலாமே இந்த மாதிரி முரடு போல முகத்தைத் திருப்பி கொள்ள வேண்டாமே.''

அவன் மேலே மேலே கண்டித்துப் பேசுவதை விடவும் அவனது பேச்சில் இருந்த நியாயம் அவளை மிகவும் பாதித்துவிட, ''ஆமாம்; நான் முரடுதான். அதற்கு என்ன செய்வதாம்'' என்று கிறீச்சிட்டாள் பாரதி.

ஒரு பார்வையை அவளிடம் செலுத்திவிட்டுச் ''சாப் பாட்டில் கொஞ்சம் காரத்தைக் குறைத்துக் கொள்வது'' என்றான் அவன் சீரியசாக.

சற்று திகைத்துவிட்டு அவனது கேலி புரிந்து அவனை முறைத்துப் பார்த்தாள் அவள்.

''பயம்...ம்மாய் இருக்கிறது'' என்று சிரித்தான் அவன்.

தன்னை மீறி முறுவல் அரும்பியது அவளுக்கு.



''ம்ம்... உனக்கு இதுதான் சரி'' என்று மெச்சினான் மதுசூதனன்.

மடியில் கோத்திருந்த விரல்களில் பார்வையைப் பதித்து, ''ப்ளீஸ் மது, இந்த மாதிரி ஆட்களை எனக்கு அறிமுகம் செய்து வைக்காதீர்கள். அந்தப் பார்வையிலேயே அருவறுத்துப் போகிறது'' என்றாள் சின்னதான குரலில்.

காரை ஒரு மர நிழலில் நிறுத்திவிட்டு, ''இந்த வயலின் ஊடே சற்று நடக்கலாம் வா'' என்று அழைத்துச் சென்றான் மதுசூதனன்.

வயல் ஓர வாய்க்காலில் தண்ணீர் சலசலத்தது.

பசிய வயல்களின் ஊடே வெண் கொக்குகள் பளிச்சிட் டன.

பயிரோடு தவழ்ந்து வந்த காற்று உடம்பை அன்பாகத் தழுவிற்று.

அரைக்கண் மூடி ரசித்தவன் சொன்னான். ''அழகைக் கண்டால் ரசிப்பது இயல்பு, பாரதி. காலையில் நான் ரசிக்கவில்லையா?'' என்று கேட்டான்.

''நீங்களும் அவ... அவரும் ஒன்றில்லை'' என்றாள் அவளும்.

''எந்தவிதத்தில் வேறுபாடு?'' என்று விடாமல் கேட் டான் அவன்.

''அது...'' என்று தொடங்கிய பாரதி திகைத்தாள்.

''ம்? சொல்லேன்'' என்று முறுவலோடு ஊக்கினான் மதுசூதனன்.

''நீங்...நீங்கள் ரொம்ப நாளாய்ப் பழகியவர்'' என்று ஒருவாறு சமாளித்தாள் அவள்.

''ஓ! அப்படியானால் பிரதீப் சொல்வதுபோல செய்ய வேண்டியதுதான்'' என்றான் யோசனையோடு அவன்.

''என்னது? என்ன செய்ய வேண்டும்?'' என்று வயிற்றில் ஏதோ பிசைய விசாரித்தாள் பாரதி.

கீழ்க்கண்ணால் அவளைப் பார்த்துவிட்டு, ''அங்கே அஸ்ஸாம் மில்லில் ஏதோ தகராறாம். என்னை அங்கே செல்லும்படி கேட்கிறான்...'' என்று அவன் தொடங்கவும் ''மதூ!'' என்று அதிர்ந்தாள் அவள்.

அவளது குறுக்கீட்டைக் கவனியாதவன்போல அவன் தொடர்ந்தான். ''நான் அங்கே போய்விட்டால் பிரதீப் இங்கே இருப்பான் இவனுடனும் நீ பேசிப் பழகிவிடலாம். நாலு பேரிடம் நன்றாகப் பேசிப் பழகிவிட்டால் உன்னுடைய இந்த தொட்டால் சுருங்கி மனோபாவம் மாறிவிடும்...''

அவனது பேச்சில் குறுக்கிட முயன்றும் அதற்கு இடம் தராமல் அவன் பேசிக் கொண்டே போகவும், அவனது கரத்தைப் பற்றி நிறுத்தி, ''அதை விடுங்கள், மது. ஆனால் நீங்கள் மெய்யாகவே அங்கே போய்விடுவீர்களா?'' என்று கலவரமுற்றவளாக வினவினாள்.

தன்னைப் பற்றியிருந்த அவளது கையைநோக்கிய மதுசூதனின் பார்வை மிருதுவாயிற்று.

''நான் ஒன்றும் தட்டிவிட மாட்டேன்ம்மா'' என்றான் குறும்பாக.

முகம் சிவக்க அவள் கையை விலக்கிக் கொள்ள முயன்றபோது தன் மறுகையால் அவளது கையை லேசாக அழுத்தித் தடுத்து அவளது கேள்விக்குப் பதில் சொன்னான்.

''நீ வேண்டாம் என்றால் நான் அங்கே போகவில்லை.''

''நா..ன்...'' என்று முகம் சிவக்கத் தடுமாறினாள் பாரதி. அந்தப் பரந்த வெளியிலும் அவளுக்கு மூச்சு முட்டியது.

''ம். நீதான் சொல்ல வேண்டும். சொல்லு. போகவா, வேண்டாமா?''



கொஞ்சலாக ஒலித்த அவனது குரல் அவளை அரள வைத்தது.

கையை விடுவித்துக் கொண்டு ஓடிவிட வேண்டும் போலத் தோன்றிய போதும் அசையமாட்டாமல் அப்படியே செயலற்று நின்றாள் பாரதி.

''சரி. இதே கேள்வியை இன்னொரு மாதிரி கேட்கட்டுமா? நீ என்னை மணந்து கொள்வாயா, ரதி?''

மணமா!?

ஒரு வினாடி கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது பாரதிக்கு.

மீண்டும் புலன்கள் வசத்துக்கு வந்தபோது முகத்தின் எதிரே சொடக்குப் போட்டுக் கொண்டு இருந்தான் அவன்.

''தி...திருமணம் என்றால் விளையாட்டு விஷயமா? முதலில்... முதலில் என்னைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்றாள் அவள் படபடப்பாக.

அவன் பதில் கூறாமல் புன்னகை செய்தான்.

''நான்... நான் ஒரு கொலை செய்துவிட்டு இங்கே வந்து ஒதுங்கியிருக்கலாம்...''

அவன் சிறுநகை செய்தான்.

''நான் முன்பு வேசித் தொழில் புரிந்தவளாகக்கூட இருக்கக்கூடும்.''

இப்போது அவன் உரக்கவே நகைக்கத் தொடங்கிவிட்டான்.

''ரதி, ரதி. உன்னைப்பற்றி உன்னைவிடவும் எனக்கு மிகவும் நன்றாகவே தெரியும்...'' என்றான் அவன் தன்னம்பிக்கையோடு.

''ஓ!'' என்றவளின் கண்களில் கனல் பறந்தது. ''என்னை விடவும் அறிவீர்களா?'' என்று சீறினாள்.

''ஷ்... இதற்குத்தான் காரமே வேண்டாம் என்றேன். காரணமே இல்லாமல் இப்போது என்ன கோபம்?''

''என்ன கோபம்? என்ன என்ன காரணம்!''

பெரு முயற்சி செய்து தன்னை நிதானப்படுத்திக் கொண்டு, ''எனக்கு உங்களிடம் காதல் கீதல் ஒன்றும் கிடையாது, மதுசூதனன்'' என்றாள் அவள்.

''அது எனக்கு நன்றாகவே தெரியும், பாரதி. மற்றபடி ஒருநாள் உடையைப் பற்றிப் பேசினால் ஒன்பது நாள் ஒதுங்கிக் கொள்ள முடியுமா?''

உடை... திடுக்குற்று நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

''அப்... அப்போது கண்டு கொண்டுதான் இருந்தீர்களா?''

''பின்னே? ஆனால் காணாதது போலவும் பழக வேண்டியிருந்தது, இல்லையானால் ஒரேயடியாய் ஓட்டுக்குள் சுருங்கிக் கொண்டு விட்டிருப்பாயே.''

இவனிடம் எளிதில் ஏமாந்திருக்கிறோமே என்று இருந்தது அவளுக்கு.

ஆனால் அந்தத் தோல்வியும் மனதிற்கு இதமாய் இருப்பதை உணர்கையில் அவள் மீண்டும் அதிர்ச்சியுற்றாள்.

''அப்போதே என் மனம் எனக்குப் புரிந்து போயிற்று'' ஆனால் உனக்கு இந்த நினைப்பே வரவில்லையே. ஆனாலும் ஒரு நம்பிக்கை. நீ இந்த அளவு நட்புடனும் ஒருவரோடும் பழகவில்லை. இந்த நட்பு ஒருநாள்...''

இந்த இக்கட்டிலிருந்து விடுவித்துக் கொள்ள வழிதேடி மனம் அலைய ஒன்று கண்டவளாகக் குறுக்கிட்டு, ''ஆனால் அந்த அஸ்லாம் மில்லுக்கு நீங்கள்தான் போயாக வேண்டும் என்று என்ன கட்டாயம்? உங்கள் பார்ட்னர்கள் வேறு மற்றவர்கள் - இப்போதும் யாராவது பார்த்துக் கொண்டுதான் இருப்பார்கள் இல்லையா?'' என்று அவன் பேச்சில் குறுக்கிட்டுக் கேட்டாள் பாரதி.



''மூன்று பேர் இருக்கிறார்கள் பாரதி. ஆனால் என்ன செய்வது? தேவைப்பட்டபோது மட்டும் காரணம் காட்டி, மற்றபடி சுமூகமாகவும் எங்களுக்கு சாதகமாகவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நான்தான் மிகவும் கெட்டிக்காரனாம் — அவர்கள் சொல்கிறார்கள்'' என்று காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு கண் சிமிட்டிச் சிரித்தான் அவன்.

அது மெய்யே என்று அவளது அனுபவம் கூறியது.

பண்ணைக் குடும்பத்தைத் திரட்டியது அவளது குறுக்கிடலை விலக்கியதோடு ஓர் இனிய உறவையும் ஏற்படுத்திக் கொண்டது...

இப்போதும் வென்று விடுவானோ என்ற அச்சம் உண்டாயிற்று.

அதை மெய்ப்பிப்பது போல, ''என்னுடன் மட்டுமே நீ கொண்ட இந்த நட்பு ஒருநாள் என்னிடம் காதலாக மாறும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என்று விட்ட இடத்திலிருந்து விஷயத்தை விடாமல் தொடர்ந்தான் மதுசூதனன்.

''நாம் நல்ல நண்பர்களாகவே இருக்கலாம் மது'' என்றாள் பாரதி கெஞ்சுதலாக.

''நீ 'மது' என்று அழைத்தால் இளகிவிடுவது என் வழக்கம். ஆனால் இப்போது அதற்கு மேலாக 'மதன்' என்ற அழைப்புக்காக ஏங்கத் தொடங்கி விட்டேனே'' என்றான் அவன் பதிலாக.

''அத்தோடு இன்னொன்றும்கூட, இனி மில் விஷயமாக நான் அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டியிருக்கும். அப்போ தெல்லாம், நான் இல்லாத நேரத்தில் எவன் வந்து உன்னைக் கொத்திப் போய் விடுவானோ என்ற பயத்திலேயே வாழ்வது என்றால் அது என்னால் முடியாத காரியம் அதனால் ஒன்று மணம் அல்லது பிரிவு'' என்றது அவனது உறுதியான குரல் தொடர்ந்து.

''பி... பிரிவா?'' என்று மீண்டும் அதிர்ந்தாள் அவள்.

''ஆம். இந்த மில்லை பிரதீபன் தந்தையிடம் விட்டு விட்டு நான் அஸ்ஸாம் சென்று விடுவேன். ஆனால், அந்த முடிவு உன் கையில்'' என்று எங்கோ வெறித்தான் அவன்.

''மது... ப்ளீஸ்... நாம் இப்படியே...''

''நோ'' என்றான் அவன் ஒற்றைச் சொல்லாக.

குரலில் காணப்படாத இளக்கம் முகத்தில் காணுகிறதோ என்று ஊன்றித் தேடிப் பார்த்தாள் அவள். அது இரும்பாகவே இருக்கவும் வெகுவாக மனம் சோர்ந்து போனாள்.

''எனக்கு இப்போதே பதில் சொல்லியாக வேண்டும் என்று இல்லை பாரதி. நாளை மாலையில் மற்ற பார்ட்னர்கள் எல்லோரும் கிளம்புகிறார்கள். நான் மதியம் என் முடிவைச் சொல்லி அதற்கேற்ப ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அது உன் முடிவுதான் ரதிம்மா. இரவு முழுவதும் யோசி. நாளை மதியத்திற்குள் உன் முடிவைச் சொல்லு. இப்போது வா, உன்னைக் கொண்டு போய் விடுகிறேன்.''

அவளது இருப்பிடத்தைச் சென்று அடையும் முன்பே அவளுக்கு ஒன்று தெரிந்து போயிற்று.

அவனை அடியோடு பிரிவது அவளால் இயலாத காரியம்.



அவளது உடையைப் பற்றி அவன் பேசியபோதே அந்த நாலு நாட்களோடு தொடர்ந்து ஒதுங்கிப் போயிருந்தால் இவ்வளவு துன்பமாய் இருந்திராதோ? — அப்போதும் கூட ஐந்தாம் நாள் அவன் மாம்பழத்தோடு வந்து நின்றதும் மனம் துள்ளியது நினைவு வந்தது.

இப்போதோ அவனைப் பாராமல் ஒரு முழு நாள் வாழ்வதுகூடத் தாங்க முடியாது போலத் தோன்றியது.

தொடர்ந்து பல நாட்கள்... பல வருடங்கள்... கடவுளே எப்படி முடியும்? அவளால் எப்படித்தான் முடியும்?

ஆனால் அவனோ இரண்டில் ஒன்றுதான் என்கிறானே!

ஆனால் திருமணம் என்கிற வார்த்தையும் அவளை மருட்டி விரட்டித்தான் அடித்தது.

தன் வீடு வந்து கார் நிற்பதை உணர்ந்த பாரதி அவனிடம் ஒன்றுமே சொல்லாமல் இறங்கிச் சென்றாள்.

அவனும் புரிந்து கொண்டாற்போல எதுவும் பேச வில்லை.

அவள் கதவைத் திறந்து வீட்டினுள் செல்லும் வரை காத்திருந்துவிட்டுக் காரை எடுத்தான்.

இரவெல்லாம் பாரதி தவியாய்த் தவித்தாள்.

தனது தவிப்பை ஒருவரிடம் சொல்லி ஆறுதலோ அமை தியோ பெறக்கூட ஒரு ஜீவன் இல்லாது போன துன்பம் வேறு அவளை வெகுவாகத் தாக்கியது.

எத்தனையோ யுகம் போலத் தோன்றிய ஐந்தாண்டு காலத்துக்குப்பின் தாயின் நினைவில் வெகுவாக அழுதுவிட் டாள்.

வெகு நேரம் ஆற்றவோ, தேற்றவோ ஆளின்றி அழுத வள் கடவுள் அருளால் அப்படியே ஒருவாறு உறங்கிப் போனாள்.

காலை எழுந்தபோது ஏதோ ஒருவகையில் மனதில் ஒரு முடிவு தோன்றிவிட்டிருந்தது.

முடிவு கண்டுவிட்டதால் அவள் மனம் ஒன்றும் லேசாகி விடவில்லை.

சொல்லப் போனால் இரும்பு குண்டு ஒன்றை அங்கே ஏற்றி வைத்து விட்டாற்போலப் பாரமாய்த்தான் இருந்தது.

ஆனால் ஒன்று — அவளால் இனியும் உயிர்வாழ முடியும்.

## 8

மறுநாள் தாயுமானவரிடம் ஓர் இரண்டு மணி நேரம் விடுப்புப் பெற்றுக் கொண்டாள் பாரதி.

அவரிடம் சொல்லாமலே சென்றாலும் அவளிடம் அவர் ஏதும் கெடுபிடி செய்து கேட்பவர் இல்லை; அவளது எந்த வேண்டுகோளையும் அவர் மறுப்பவரும் இல்லை. அந்த அளவுக்கு அவளிடம் நம்பிக்கை அவருக்கு.

அதேபோல அப்போதும் என்னவென்று கேளாமலே சரியென்று அனுப்பி வைத்தார்.

அவளை மதுசூதனன் எங்கிருந்து கண்டானோ, மில் சைட்டுக்காகச் சாலையிலிருந்து அவளது சைக்கிள் இறங்கு முன்னதாக ஜீப், அவளை அணுகிவிட்டது.

அவனை நேருக்கு நேர் கண்டதும், முன்னர் நினைத்து வந்தது எதையும் சொல்லத் தோன்றாமல் மலைத்து நின்றாள் பாரதி.

என்னவோ, அவன் முகத்திலும் நல்வரவின் அறிகுறியாகத் தோன்றிய அரை முறுவல் தவிர வேறு எதுவும் இல்லை.



சற்று நேரம் திணறிவிட்டு, ''வந்து எனக்கு உங்களிடம் காதல் கண்ணராவி எதுவும் கிடையாது. அதனால் காதல் மனைவியாக என்னிடம் எதையும் எதிர்பார்க்கவில்லையென்றால் எனக்கு சம்மதம்'' என்றாள் பாரதி வெடுவெடுப்பாக.

''இதையே கொஞ்சம் சிரித்துக் கொண்டு சொல்லலாம் இல்லையா?'' என்றான் அவன் கனிந்த குரலில் சிறு கேலியோடு.

அந்தக் கனிவில் அவளுக்கு மீண்டும் மூச்சடைத்தது.

கலக்கத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

கண்களில் ஒளியுடன் தன்னை நோக்கி அவன் வருவதைக் கண்டதும் சட்டெனப் பின் நகர்ந்தாள்.

அப்படியே நின்று விட்டவன், ''ரதி, நான் உன் நண்பன் அல்லவா? என்னிடம் என்ன பயம்?'' என்று முகத்தில் இளநகை இலங்கக் கேட்டான்.

கூடவே, ''நான் உன் அன்பன் அல்லவா? என்னிடம் என்ன ஒதுக்கம்?'' என்று கண்கள் கேட்டதைக் காணாதது போல ஒதுக்கி, ''நண்பராகவே இருங்கள் என்றால் கேட்க மாட்டேன் என்கிறீர்களே'' என்றாள் அவள் வருத்தத்துடன்.

ஒரு விரலைத் தூக்கிக் கண்டிப்பது போலக் காட்டி, ''ஊகூம். அந்தப் பேச்சு இனி வேண்டாம். என்னைப் பொறுத்த வரையில் இனி நிம்மதியாக இருப்பேன். திருமணம் ஆகிவிட்டால் உனக்கும் இந்தப் பயம் போய்விடும்'' என்றான் அறிந்தவனைப் போல.

''என்ன பயம்?'' என்றாள் அவள் திடுக்குற்று.

''கணவன், குடும்பம்... அந்த உறவு பற்றி அறியாததால் வந்த பயம்தான்'' என்றான் அவன் மெல்லச் சிரித்தபடி.

அவன் என்ன நினைக்கிறான் என்பது புரிந்து பாரதியின் முகம் சிவந்தது.

ஆனால் இவன் எப்படி இந்த மாதிரி எண்ணலாம் என்ற ஆத்திரமும் வந்தது.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது என்று உங்களுக்கு என்ன நிச்சயம்?'' என்றாள் கோபமாக.

அவன் மேலும் லேசாக நகைத்தானே தவிரப் பதில் ஏதும் தரவில்லை.

திருமணத்தை விரைந்து நடத்துவதில், திருமணச் செய்தியைப் பரப்புவதில் அவன் தீவிரமாக இருந்தான்.

அவள் மாறிவிடக் கூடாது என்ற எண்ணமோ?

உடனடியாக வந்து தாயுமானவரிடம் சொன்னான். அவருக்கு மிகுந்த சந்தோஷம்தான்.

உறவு என்று ஒரு சித்தப்பா தவிரக் குறிப்பிடும்படியாக யாரும் இல்லை; அவரால் அதிகம் நடமாட முடியாததோடு இதுபோல விஷயங்களில் அக்கறையும் கிடையாது. எனவே அவருக்குக் கடிதம் மட்டும் போதும் என்று எழுதினான்.

ஆனால் வந்திருக்கும் தொழில்முறைப் பார்ட்னர்கள் தான் உறவு மாதிரி. அவர்களிடம் சொல்லாவிட்டால் வருத்தம் கொள்வார்கள் என்று அவர்களிடம் விஷயத்தை அறிவித்தான்.

''இவன் முன்னிலையில் கைகளைப் பற்றினேன் என்று தான் நேற்று அப்படி ஓடினீர்களா?'' என்று குறும்புச் சிரிப்புடன் ஆங்கிலத்தில் அந்தப் பிரதீப் வினவியபோது அவளுக்குச் சங்கடமாகப் போயிற்று.

''இட்ஸ் ஓ.கே. பாபி, இங்கே தமிழ்நாட்டில் தொட்டுப் பேசுவது வழக்கம் இல்லை; அது தப்பும்கூட'' என்று மதுசூதனன் சொன்னான் என்று சமாதானமும் அவனே கூறினான்.



முந்தைய தினததில் தனது நடத்தையை மதுசூதனன் எப்படி சமாளித்தான் என்பது பாரதிக்கு அப்போது புரிந்தது.

இவ்வளவு சுலபமாக 'அண்ணி' என்று அழைப்பவனை அவமானப்படுத்திவிட்டது குறித்துக் கூச்சமாகவும் இருந்தது.

ஆனால் திருமணம் திருமணம் என்று எல்லோரும் பேசப்பேச அவளுக்கு நெஞ்சுக்கூடு காலியாகிவிட்டது போன்ற உணர்ச்சியே மேலோங்கியது.

முடிந்த அளவு எல்லோரையும் முக்கியமாக மதுசூதனனைத் தவிர்த்தாள்.

அவனும் ஏதோ அவளைப் புரிந்துகொண்டாற் போல அவளிடம் நெருங்கிப் பேச முற்படவில்லை.

தேவையானவற்றைத் தாயுமானவர் மூலமாகவே நடத்திக் கொண்டான்.

ஒவ்வொரு நாளும் விடிவதும் முடிவதுமாகக் கழிந்து திருமண தினமும் வந்தது.

மதுசூதனனுடைய தொழில்துறை நண்பர்கள் சிலர் மீண்டும் வந்து திருமணத்தில் கலந்து கொண்டனர்.

மதுசூதனனுடைய சித்தப்பா விலை உயர்ந்த பரிசுடன் தன் ஆசியையும் கடித மூலம் அனுப்பி வைத்தார்.

பண்ணை வீட்டுப் பெண்கள் 'நாங்கள்' அப்பவே நினைத்தோம் என்று ஆனந்தப்பட்டார்கள்.

ஆசிரமத்துப் பிள்ளைகள் புத்தாடை அணிந்து குதூகலத்துடன் வளைய வந்தனர்.

ஐந்தாண்டுகளாக பாரதி பார்த்துப் பழகிய ஊர்மக்கள் நடுவே திருமணம் நல்லபடியாக நடந்தது.

எளிமையாகவும்கூட.

விருந்து நடந்தது.

இன்னொரன்ன வெளி விஷயங்கள் எல்லாம் முடிந்த பிறகு தன் உபயோகத்திற்காக வாடகைக்கு எடுத்திருந்த வீட்டில் தனியறையில் மனைவியை ஆவலோடு நோக்கிய மதுசூதனன் திகைப்புற்றான்.

வெறித்த அவள் பார்வையில் என்ன இருந்தது? அருவருப்பு? ஆத்திரம்? அச்சம்? அல்லது இந்த மூன்றின் கூட்டுக் கலவை?

லேசாக முறுவலித்தான் அவன்.

ஆனால் அவளிடமிருந்து அதற்கு எந்தவித எதிரொலியும் பிறப்பதாக இல்லை.

மீண்டும் அதே வெறுப்பு.

''ரதி, என்னம்மா?'' என்று அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தான்.

''அங்கேயே நில்லுங்கள்'' என்று பதறியபடி அவள் வேகமாக பின்னடைவதைக் கண்டு புருவ மத்தியில் முடிச்சு விழ நின்றான் அவன்.

விழுந்த முடிச்சு விரைவிலேயே மறைய, ''நீ மிகவும் களைத்துப் போய் இருக்கிறாய் என்று நினைக்கிறேன். இந்த அமளியின் நடுவே உன் சாப்பாட்டை யாராவது கவனித்தார்களோ என்னவோ? ஏதாவது சாப்பிட்டாயா ரதி?'' என்று இதமாக வினவினான்.

''ஆம்'' என்பதுபோலத் தலையாட்டினாள் அவள்.

''ஓ.கே. நீ, இந்தப் பட்டுச் சேலையை மாற்றிக் கொண்டு கட்டிலில் தூங்கு. நான் அடுத்த அறைக்குப் போகிறேன்'' என்று ஒரு தலையணையை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

ஆசைகொண்டு மணந்தவன் அவன்.



அவனும் எத்தனையோ கற்பனைகள் செய்திருப்பான்.

அவளது ஒதுக்கத்தை உணர்ந்தவுடன் ஒரு பேச்சின்றி விட்டுக் கொடுத்து வெளியேறுகையில் ரொம்பவும் பிழை புரிந்தவள்போலப் பயங்கரமாக உணர்ந்தாள் பாரதி.

அவன் அறைவாயிலை அடையும்வரை உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றவள் மெதுவாக, ''சாரி'' என்றாள்.

திரும்பி தன் வெண்ணிறப் பற்களை அழகுறக் காட்டி பளிச்செனப் புன்னகை செய்தான் மதுசூதனன். ''எதிர்காலத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது பாரதி. குட் நைட்'' என்று கூறி வெளியே சென்றான்.

இரவு முழுவதும் பாரதியால் தூங்க முடியவில்லை.

எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையா?

என்ன நம்பிக்கை? சே.

அவளைப் பொறுத்தவரை எந்தவித நம்பிக்கைக்கும் இடமே இல்லை என்பது இப்போது வெகு தெளிவாகத் தெரிந்தது.

அவளை மணந்தது எவ்வளவு பெரிய பிசகு என்பதும் மிக நன்றாகவே புரிந்தது. மிகவும் பயங்கரமான பிசகு. வாணலிக்குத் தப்புவதாக எண்ணிக் கொண்டு எரி நெருப்பில் அவனையும் இழுத்துக் கொண்டல்லவா வீழ்ந்து விட்டாள்.

வெகுநேரம் மனம் உளைந்துவிட்டு ஒருவாறு அவள் தூங்கி எழுந்தபோது மணி ஏழாகி இருந்தது.

அதைவிட முக்கியமாய் அவன் எடுத்துச் சென்ற தலையணையும் அருகே இருந்தது.

ஒட்டியிருந்த குளியலறையில் அவசரமாக முகம் கழுவிக் கொண்டு வெளியே சென்றால் அவனைக் காணவில்லை.

விசாரித்த போது, ''அய்யா ஓடப் போயிருக்கிறாங்கம்மா'' என்றான் வேலையாள்.

ஜாகிங்!

சற்று விரைவாகவே தன் குளியலை முடித்துக் கொண்டு அவள் வந்தபோது மதுசூதனன் திரும்பி வந்திருந்தான்.

வியர்வை அடங்குவதற்காகவோ என்னவோ, நின்றபடியே ஃபைனான்ஷியல் டைம்சைப் படித்துக் கொண்டு இருந்தான்.

உடம்போடு ஒட்டிய ஸ்போர்ட்ஸ் பனியனும் ஷர்ட்டுமாக உயரமாய் நின்ற அவனது தோற்றம் அவளை என்னவோ செய்தது.

அரவம் உணர்ந்து பத்திரிகையைத் தாழ்த்தியவன் அவளைக் கண்டதும் முகம் மலரப் புன்னகை செய்தான். ''ஹலோ, குட்மார்னிங்.''

கஷ்டப்பட்டு ஒரு முறுவலைக் கொணர்ந்து, ''குட்மார்னிங்'' என்றாள் பாரதி.

''பத்திரிகை படிக்கிறாயா? உனக்கு ஹிந்துதானே பிடிக்கும் என்றாய்...'' என்று மேசைமேல் கிடந்த ஹிந்து பத்திரிகையை அவள் புறமாய் நகர்த்தினான் அவன்.

அவனைப் பொறுத்தவரையில் முந்தைய நாள் நிகழவே இல்லாததுபோலத் தோன்றியது.

ஆனால் நிகழ்ந்ததே.

அதை மறக்கவோ, மறந்ததுபோல நடிக்கவோ பாரதிக்கு இயலவில்லை... இந்த வேதனையைத் தாளவும் முடியவில்லை.

''நான் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்'' எனப் பட்டெனத் தொடங்கிவிட்டாள்.



கையிலிருந்த பத்திரிகையை மடித்தபடி ''என்ன?'' என்று அவளை நோக்கினான் அவன்.

அவன் முகத்தைப் பார்த்துப் பேச முடியாமல், ''நமது திருமணம் ஒரு பிசகு என்று நினைக்கிறேன்'' என்றாள் அவள் தரையில் பார்வையைப் பதித்து...

''ஏன்?'' என்றான் அவன் அமைதியாகவே.

''...எனக்கு... எனக்கு இந்த உறவு பிடிக்கவில்லை.''

''இதில் பயப்பட ஒன்றும் இல்லை, பாரதி'' என்றான் அவன் கனிவான குரலில்.

ஆனால், ''பயப்படுவதாக யார் சொன்னது?'' என்று சீறினாள் பாரதி. ''எனக்குப் பிடிக்கவில்லை அவ்வளவுதான்'' என்றாள் முடிவாக.

''இயற்கையின் வழிவந்த ஒருத்தி இயற்கையின் தத்துவமே பிடிக்கவில்லை என்கிறாயே!'' என்று வியந்தவன் ''இந்த மாதிரியே நம் பெற்றோரும் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? நாம் இருவரும் பிறந்திருப்போமா? எண்ணிப் பார்'' என்றான்.

''ஏன் பிறந்தோம் என்றுதான் இருக்கிறது'' என்று மீண்டும் வெடித்தாள் பாரதி.

''பாரதி!'' என்று அவளை நோக்கி ஓர் எட்டு எடுக்கப் போனவன் அதை மாற்றிச் சென்று சோபாவில் அமர்ந்தான். ''நீயும் உட்கார்'' என்று தன் அருகே இருந்த இடத்தைக் காட்டினான்.

அவள் எதிரே கிடந்த சோபாவை நெருங்கவும், ''அங்கல்ல, இங்கே'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

''ஏன்?''

''அதை நான் கேட்க வேண்டும். இங்கே என்னோடு ஒரே சோபாவில் உட்கார்ந்தால் உன்னை விழுங்கி விடு

வேனா? அப்படிப்பட்டவனல்ல. நீ வேறு சோபாவில் உட்கார்ந்தால் என்னால் எழுந்து வந்து உன் அருகே அமர்ந்து உன்னை விழுங்க முடியாதா? சும்மா இங்கேயே உட்கார். ஒன்றும் பயப்படத் தேவையில்லை'' என்றான் அவன் குரலில் கண்டிப்புக் காட்டி.

உள்ளூரப் புகைந்த போதும் மறுக்கமாட்டாமல் சென்று அவன் அமர்ந்திருந்த சோபாவில் ஓர் ஓரமாய் அமர்ந்தாள் பாரதி.

''கவனி பாரதி. ஆண், பெண் உறவில் வெறுப்பு அடையவோ, பயப்படவோ எதுவும் இல்லை. நீ கண்டு ரசிக்கும் நீலவானம் போல, பிள்ளைச் சிரிப்புப் போல இதுவும் அழகான ஒன்றுதான்... இப்படி முகத்தைச் சுளிக்க தேவையில்லை பாரதி. இது மாறி இந்த உண்மை உனக்கும் ஒரு நாள் புரிந்தே தீரும். அதுவரை காத்திருக்க என்னால் முடியும். அதுவரை நீ இந்த மாதிரிப் பயந்து ஒதுங்கத் தேவையே இல்லை. ஐந்து மாதங்களாக என்னைப் பார்த்துப் பழகி இருக்கிறாயே, என்னைத் தெரியவில்லை நான் என்ன மிருகமா? என் மேல் நம்பிக்கை இல்லையா? ஷ் ரதி, என்ன இது இப்போது ஏன் இந்தக் கண்ணீர்? ம்?''

இவன் முன் இரண்டாவது தடவையாக வசமிழக்கிறேன். என்ன மடத்தனம்? என்று தன்னையே கடிந்து கொண்டு விழிநீரைச் சுண்டிவிட்டாள் பாரதி. சமாளித்துக் கொண்டு, ''உங்கள் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது மது. ஆனால் என் மனம் மாறக்கூடும் என்பதில்தான் அணுவளவு நம்பிக்கைகூட இல்லை. அதனால்...'' என்று பிடிவாதத்துடன் தொடங்கியபோது அவளையும் மீறிக் குரல் உள்விழுந்தது.

''அதனால்?'' என்றான் அவன் அவளையே பார்த்து.

''வ...வந்து...டை... டைவர்ஸ் செய்துவிடலாமா?

''டைவர்சா? நேற்று திருமணம் இன்று விவாகரத்தா இதெல்லாம் அவ்வளவு லேசாகப் போய்விட்டதா?''



''உன்னோடு பழகத் தொடங்கிய பிறகு முதல் தடவையாக உன்மீது நிஜமான கோபம் வருகிறது பாரதி'' என்றான் அவன் நிதானமாக.

அவன் குரலை உயர்த்தவோ பேச்சைத் துரிதப்படுத்தவோ இல்லைதான்.

ஆனாலும் அவனுடைய சினத்தை உணர முடியவும் மீண்டும் அவளது விழிகளில் நீர் பெருகியது.

கோழை போல அழுகிறோமே என்று அவளுக்கு அவமானமாகத்தான் இருந்தது. ஆனால் தன்னிச்சையாகப் பெருகிய கண்ணீரை அவளால் அடக்க முடியவில்லை. அவனது கோபத்துக்கு இவ்வளவு சக்தியிருப்பதை எண்ணிப் பார்க்கையில் விழிநீர் மேலும் பெருகியது.

குனிந்த தலை நிமிராமல் கண்ணீர் வடிக்கும் மனைவியைச் சில கணங்கள் நோக்கினான் மதுசூதனன்.

தன்னிச்சையாக அவள் புறம் செல்ல இருந்த கரங்களை கட்டுப்படுத்திக் கொண்டு எழுந்தான்.

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு மீண்டும் பாரதியிடம் திரும்பினான்.

''இந்த விவாகரத்துப் பேச்செல்லாம் இனிமேல் வேண்டாம் பாரதி...''

''பின்னே இந்தப் பிரச்சனைக்கு வேறு என்ன தீர்வு?'' என்றாள் அவள் கண்ணீர் குரலில்.

''இருக்கிறது பார் பாரதி. கற்றுத்தர ஆள் இல்லாத கொடுமை, நிழலைப் பூச்சாண்டியாக்கிப் பயப்... இல்லை வெறுக்கிறாய். போகட்டும். இப்போதைக்கு இதுபற்றிய எண்ணத்தையே விட்டுவிடு. உன் மனம் எப்படியும் மாறும்; இயற்கையின் நியதி ஒருநாள் வென்றே தீரும் என்பதில் எனக்கு நிச்சயமான நம்பிக்கை இருக்கிறது.

''எனக்கு இல்லையே...'' என்றாள் அவள் குறுக்கிட்டு ''அத்தோடு...''

''அத்தோடு?''

''ஓ... ஒன்றும் இல்லை. எனக்கு அடியோடு பிடிக்க வில்லை...''

''உனக்கும் பிடித்தம் வரும். முதலில் இந்த அழுகையை நிறுத்து. வராது வராது என்கிற ஜபத்தை விடு. எதற்கும் 'பாசிடிவ் அப்ரோச்' வேண்டும் என்பார்கள். நடக்கும் என் கிற நம்பிக்கையை உண்டுபண்ணிக் கொள். ஒருநாள் தானாக இந்த வெறுப்பு மாறி, மறைந்தே போய்விடும். அதுவரையில் நாம் நேற்றுவரை இருந்தது போலவே நண்பர்களாகவே இருக்கலாம் ஓ.கே.?''

உள்ளூரக் கொஞ்சமும் எதிர்காலம் பற்றி எந்த நம்பிக் கையும் இல்லாத போதும் வேறு விளக்கம் ஏதும் கொடுக்க முடியாத நிலையில் அவளும் ''ஓ.கே.'' என்று சொல்லத்தான் வேண்டியிருந்தது.

அவன் முன்போலவே கலகலப்பாகவே பழகினான்.

ஆனால் அவளால் அது முடியவில்லை.

சும்மாவே அவளுள் இருந்த கலக்கம் பாதி.

அவ்வப்போது எதிர்பாராத தருணங்களில் திரும்பிப் பார்க்கையில் அவன் முகத்தில் காணப்பட்ட பாவம் அல்லது தாகம் அவளை விரட்டி அடித்து இன்னமும் ஒதுங்கச் செய்தது.

அதை வெளிப்படையாகத் தெரியா வண்ணமும் செய்ய வேண்டியிருந்தது.

அந்த மாதிரி அவள் ஒதுங்கும் போது அவளுக்குப் புகலிடமாயிருந்த ஒரே இடம் ஆசிரமம்.

விளைவாக ஒருவாரம் தனியாக மாலை வேளையைக் கழித்தான் அவன்.

அடுத்த நாள் மாலை வேளையில் தாயுமானவரை ஆசிரமத்தில் பார்த்த பாரதி வியப்படைந்தாள்.



''கடையை விற்று விடுகிறேன்'' என்று குண்டைத் தூக்கிப் போட்டார் அவர்.

''பின்னே ஆசிரமத்துக்கு... செலவுக்குப்பணம்?''

''ஆசிரமத்தை மில் நிர்வாகம் ஏற்றுக் கொள்கிறது பாரதி. தொடங்கியவன் என்கிற அடிப்படையிலும் நானும் இங்கே தங்கிக் கொள்ள அனுமதி தருகிறார்கள். முழு நேரமும் இனி இந்தப் பிள்ளைகளோடேயே கழிக்கலாம். கணக்கு வழக்குகளை எல்லாம் என்னிடம் ஒப்படைத்து விட்டார்கள். கூடவே பிள்ளைகளுக்காக ஒரு நர்ஸ், ஒரு ஆயா. பள்ளி வசதி... இனி நீ இந்த வேலை ஏதும் செய்யத் தேவையே இல்லையம்மா'' என்றார் மகிழ்ச்சியோடு.

அவரவர் காணுகிற விதத்தில்தான் விஷயம் தோன்றும்.

இங்கே நீ அதிகப்படி. உன் இடம், என் வீடு என்று மதுசூதனன் சொல்லாமல் சொல்வது போல் இருந்தது அவளுக்கு.

''அத்தோடு இன்னொரு விஷயம் பாரதி. நீ இனி முன் போலச் சாதாரண பாரதி அல்ல. மிஸஸ் பாரதி மதுசூதனன். பணக்காரர் மனைவி. இப்படி வெகுநேரம் கழித்து இந்தப் பாதையில் செல்வது சரியில்லை. யாராவது கடத்திச் சென்று பணம் கேட்க முயற்சித்தால் என்ன செய்வது? புத்தி சொல்ல இந்த கிழவனுக்கு மூளையில்லையா என்று என் தலையைத் தான் உருட்டுவார்கள். அதனால் இங்கே வருவதைக் குறைத் துக் கொண்டு, வந்தாலும் நேரத்தோடு திரும்பிவிடம்மா. சொல்லப் போனால் நீ வந்தால்தான் தீரும் என்கிற நிலையும் இப்போது இல்லை பார்'' என்று நல்லது சொல்லி வழிய னுப்பி வைத்தார் தாயுமானவர்.

## 9

ஆசிரமப் பணியில் அமர்த்தப்பட்டிருந்த ஆயா, நர்ஸ் டீச்சர் எல்லாரையும் பார்த்துவிட்டுத் திரும்பி வந்த பாரதிக்கு ஒரே யோசனை.

எல்லோரும் அவரவர் துறையில் பயிற்சி பெற்றவர்கள். சம்பளம் எவ்வளவு இருக்கும்? ஆசிரமத்தின் அன்றாடச் செலவு அவள் அறியாததா?

இவ்வளவு பணத்தை மில்லிலிருந்து இவனாக இஷ்டம் போல எப்படிச் செலவழிக்க முடியும்?

இவன் தன் விருப்பம்போல் மனைவியை வீட்டில் கட்டிப்போட இவ்வளவு பணத்தை எடுத்தால் மற்ற பங்குதாரர்கள் எதிர்க்க மாட்டார்களா?

எண்ணியதை வேறுவிதமாக அவனிடம் விசாரித்தாள்.

அவனது கண்கள் பளிச்சிட, ''நோ ப்ராப்ளம்'' என்றான். ''தர்மத்துக்கு என்று செலவு செய்யும்போது நிறைய வரி விலக்கு கிடைக்கும். கம்பெனிக்கு மதிப்பும் கிடைக்கும். அத்தோடு பாரதி, அரசாங்க உதவிகூட வருகிறது. அன்று மந்திரியிடம் பேசினேன் அல்லவா? ஏற்பாடு செய்திருக்கிறார். அத்தோடு பாரதி, அந்த ஆயா, நர்ஸ், டீச்சர் எல்லாம் இதற்காகத் தனியாகப் பயிற்சி எடுத்தவர்கள். அவர்களது வேலையில் தலையிடாமல் ஒதுங்கிக் கொண்டாய் என்றால் நன்றாக இருக்கும்.''

''அது சரிதான்'' என்று அவளும் தன் வாயாலேயே ஒத்துக்கொள்ளும்படித்தான் ஆயிற்று.

எவ்வளவு சாமர்த்தியமாய் வேலை செய்கிறான் என்று மனது கலங்கியபோதும் மாலையில் அவனோடு அமர்ந்து டீ அருந்தியபோது எல்லாம் மறந்து போயிற்று.



ஏதேதோ கதை சொன்னான்.

அவளைச் சிரிக்க வைத்துத் தானும் நகைத்தான்.

இருள் பரவுகையில் இருவருமாய் வாக்கிங் போனார்கள்.

அவன் கால் தடுமாறிவிட அவள்தான் பிடித்து நிறுத்த வேண்டியிருந்தது.

''உனக்குத்தான் அதிகம் பழகிய இடம். நீதான் எனக்கு வழிகாட்டி அழைத்துச் செல்லவேண்டும்'' என்று அவள் பின்னே அவளது கையைப் பற்றியபடியே வந்தான்.

வீடு சேர்ந்து பிரிந்து உறங்கச் செல்லும் வரையில் ஒன்றுமே தோன்றவில்லை அவளுக்கு.

ஏன் உற்சாகமாகக்கூட இருந்தது.

''என்ன இருட்டு!'' என்று அவன் தடுமாறியதை நினைத்துச் சிரித்தவளுக்கு சரேலென ஒன்று உறைத்தது.

அன்றொரு நாள் பாக்கெட்டில் இருந்து சின்ன டார்ச்சை எடுத்து அவன் அடித்தது நினைவு வந்தது.

இன்று மட்டும் அது இல்லாமலா கிளம்பி இருப்பான்?

அப்படியானால் அவன் நிஜமாகத் தடுமாறவில்லை.

இயற்கையின் நியதி வெற்றிபெற இவனால் ஆன உதவியா?

சந்தேகமே கொள்ளாமல் சந்தோஷப்பட்டதை எண்ணி நெஞ்சு கலங்கியது அவளுக்கு.

மறுநாள் அவன் வாயிலில் இருந்ததால், அவள் தோட்டத்தில் இருந்தாள்.

அவன் உணவருந்தும் வேளையில் இவள் குளித்துக் கொண்டிருந்தாள்.

அவன் உலாவ அழைக்கையில் இவளுக்குத் தலையை வலித்தது.

மறுநாள் மாலை வந்ததும் தோட்டத்தில் அவளைத் தேடி வந்தான் மதுசூதனன்.

''திருச்சியில் மில்லுக்காகச் சில சாமான்கள் வாங்க வேண்டியிருக்கிறது. இரண்டு நாட்கள் தங்க வேண்டியிருக்கும் வருகிறாயா?'' என்று அவளை அழைத்தான்.

''நான் எதற்காக? என்று ஐயத்தோடு நோக்கினாள் பாரதி.

''அப்படியே ஊர் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம் என்றுதான்'' என்றான் அவன் இலகுவாக.

அப்போதும் பாரதி தயங்கவே, ''பெரிய ஓட்டலில் தனி 'ஸுட்' இல்தான் தங்குவதாக ஏற்பாடு. இருவருக்குமே அதில் தனித்தனி அறைகள்தான். உள்ளே கதவைப் பூட்டிக் கொள்ளலாம். நீ இந்த மதனை எண்ணிப் பயப்படவே தேவையில்லை'' என்றான் அவன் கேலியாக.

அவன் குரலில் சற்று ஏளனமும் கலந்து இருந்தது.

''உங்களிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது'' என்றாள் அவள்.

''ஓ'' என்று அவளைக் கூர்ந்து பார்த்தான் அவன். ''அப்படியானால் நாளை கிளம்பும்படி இருக்கும். அங்கே உள்ள ஏற்பாடுகளை நான் கவனித்துக் கொள்கிறேன். நீ மட்டும் இந்தத் தலைவி கிலைவலி வராமல் பார்த்துக் கொள்'' என்றவன் அவளது முகம் கன்றவும் சிரித்து, லேசாக அவளது கன்னத்தில் தட்டிவிட்டுப் போனான்.

திருச்சியில் அறையில் விட்டுவிட்டு ''ஜாக்கிரதையாக இருந்து கொள். ரொம்பவும் போரடித்தால் ரூமைப் பூட்டிக் கொண்டு இந்த ரோடு அளவிலேயே சுற்றிப் பார்த்துவிட்டு திரும்பிவிடு. மதிய உணவை அறைக்கே வரவழைத்துச் சாப்பிடு'' என்றெல்லாம் கூறிக் கொஞ்சம் பணத்தையும் கொடுத்துவிட்டு போனவன் மாலையில் தான் வந்தான்.



வந்ததுமே ''வா வா வா. கொஞ்சம் வெளியே சுற்றி விட்டு வரலாம்'' என்று அழைத்துச் சென்றான்.

சுற்றுவது என்றால் கடைத் தெருவையே வாங்குவது என்று அவனுடைய அகராதியின் அர்த்தமோ என்று பாரதிக்குத் தோன்றியது.

நன்றாக இருக்கிறது என்று அவள் சொன்னதை எல்லாம் வாங்க முனைந்தான்.

பலசமயம் அவனைத் தடுக்க அவள் பெரும்பாடுபட வேண்டியதாயிற்று. பிறகு நன்றாய் இருக்கிறதா என்று அவன் கேட்டால்கூட இல்லை என்றாள். புரிந்து கொண்டு அவனாகவே வாங்கலானான்.

துணிமணிகளோடு இரண்டு செட் நகைகூட. நகைக் கடைக்குள் ஏறியதும் அவளுக்கு ஒருமாதிரி ஆகிவிட்டது. இதுவரை அவன் வாங்கிய வகையில் பார்த்தால் இங்கும் சற்று அதிக விலை உள்ளதாகத்தான் வாங்கக்கூடும் என்று ஊகித்தாள். ஆனால் திருமண வாழ்வை மறுத்துவிட்டு இதையெல்லாம் பெற்றுக் கொள்வது என்றால் அவளுக்குக் கஷ்டமாய் இருந்தது.

எனவே அவன் கேட்டதை எல்லாமே மறுத்தாள்.

அவளை ஒருதரம் ஆழம் பார்த்துவிட்டுத் திரும்பிய அவன் அதன்பிறகு அவளை அபிப்ராயம் கேட்கவே இல்லை. தானாகவே இரண்டு செட் நகைகளை வாங்கிக் கொண்டு வெளியேறினான்.

காரில் ஏறியதும், ''இந்த நகை துணிகளைக் கொடுத்து உன்னை — உன் உடலை விலைக்கு வாங்கப் பார்க்கிறேன் என்று நினைத்தாயா? அந்த மாதிரி உன்னை நானே அவமானப்படுத்துவேனா? அல்லது நீ அவ்வளவு சீப் என்று எண்ணியிருந்தால் உன்னை மணந்திருப்பேனா?'' என்று கோபமாகக் கேட்டான்.

''நான் அந்த மாதிரி நினைக்கவில்லை. உங்கள் வாழ்வை வீணடித்துவிட்டு வட்டியாக நகைகளை வேறு

வாங்கிக் கொள்வதா என்று கஷ்டமாக இருந்தது'' என்றாள் அவள் மெதுவாக.

''தப்பா நினைத்ததற்கு சாரி'' என்று உடனே முகம் மலர்ந்தான் அவன். ''அத்தோடு வாழ்வு வீணானதாக யார் சொன்னது? நீ என் மனைவி என்பதே எனக்கு எவ்வளவு திருப்தியைத் தருகிறது தெரியுமா?'' என்று மீண்டும் அவன் தொடர்ந்ததும் தொண்டையை அடைத்தது அவளுக்கு.

காரை ஓட்டியபடி அவன் தொடர்ந்தான். ''நகை, துணிமணிகளில் உனக்கு ஆர்வம் இல்லை என்பது எனக்குத் தெரியும் பாரதி.''

இல்லையா?

'மெல்லிசாய் ஜரிகை போட்ட பச்சைக்கலர் பட்டுப் பாவாடை பிறந்த நாளைக்கு வாங்கித் தாங்கம்மா...'

'சுதா ஒரு சின்ன ஜிமிக்கி போட்டிருந்தாள். அதே மாதிரி...'

''எப்படியும் திருமணத்தோடு அணிய உனக்கு வேண்டியிருக்கும் இல்லையா? அத்தோடு எனக்கும் உன்னை அலங்கரித்துப் பார்க்க ஆசை'' என்று லேசாகச் சிரித்தான் மதுசூதனன்.

திகைப்புடன் ''யாருக்குத் திருமணம்?'' என்று கேட்டாள் பாரதி.

''தேவுடா, நான் சொன்னது எதையும் நீ கவனிக்கவே இல்லையா? என் பேச்சின் மதிப்பு இப்போது தானே தெரிகிறது'' என்று சிரித்துவிட்டு சொன்னான். ''பிரதீப்புக்குத் திருமணம். இன்னமும் இரண்டு மாதங்களில் நாம் செல்ல வேண்டியிருக்கும்.

பேச்சு பொதுவான விஷயங்களில் சென்றது.

மறுநாள் மதியத்தோடு வெளி வேலையை முடித்துக் கொண்டு விட்டான் மதுசூதனன்.



நாலு மணி அளவில் மலைக்கோட்டையில் ஏறினார்கள். ''உனக்குக் கடவுள் பக்தி இல்லாவிட்டால் போகிறது. கலைக்கண்ணோடு பார்த்துவிட்டு வரலாமே'' என்று அழைத்துச் சென்றான்.

அவளுக்கா பக்தி கிடையாது. நினைவுதெரிந்த நாளில் இருந்து 'முருகா சரணம்' சொல்லாமல் படுக்கையை விட்டு அவள் எழுந்தது இல்லையே — கடைசி ஐந்து ஆண்டுகள் தவிர.

பேசத் தெரியாத நாளிலேயே இறை அன்பைப் புகட்டிய அன்னை...

கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது பாரதிக்கு.

எதையும் கவனிக்கும் அவனிடம் கண்ணில் தூசி என்று சொல்லி லேசாகக் கசக்கிவிட்டுக் கொண்டாள்.

போன ஜென்மத்து நினைவுகள் — எவ்வளவு கஷ்டப்பட்டு மனதின் பின்புறம் பூட்டி வைத்தவை, ஏன் இப்போது அடிக்கடி வந்து துன்புறுத்த வேண்டும் என்று உள்ளூர நொந்தபடியே படியேறினாள்.

தாயுமானவர் கோயிலை அடையுமட்டும்தான் இந்தச் சோர்வு.

பிறகு அங்குள்ள சித்திர வேலைப்பாட்டிலும், கோயிலில் இருந்து கொள்ளிடம், ஸ்ரீரங்கம் பார்ப்பதிலுமாக மீண்டும் உற்சாகம் உண்டாயிற்று.

உச்சிப்பிள்ளையார் கோயிலை அடைந்ததும் மாலை வெயில் பூசிய திருச்சியும், ஊரைச் சூழ்ந்திருந்த வயலும் சிலுசிலுத்த காற்றுமாக மனதிற்கு மிகவும் ரம்மியமாக இருந்தன.

சற்று நேரம் அங்கேயே அமர்ந்துவிட்டுக் கீழே இறங்கினர்.

''அப்பாடி'' என்று ஓர் ஐஸ்கிரீம் பார்லரில் உட்கார்ந்து ஆளுக்கு ஒரு கோன் ஐசை உண்டுவிட்டு வெளியேறியபோது

மதுசூதனன் சொன்னான். ''ரதி, இடதுபுறம் மெதுவாகப் பார், உன்னைப் பார்த்துத்தான் என்று நினைக்கிறேன். ஓர் அம்மா அழுகிறார்கள்!''

திரும்பிப் பார்த்த பாரதி, ''அம்மா!'' என்று கதறலுடன் ஓடிச் சென்று அந்தப் பெண்மணியை அணைத்துக் கொண்டாள்.

''என் கண்ணே'' என்று இனி அவளை விடவே போவதில்லை போல இறுக அணைத்துக் கொண்டாள் அந்தப் பெண்மணியும்.

''அக்கா, அக்கா!'' என்று பாரதியின் கையைப் பற்றிக் கொண்டு அழுகையும் சிரிப்புமாக நின்றாள் கிட்டத்தட்ட பாரதியின் சாயலுள்ள ஓர் இளம்பெண்.

''என்னடா கண்ணா? எப்படிம்மா இருக்கிறாய்?'' என்று பாரதியின் தலையை வருடினார் ஒரு பெரியவர்.

முகம் கன்ற அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தான் ஓர் இளைஞன்.

இத்தனையும் பார்த்துச் சில கணங்கள் பிரமித்துப் போனான் மதுசூதனன்.

சிரிப்பும் அழுகையுமான இந்தக் குடும்பச் சந்திப்பைச் சற்றுநேரம் பேசாமல் பார்த்திருந்து விட்டு அருகில் சென்றான்.

''பாரதி, இது கடைத்தெரு. நம் அறைக்குப் போய்ப் பேசலாமே'' என்று மனைவியை அழைத்துக் கூறினான்.

சுயஉணர்வு வந்தாற்போல திகைத்து நிமிர்ந்தாள் பாரதி.

தன் பெற்றோரையும் உடன் பிறந்தவர்களையும் விழிகள் விரிய வேதனையோடு மாறி மாறிப் பார்த்தாள்.

எதையோ சொல்ல முயன்று தோற்றாற் போல உதட்டைக் கடித்துக் கொண்டு ஒருகணம் பேசாது இருந்தாள்.

ஓர் பெரிய மூச்சுடன், ''அப்பா, இவர் என் கணவர். பெயர் மதுசூதனன்'' என்று அறிமுகம் செய்து வைத்தாள்.



இந்தச் செய்தி எல்லோருக்குமே அதிர்ச்சியாக இருந்தது என்பது வெளிப்படையாகவே தெரிந்தது.

இந்தப் பிரியமான குடும்பத்திலும் தனது திருமணம் பற்றிப் பாரதி ஏன் தெரிவிக்கவில்லை என்று அவனுள் எழுந்த கேள்விக்கு ஓரளவு பதில் உடனே கிடைத்தது.

அவர்களோடு வருவதற்கும் தயங்கி, பிரிவதற்கும் பிரிய மற்று நின்றவர்களை மதுசூதனனே வற்புறுத்தி ஓட்டல் அறைக்கு அழைத்து வந்தான்.

வரும்போதே, ''இங்கே எங்கே அப்பா'' என்று பாரதி வினவினாள்.

''இப்போது விழுப்புரத்தில் செட்டில் ஆகிவிட்டோம் கண்ணு. உன் அம்மா அம்புலிங்கேஸ்வரருக்கு ஏதோ வேண்டிக் கொண்டாளாம். செலுத்த வந்தால் ஆண்டவன் உன்னைக் கண்ணில் காட்டினார். நீ எங்கே இருக்கிறாய் தங்கம்''

''பூதலூர் பக்கத்தில் ஒரு கிராமம் அப்பா. அங்கே இவர் பேப்பர் மில் கட்டுகிறார்.''

ஒருவருக்கொருவர் இருப்பிடம்கூடத் தெரியாமல் என்ன பிரிவு...?

தங்கியிருந்த ஓட்டலில் ஸ்யூட்டுக்குள் சென்றதும் ''என்ன சாப்பிடுகிறீர்கள்?'' என்று விசாரித்து, அவர்கள் மறுக்க, மறுக்க ரூம் சர்விசில் ஆர்டர் கொடுத்துவிட்டு, ''நீங்கள் பேசிக் கொண்டு இருங்கள். எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது'' என்று கூறி அவர்கள் மனம் விட்டுப் பேச இடம்கொடுத்து வெளியேறி ஓட்டல் வாயிலில் சென்று அமர்ந்தான்.

கண்ணு, தங்கம் என்று அழைக்கும் இந்த அன்பிடமிருந்து பாரதி எப்படிப் பிரிந்தாள்.

அவளும் உருகத்தானே செய்கிறாள்.

ஒரு கோபம், குறை யாரிடமும் வெளிப்படவில்லையே.

இதைப்பற்றி இப்போதும்கூடப் பாரதி மேலே ஏதும் சொல்லக்கூடும் என்று அவனுக்குத் தோன்றவில்லை.

பின்னால் ஒருநாள் அவனது அன்பில் அவள் இணைந்த பின் சொல்லக்கூடும்...

''அவனிடம் சொல்லி தோளில் சாய்ந்து ஆறுதல் தேடக் கூடும்...''

அப்போது அவர்களுக்கு இடையே ஒளிவு மறைவே இராது.

நம்பிக்கையோடு அவன் காத்திருந்தான்.

வெகு விரைவிலேயே பாரதியின் குடும்பத்தார் கீழி றங்கி வந்துவிட்டார்கள்.

அவன் மாமனார் வீட்டுக்கென ஆர்டர் செய்திருந்த உணவு வகைகளை உண்டிருப்பார்களா என்பது கூடச் சந்தே கமே.

''விழுப்புரத்துக்கு பஸ் டிக்கெட் ரிசர்வ் செய்துவிட் டோம். கிளம்ப வேண்டும்'' என்றார் மாமனார் விளக்கம் போல.

அவர்கள் மறுத்தும் காரிலேயே கொண்டு விட்டான் மதுசூதனன்.

''என் மகள் மிகவும் நல்லவள் மாப்பிள்ளை. பெற்ற குழந்தைப் போலப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கண்க ளில் நீர் மல்கக் கேட்டுக் கொண்டார் பாரதியின் தந்தை.

''கட்டாயம்'' என்று பளிச்சென்ற தன் புன்னகையைக் காட்டினான் மதுசூதனன்.

''ஒரு புழு பூச்சி வைத்தால் தகவல் சொல்லுங்கள்'' என்று மெல்லக் கூறி விடைபெற்றார் பாரதியின் தாயார்.

வெட்கமும் கண்ணீருமாகப் பாரதியுடைய தங்கை அவர் களின் பின் நடக்க, கன்றிய முகத்தைத் திருப்பிய படியே நின்றுவிட்டுப் போனான் தம்பி.



பஸ் கண்ணுக்கு மறையும்வரை பார்த்துவிட்டு இருவ ரும் கார் நின்ற இடத்துக்கு நடக்கலாயினர்.

கணவனின் வியந்த பார்வை தன்மீது அடிக்கடி படி வதை பாரதி உணர்ந்தாள்.

அது எதிர்பார்க்க வேண்டியதும்கூடத் தானே.

ஆனால் அதுபற்றி பேச மனம் இல்லாமல் நடைபாதைக் கடைகளைப் பார்ப்பதுபோலப் பாவனை செய்த வண்ணம் நடந்தாள்.

கார் கதவைத் திறந்தபடி, ''உனக்குப் பெற்றோர் இருக்கி றார்கள் என்று நான் நினைக்கவே இல்லை'' என்றான் மதுசூதனன்.

மனைவியின் திடீர்க் குடும்பத்தைப் பற்றி கணவன் அறிந்துகொள்ள எண்ணுவது இயற்கைதான்.

ஆனால் அதற்குப் பதில்கூற விரும்பாமையால் — விரும்பினால் இயலாமையால் அவளுள் மூண்ட குற்ற உணர்வு எரிச்சலாய் மாறியது.

''நான் என்ன வள்ளியம்மையா, மான் பெற்றுப் போட் டுவிட்டுப் போக!'' என்றாள் அவள் ஒரு மாதிரிக் குத்தல் குரலில்.

அவன் சமாதானமாகவே, ''ரொம்ப நாட்களாகவே தொடர்பே இல்லையா ரதி?'' என்று கேட்டான்.

''ஐந்து ஆண்டுகளாக'' என்று சுருக்கமான பதில் வந்தது.

''ஓ! சின்ன விஷயங்களுக்காகக்கூட குடும்பங்களில் பிரிவு நேர்ந்து விடுவது உண்டுதான். கடைசியில் யோசித்துப் பார்த்தால் காரணமே நினைவு இராது'' என்றான் அவன் இதமாக.

ஆனால் இவள் இதப்படவோ அமைதி அடையவோ தயாராக இல்லை. ''சின்ன விஷயம்தான் என்று எப்படித் தெரியுது?'' என்று பழைய குரலிலேயே கேட்டவள் சட்டெ னத் திரும்பி, ''இந்தச் சீப்பு என்ன விலைப்பா?'' என்று

ஓர் ஓட்டைச் சீப்பை விலை கேட்டு, பேரம் பேசி விலை குறைத்து வாங்கினாள்.

அவனது பார்வையில் வியப்பும் குறுகுறுப்பும் இருந்த போதும் அவளை உணர்ந்தவன் போல அதற்கு மேல் அப்போதைக்கு அதுபற்றி அவன் ஏதும் பேசவில்லை.

அந்த இதமும் அவளைக் குற்றவாளியாக்கிக் குடைந்து வேதனைப்படுத்தவே செய்தது.

அன்பு காட்டுகிற இவனிடம் எரிந்துவிழுவது எவ்வளவு பெரிய பிழை!

ஓட்டலுக்குத் திரும்பிய பின்னர், ''கண்களில் நீருடன் உன் பெற்றோரைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறதே. என்னதான் பெரிய விஷயமா இருந்தாலும் அதை மறக்க முடியாதா?'' என்று கனிந்த குரலில் மீண்டும் கேட்டான் அவன்.

தரையைப் பார்த்தபடி சற்று நேரம் நின்றாள் பாரதி. பிறகு, ''நான் முட்டாள்தனமாக எப்போதேனும் நடந்து இருக்கிறேனா மது?'' என்று மெதுவாகக் கேட்டாள்.

''ம்...?'' என்றவன் பார்வையில் விஷமம் பரவியது. ''ஒரே ஒரு விஷயம் தவிர மற்றபடி இல்லை'' என்று பதில் அளித்தான்.

அவனது குறிப்பை உணர்ந்து அவள் முகம் சிவந்தது. ஆனாலும் அதை ஒதுக்கி, ''இது சரிப்படுத்த முடியாத ஒன்று என்பதோடு நம் வாழ்வுக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அதனால் இந்தப் பேச்சை இத்துடன் தயவுசெய்து விட்டுவிடுங்கள்'' என்று முடித்தாள்.

அவன் மீண்டும் ஏதோ சொல்ல வாயெடுக்கவும் ஒரு கையை ஏந்துவது போலத் தூக்கி, ''ப்ளீஸ் மது'' என்றாள் கெஞ்சுதலாக.

அவன் பதிலாகத் தோளை குலுக்கினான்.



## 10

திருச்சியிலிருந்து வீடு திரும்பிய பிறகு ஒருநாள் இரவில் மீண்டும் அந்தப் பேச்சை எடுத்தான் மதுசூதனன்.

''உன் அம்மா ஏதோ ஒரு பூச்சி என்றார்களே நினைவு இருக்கிறதா?'' என்றான்.

கேலி போலக் கேட்டாலும் அவன் கண்களில் ஆர்வம் இருப்பதை பாரதி உணர்ந்தாள்.

''அதற்கு வாய்ப்பே கிடையாது என்பது தெரியாமல் உளறிவிட்டார்கள்'' என்று கூறி, கையில் இருந்த புத்தகத்தை அலட்சியமாகப் போட்டுவிட்டு எழுந்தாள் பாரதி.

அவள் கையைப் பற்றி நிறுத்தி, ''வாய்ப்பு இல்லாமல் ஏன் போக வேண்டும்?'' என்று கேட்டான் அவன்.

''கையை விடுங்கள்'' என்று ஆத்திரத்துடன் அதட்டினாள் பாரதி.

''விடாவிட்டால்? அந்தப் பட்டிக்காட்டு மைனர்களை போலத் தட்டி வீழ்த்தி விடுவாயா?'' என்று கிண்டலாகப் பேசினான் அவன்.

அவள் முகம் கடுக்க நிற்கவும், ''அன்று என்ன சொன்னேன், பாரதி? பாசிட்டிவ் அப்ரோச் வேண்டும். நீயும் ஒத்துழைக்க வேண்டும் என்றேனே. நினைவில்லையா? இப்படி ஒரேயடியாய் ஒதுங்கினாயானால் எப்படி ரதிம்மா?''

ஒரு விநாடி தயங்கிய அவள், சட்டென கையை உதறிக் கொண்டு வேகமாக விலகிச் சென்றுவிட்டாள்.

விடுவிடுவென்று நடந்து தன் அறைக்குள் புகுந்து பாரதி கதவைச் சாத்துவதை பார்த்துக் கொண்டே நின்ற மதுசூதனன் முகத்தில் கடுமை பரவியது.

குடும்பத்தினரைப் பார்த்ததில் இருந்து பாரதியின் நெஞ்சுக்குள் ஓர் ஏக்கம், ஓர் ஆத்திரம் கனன்று கொண்டே இருந்தது.

'என் தங்கமே!' என்று தாயார் விம்மி அழுதபோது ''நீ ரொம்பவும் உடம்பை அலட்டிக் கொள்ளாதே. திலகம்'' என்று தந்தை தாயாரைப் பாசத்துடன் தட்டிக் கொடுத்தது மனதில் தோன்றிக் கொண்டே இருந்தது.

''இந்த மாத்திரையை எதற்கும் போட்டுக் கொள்ளுங்கள் அம்மா'' என்று தங்கை கைப்பையிலிருந்து மாத்திரையை எடுத்து பிரித்துக் கொடுத்ததும், அதற்குள்ளாகத் தம்பி தண்ணீர்த் தம்ளரோடு ஓடிவந்து தந்துவிட்டுத் தாயாரின் முதுகைத் தடவியதும் படம் போல மனதில் ஓடிக் கொண்டே இருந்தது.

இவர்களின் நடுவே யாருக்கும் எதையும் செய்யத் தெரியாமல், தோன்றாமல் தான் ஒரு மூன்றாம் மனுஷியாக நின்று பார்த்துக் கொண்டு இருந்தும்கூட ஒரு பக்கத்தில் நிலைத்து நின்றது.

எவ்வளவு அன்பான குடும்பம்!

இதற்கு அன்னியளாகி விடும்படி ஆனது எவ்வளவு துர்பாக்கியம்.

அதுமட்டுமின்றி இந்த மாதிரியான ஓர் அன்பும் ஆதரவுமாய் பின்னிப் பிணைந்த ஒரு குடும்பத்தை உருவாக்கக்கூடிய பாக்கியம்கூட அவளுக்கு மறுக்கப்பட்டு விட்டதே.

இந்த வேதனைதான் அவளால் தாங்க முடியாது போயிற்று.

இதை ஆற்றுவாரோ தேற்றுவாரோ இல்லாமல் அவள் தனியாகவே தாங்கியாகவும் வேண்டியிருந்தது.

அவளுடைய கணவன் அன்பானவன். வல்லவன். அவனிடம் அவளது வேதனையைச் சொல்லலாம். காரணத்தைச் சொல்லாமலேயேகூட ஆறுதலுக்காக அவனிடம் சாயலாம்.



என்ன ஏது என்று கேளாமலேயேகூட அவளைத் தேற்றவே முயற்சி செய்வான், அவளுடைய அன்புக் கணவன்.

ஆனால் பிறகு அதற்கும் ஒரு விலை கொடுக்க வேண்டியிருக்கும்.

அவன் கட்டாயப்படுத்தா விட்டாலும்கூட அவள் கட்டுப்பட வேண்டியிருக்கும்.

அதற்கும் சக்தியில்லாத நிலையில் அவளால் கணவனிடம் செல்லவும் முடியாது போயிற்று.

கூடவே அவனுக்குத் தான் அறிந்தே கொடுமை செய்யும் துயரம் வேறு அனைத்துத் துன்பத்தையும் அலட்சியம் ஆத்திரம் என்று போர்வை போர்த்தி மறைக்க வேண்டியதும் ஆயிற்று. பட்ட காலிலேயேதானே மீண்டும் படுமாம்!

துன்புற்ற மனதை மேலும் நோகடிக்க இன்னொன்றும் சேர்ந்தது.

மதுசூதனனுடைய அலுவலகத்து டைப்பிஸ்ட் பெண், பாதி வழியில் சைக்கிள் செயின் அறுந்துவிட்டதாகச் சொல்லி இங்கே வீட்டுக்கே வந்து நின்றாள்.

அவள் வீடு இருக்கும் இடத்துக்குச் செல்ல பஸ்சும் சரியாக இல்லை. என்ன செய்வது என்று கையைப் பிசைந்தாள்.

அலுவலகத்தில் ஓர் அம்பாசிடர் காரும் டிரைவரும் உண்டுதான்.

ஆனால் மதுசூதனன் வீடு வரும்போது டிரைவரை அனுப்பி விடுவான்.

மில்லில் தொடக்க வேலைகளே நடந்து கொண்டு இருந்தமையால் மதுசூதனனும் எம்.டி.க்கு வேண்டிய பந்தா எதுவுமின்றி எளிமையாகவே இருந்ததால் வீட்டிலும் வேறு கார், டிரைவர் என்று இல்லை.

இன்னோரன்ன காரணங்களால், அந்த பெண்ணை மதுசூதனனே வீட்டில் கொண்டு விடும்படி ஆயிற்று.

அந்தப் பெண் சொன்ன இடத்திற்குச் சென்று வரும் நேரத்திற்கு சற்று அதிகமாகவே ஆன பிறகுதான் மதுசூதனன் திரும்பி வந்தான்.

இரவு உணவை எடுத்து வைத்தால் டைப்பிஸ்டின் வீட்டில் நிறைய டிஃபன் சாப்பிட்டதால் பசியில்லை வேண்டாம் என்றான்.

சம்பளம் கொடுக்கிற முதலாளி வீடு வந்தால் உபகாரம் செய்வது — சற்று அதிகப்படியாகவே செய்வதுகூட இயல்புதான்.

ஆனாலும் பாரதிக்கு ஏனோ உறுத்தியது.

திடுமெனப் பசி மந்தித்து அவளாலும் சாப்பிட முடியவில்லை.

தொடர்ந்து மூன்று நாட்கள் ஒரு புராஜெக்ட் விஷயமாய் வேலை அதிகம் என்று அவன் தாமதமாக வீடு திரும்பியபோதும் அந்த வேதனை அதிகரித்தது.

அந்த நாட்களில் டைப்பிஸ்டின் சைக்கிள் ரிப்பேருக்குப் போயிருப்பதாலும், தாமதம் ஆகிவிட்டதாலும் அவனே அவளை வீடு சேர்ப்பித்தது எந்த விதத்திலும் அந்த வேதனையைக் குறைப்பதாக இல்லை.

மில்லுக்குக் கட்டிடம்தானே கட்டுகிறார்கள்?

இப்போது பெரிதாக டைப்பிஸ்டுக்கு என்ன அதிக வேலை வரமுடியும்?

முதலில் செங்கல் சிமிண்ட் கணக்கு எழுத ஒரு டைப்பிஸ்டுக்கு என்ன அவசியம்? ஒரு கணக்குப்பிள்ளை போதாதா?

அதிலும் அவளது ஸ்கர்ட்டும் டாப்பும்.

மூன்றாம் நாள் அந்த எமிலியை அவள் வீட்டில் விட்டுவிட்டு வருவதாகச் சொல்லிச் சென்ற மதுசூதனன் திரும்பிவர மணி பத்தாகிவிட்டது.



இவள் பயமும் கோபமாக அமர்ந்திருக்கையில் அவன் ஒன்றும் நடவாததுபோல ஷர்ட்டைக் கழற்றியபடியே சொன்னான்: ''எமிலியின் பெரிய அண்ணன் டேவிட் என்னோடு படித்தவன், பாரதி. மிலிடெரியில் இருந்து லீவில் வந்திருக்கிறான். பழைய கதையெல்லாம் பேசிக் கொண்டே இருந்ததில் வெகுநேரம் ஆகிவிட்டது. உனக்கு ஒரு டெலிபோன் செய்யலாம் என்றால் எமிலி வீட்டிலும் சரி அக்கம் பக்கத்திலும் சரி ஃபோனே இல்லை. ''நீ சாப்பிட்டாயா? இல்லையென்றால் சாப்பிட்டுவிட்டு படு. எனக்கு எதுவும் வேண்டாம். அங்கே சாப்பிடாமல் விடமுடியாது என்று டேவிட் பிடித்துக் கொண்டான்...'' என்று கூறியபடி அவனது அறைக்குள் சென்றான்.

பிடித்துக் கொண்டது டேவிடா, எமிலியா?

மெய்யாகவே டெலிஃபோன் செய்யத் தேடினானா அன்றி மறந்துவிட்டு இங்கே வந்து கதை கட்டுகிறானா?

மனம் ஒன்றி அவனோடு இணைந்து வாழ்ந்திருந்தால் தவறாக ஒன்றும் மனதில் பட்டிராதோ என்னவோ? நேராகக் கேட்கவும் துணிவில்லை; உன்துணை மறுக்கப்பட்டதால் வந்த கொடுமை என்று விட்டால்?

இப்போது பாரதி கொதி நிலைக்கே சென்று கொண்டிருந்தாள்.

இந்நிலையில் ஆசிரமத்துக் குழந்தை சுகி தத்து போயிற்று.

தாயுமானவர் வந்து விஷயத்தை வருத்தத்துடன் சொன்னபோது இவளுக்கு உடம்பெல்லாம் ஆடிப் போயிற்று.

''எனக்கும் வேதனையாகத்தான் இருக்கிறது பாரதி. அது சம்பந்தமான எழுத்து வேலைகள் முடிந்துவிட்டதாம். நாளை குழந்தையைக் கொண்டு போய்விடுவார்களாம். அங்கே ஆபீசில், உன் கணவரிடம் எடுத்துச் சொல்லலாம் என்று போனேன். அவர் யாரோ பேசவிடாமே — அவருடைய நண்பராமே — அவரோடு... வெளியே போயிருக்கிறாராம்.

அதுதான் உன்னிடம் சொல்ல வந்தேன்'' என்றார் பெரியவர் சோர்வாக.

எமிலியும் போயிருக்கிறாளா என்று எழுந்த கேள்வி உடனே மறைந்து, சுசியின் பிரச்சினை மனதைப் பிடித்தது.

சுசி ஒரு பஸ் விபத்தில் பெற்றோரை இழந்த குழந்தை.

தீப்பிடித்து விட்ட பஸ்சில் வெளிவர முடியாமல் மாட்டிக் கொண்ட அவளுடைய பெற்றோர் குழந்தையேனும் பிழைக்கட்டும் என்று சன்னலின் சிறு இடைவெளி மூலம் பிள்ளையை வெளியே எறிந்து விட்டனர்.

மூன்று மாதச் சிசுவாக வந்ததிலிருந்து இந்த கடைசி இருவாரங்கள் தவிர சுசியைப் பாரதி பாராத நாளே இல்லை.

குழந்தையின் சின்னச் சின்ன வளர்ச்சியும், விளையாட்டும், சிரிப்பும், நோயும்கூட அவளுக்கு அத்துப்படி.

அந்தக் குழந்தையை இனிப் பார்க்கவே முடியாது என்றால் எவ்வளவு பெரிய அநியாயம்?

எந்தெந்த ஆத்திரத்தை எல்லாமோ இதனுடன் சேர்த்து வெகுதாமதமாக மாலையில் மதுசூதனன் வந்ததும் அவன் மீது கொட்டினாள்.

எப்படி எப்படி அவர்கள் வளர்த்த குழந்தை சுசி.

அதைப்போய் யார் யாருக்கோ எப்படித் தாரை வார்க்கலாம்?

''நாளை முதல் வேலையாக இந்தத் தத்து பிசினசைத் தடுத்து நிறுத்த வேண்டும்.''

''தடுப்பதில் எனக்குப் பிரியம் இல்லை பாரதி'' என்றான் அவன் அமைதியாக.

''உங்கள் இஷ்டத்தைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் இல்லை. அவளைப் பார்த்துப் பார்த்து வளர்த்தது நீங்கள் இல்லை. அங்கிளும் நானும்தான்'' என்றாள் அவள் எடுத்தெறிந்தாற் போல.



''இருக்கலாம். ஆனால் ஆசிரமத்து நிர்வாகம் இப்போது உங்கள் கையில் இல்லையே'' என்றான் அவன் சாதாரணமாக.

சற்று திகைத்துவிட்டு, ''நீங்கள் ரொம்பவும் அநியாயம் பண்ணுகிறீர்கள் தெரியுமா?'' என்று குமுறினாள் அவள்.

''அநியாயமா? இந்த வார்த்தையைச் சொல்வதன் மூலம் நீ தான் அநியாயம் செய்கிறாய் பாரதி. அந்தப் பாண்டேயின் குடும்பத்தில் அவள் இளவரசி போல வளர்வாள். சட்டப்படியான தத்து என்பதால் பெற்ற குழந்தையின் உரிமை அத்தனையும் கிடைக்கும். இங்கே வளர்ந்து அவள் காணப்போவது என்ன? எல்லோருக்கும் உள்ள கல்வி கிடைக்கலாம். ஏதாவது ஒரு தொழில்துறைப் பயிற்சி கிடைக்கலாம். தன் கையால் உழைத்துச் சாப்பிடுவதுதான் உயர்வு என்று பீற்றிக் கொள்ளக்கூடச் செய்யலாம்; ஆனால் அந்த வீட்டில் அவள் அடையக்கூடிய வளத்தைவிட இது உயர்வா? நெஞ்சைத் தொட்டுச் சொல்.''

''அத்தோடு இங்கே அவள் பத்தோடு பதினொன்று. இயற்கை வஞ்சித்த குடும்பவாழ்வு மீண்டும் கிடைத்து தாய் தந்தையரின் கண்மணியாக வளர மீண்டும் ஒரு வாய்ப்பு அவளுக்குக் கிடைப்பதைத் தடுப்பது அநியாயம். நீ முட்டாள் அல்ல பாரதி. சற்று யோசித்துத் தானே பேசு'' என்று சொல்லி முடித்தான் அவன்.

இந்த நீண்ட பேச்சில் எதைத் தவறு என்று கூறமுடியும்? 'சுசியைப் பாராமல் என்னால் இருக்க முடியாது'' என்று சுதி இறங்கிப் போய் முறுவலித்தாள் அவள்.

''ஊரார் பிள்ளைமேல் இவ்வளவு ஆசையா? அதைவிடச் சொந்தத்தில் ஒன்றைப் பெற்று உரிமையோடு கொஞ்சுவதுதானே'' என்று வாய்ப்பை விடாமல் பட்டெனச் சொல்லி விட்டான் அவள் கணவன்.

அவ்வளவுதான். மனதிற்குள் ஏதேதோ எண்ணி ஏங்கிக் கொண்டு இருந்த பாரதிக்கு ஆங்காரம் பொங்கி விட்டது.

''ரொம்பவும் சாமர்த்தியமாகப் பேசிவிட்டதாக நினைப்போ?'' என்றாள் வெறி கொண்டவளாக.

அவன் தோளைக் குலுக்கினான். ''நான் பிசினஸ் செய்கிறவன் பாரதி. லட்சக்கணக்கில் முதலைக் கொட்டி விட்டு ஓர் ஆண்டு, ஈராண்டு என்று லாபத்துக்காகக் காத்து இருக்கிறவன்தான். ஆனால் காத்திருப்பதிலும் கணக்கு இருக்க வேண்டும் அல்லவா? கையைக் கட்டிக் கொண்டு காலம் முழுவதும் காத்துக் கிடக்க முடியாதில்லையா?''

''காத்திருக்க முடியாமல்தான் வேறே தேடியாகிறதா!'' என்று பழைய வெறிக் குரலிலேயே கத்தினாள் பாரதி.

திடுக்கிட்டுப் போய், ''என்ன உளறுகிறாய்?'' என்று அதட்டினான் மதுசூதனன்.

''என் பேச்சுதானே! உளறலாகத்தான் தோன்றும். அந்த டைப்பிஸ்ட் பேச்சில்தானே தேன் வடிகிறதாம்!'' என்று குத்தலாகப் பேசினாள் பாரதி.

''சீச்சி, பாரதி. இந்தப் பேச்சு உனக்குத் தகுதியில்லை. அநியாயமாய் அடுத்த பெண்ணுக்குக் களங்கம் கற்பிக்காதே. நியாயம் தவறாதே''... என்று கோபமும் வருத்தமாக உரைத்தான் மதுசூதனன்.

நியாயம்!

என்ன நியாயம்? என்ன நியாயம்?

அவளது வாழ்வில் யார் என்ன நியாயம் பார்த்து நடந்து கொண்டார்களாம்!

அவள் மட்டும் நியாய தேவதையாக நிற்க வேண்டுமாக்கும் — கண்களைக் கறுப்புத் துணியால் கட்டிக் கொண்டு கையில் தராசையும் தூக்கிக் கொண்டால் திருப்தியாகுமா?

அவளை ஒரேயடியாய் முட்டாளாய் எண்ணிவிட்டார்களா?

யார் யார் மேலோ வந்த கோபம் அத்தனைக்கும் அவனை இலாக்காக்கி, ''நியாயம் என்ன நியாயம் இவ்வளவு



நேரம் அவளோடு குலாவி விட்டுத்தானே லேட்டாக வந்திருகிறீர்கள்? நீங்களெல்லாம் நியாயம்பற்றிப் பேசுவதா? சைத்தான் வேதம் ஓதுவதா?'' என்று அவன் மனதைக் குத்திக் கிழிக்க முயன்றாள்.

கான்க்ரீட் கலவைபிடும் பெரிய யந்திரத்தின் பல் சக்கரம் இலகுவாகச் சுழலாமல் சிக்கிக் கொண்டு விட்டது. எப்படியோ ஒரு பல் உடைந்தும் விட்டது. அரும்பாடுபட்டு அதைக் கழற்றி எடுத்துச் சென்று 'வெல்ட்' செய்து மீண்டும் மாட்டிவிட்டு வெகுவாகக் களைத்து வந்திருந்த மதுசூதனுக்கு மனைவியின் வரவேற்பே எரிச்சலூட்டியிருந்தது.

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு இருந்தவனைக் கனவிலும் நினையாத இந்தக் கொடூரமான குற்றச்சாட்டு கடுங்கோபமுறச் செய்தது.

''வாயை மூடு முட்டாள்'' என்று சீறினான்.

ஆனால் தொடங்கிவிட்ட அவளால் நிறுத்த முடியவில்லை.

அவனது சினம் கட்டு மீறுவதைக் கொஞ்சமும் உணராமல் அவள், ''ஏன்? ஏன் மூட வேண்டும்? உங்கள் வண்டவாளம் எல்லாம் தண்டவாளம் ஏறிவிடும் என்றா? அல்லது கேட்பதற்கு உங்களுக்கே வெட்கமாக இருக்கிறதா? வாயை மூடமுடியாது; மூடமாட்டேன். சொல்லிக் கொண்டேதான் இருப்பேன். என்ன செய்வீர்கள்?'' என்று வெறிமுற்றினா
போல அவனுக்குச் சவால் விட்டாள். அ விழ்த்த அவள்

''இந்த உளறலை நீயாக ...காப்பு உணர்வு தூண்ட,
வாயை மூட வழியில்லாமல் ...சயல் போலக் கைகொடுக்க
முரட்டுத்தனமாகப் பற்றி இ...டுவித்துக் கொண்ட வேகத்
...விட்டாள்.
இதழ்களை அழுந்த மூடின
...க விழுந்து எழுந்த அவனுடைய
...வித்தன.

# 11

மதுசூதனனைப் பாரதி அறிந்த நாளிலிருந்து — திருமணத்துக்கு முன்பாகவும் சரி, மணமானபின் இந்த ஒரு மாதகாலமாகவும் சரி — அன்றுவரை மதுசூதனன் முரட்டுத்தனமாக நடந்து அவள் பார்த்ததே இல்லை.

அதிலும் அவளிடம் எப்போதும் மிருதுதான்.

ரதி, ரதிம்மா, என்னடா... என்பான்.

அவன் மனதுக்குப் பிடிக்காத எதையேனும் அவள் செய்திருப்பதை அவள் உணர்வதே அவனது 'பாரதி' என்ற முழுமையான அழைப்பில்தான்.

அதுகூட நிலைக்காமல் உடனே கனிந்துவிடுவான்.

திருச்சி பயணத்தின் பின்னர், அவளது கைபற்றி விரல்களில் முத்தமிட முயன்றபோதும்தான் என்ன மென்மையாகப் பிடித்திருந்தான்!

அதன்பிறகு அவன் சற்று விலகி நின்றாற்போல ஓர் உணர்வு அவ்வப்போது அவளுக்கு வருவதுண்டு.

அப்போதும் கோபத்தை அவன் காட்டியது இல்லை.

இன்று சற்றும் எதிர்பார்த்திராத அவனது தொடுகையும் முரட்டுத்தனமுமாக சற்றுநேரம் திகைத்துச் செயல் இழந்து நின்றாள் பாரதி.

...னேயே திமிறித் தன்னை விடுவித்துக் கும் — கண்களைக ... கையில் தராசையும் தூக்கி...

அவனை ஒரேயடியாய் ...யாக. ...செய்ய உங்களுக்கு வெட்கமா கனா?

யார் யார் மேலோ வந்த ...னைவியை முத்தமிடுவதில் அவனை இலாக்காக்கி, ''நியாயம் எ... அவளது உதடுகளையே வாயடைப்பது தான்



கேவலம் என்றுதான் நான் உன்னை இந்த வகையில் நிறுத்தினேன். அத்தோடு...'' என்றவன் ஓர் அழுத்தத்துடன் அவளை நெருங்கலானான்.

ஏதோ புரிந்துபோய்விட, ''நில்லுங்கள் அங்கேயே, கிட்டே வராதீர்கள்'' என்று கிரீச்சிட்டாள் பாரதி.

ஒரு சிறு பெருமூச்சுடன், ''உனக்குப் புரியவில்லையா, பாரதி? இனி நிற்பதற்கு இல்லை'' என்றான் மதுசூதனன் நிதானமாக.

திருமணம் பற்றிப் பேசியபோது அவனிடம் காணப்பட்ட அந்த இளக்கமற்ற உறுதியை மீண்டும் அவன் முகத்தில் காணவும், நெஞ்சில் சிலீர் என்று குளிர் பிறக்கப் பின்னடையலானாள் பாரதி.

''சாதாரணக் கணவன் மனைவியாக நாம் வாழ்ந்திருந்தோம் என்றால் இந்த மாதிரிப் பைத்தியக்காரத்தனமான எண்ணங்கள் உனக்குத் தோன்றியே இராது. ஆனால், இந்த அளவு வக்கிரம் வளர்ந்தபிறகு அதைக் களைந்தே ஆகவேண்டும்...''

பின்னடைந்து கொண்டேபோன பாரதி முதுகில் சுவர் தட்டி நிற்க அவன் மெதுவாக அவளது கன்னத்தைத் தொட்டான்.

பட்டென்று அவள் அவனது கையைத் தட்டிவிடவும் சினம் கொண்டவனாக, ''சில பெண்களுக்கு முரட்டுத்தனம் தான் புரியும் என்பார்கள். நீயும் அப்படித்தான் தெரிகிறது'' என்று அவளை அழுந்தப் பற்றினான் அவன்.

வேண்டும் என்று அவனை அடித்து வீழ்த்த அவள் நினைக்கவில்லைதான். ஆயினும் தற்காப்பு உணர்வு தூண்ட, கற்றிருந்த கராத்தே அனிச்சைச் செயல் போலக் கைகொடுக்க அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட வேகத்தோடு அவனை வீழ்த்தியும் விட்டாள்.

ஆனால் வெகுகாலமாக விழுந்து எழுந்த அவனுடைய கண்கள் தணலாய் ஜொலித்தன.

''என்னடி, என்னிடமா ஜாலம் காட்டுகிறாய்? என்னையும் அந்தப் பட்டிக்காட்டுப் பொறுக்கிகள் என்றா நினைத்தாய்?'' என்று சீறியவன், ஒரே எட்டில் அவளை அணுகி, இரண்டு தட்டில் அவளைச் சக்தி இழக்கச் செய்தான்.

இவன் தன்னைவிட வல்லவன் என்பதை உணர்ந்த பாரதிக்கு நெஞ்சு பதைத்தது. ஒடக்கூட சக்தியற்றுப் போய் விட அச்சத்துடன் விழித்தாள்.

''பதினெட்டு வயதுவரை காத்திருப்பதே எத்தனையோ பெண்களுக்கு முடியவில்லை. நீ மட்டும் மணிமேகலையா?'' என்றவன், அவளது அச்சப் பார்வையைச் சந்திக்கவும் இளகி, ''என்னடா, என்னை முரடன் ஆக்கப் பார்க்கிறாயே, இனியேனும்...'' என்று மெல்ல அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

அவன் கொடுத்த கை வெட்டுகளால் கைகால்கள் வெலவெலத்திருந்த அந்த நேரத்திலும் அவள் வெறுப்புடனேயே தன் முகத்தைத் திருப்பிக் கொள்ளவும் மீண்டும் அவன் சினம் கொண்டான்.

ஆத்திரத்துடன் அவளைத் தூக்கிச் சென்று படுக்கையில் போட்டான்.

மெல்லச் சுரணை வந்த கரங்களால் அவனைத் தடுக்க முயற்சித்தவளை எளிதாக அடக்கியபடி, ''என்ன ஆனாலும் இன்று நீ இதை அறிந்து கொள்ளத்தான் போகிறாய். ஆண் என்றால் என்னவென்று...'' என்று சொல்லிக் கொண்டே போனவனை, அவளது சோர்ந்த குரல் இடைமறித்தது.

''எனக்குத் தெரியும்'' என்றது கசப்புடன்.

தன் காதுகளில் விழுந்ததை நம்பமாட்டாதவன் போல பிரமிப்புடன் மனைவியைப் பார்த்தான் மதுசூதனன்.

அவனது திகைப்பை உணர்ந்தாற்போல கசந்த முறுவல் போல ஒன்று அவளது உதடுகளில் நெளிந்து மறைந்தது.



''ஓர் ஆணின் உடல் எப்படியிருக்கும், அது என்ன செய்யும் என்பது எனக்கு நன்றாக நேரடியாகவே தெரியும்'' என்றாள் நைந்த குரலில் தொடர்ந்து.

மதுசூதனன் செய்வது அறியாமல் தடுமாறி நின்று அதுவரை அவள் கண்டது இல்லை. இன்று காணுமாறு நேர்ந்தது.

''நீ... நீ... நான் உன்னை நான்...'' என்று வார்த்தைகளில் தொடர்பற்றுப் பேச்சில் கோவையின்றித் திக்கித் திணறியவன், நிறுத்தி, ஒரு பெரிய மூச்செடுத்துத் தன்னை சுதாரித்தான்.

மெல்ல எழுந்து அமர்ந்த பாரதிக்கு அவனைப் பார்க்கையில் பரிதாபமாகக் கூட இருந்தது.

ஆனால், ''உன்னைப் பற்றி நான் என்ன நினைத்தேன் என்று உனக்குத் தெரியும் அல்லவா? கன்னியென்று எண்ணியிருந்தேன். என்னை ஏன் ஏமாற்றினாய்?'' என்று குற்றம் சாட்டி அவன் கேட்டபோது அந்தப் பரிதாபம் மாறி அவள் பதில் பளிச்சென்றே வந்தது.

''எப்போதாவது — ஒரு தரமாவது நான் சொன்னேனா கன்னியென்று. நீங்களாக ஏதேதோ கற்பனை செய்து கொண்டால் அதற்கு நானா பழி?'' என்று திருப்பிக் கேட்டாள்.

''மெய்தான். எல்லாம் என்னுடைய முட்டாள்தனம் தான். திருமணம் வேண்டாம் என்றுகூடச் சொன்னாயில்லையா?'' என்று கண்களைப் புறங்கையால் தேய்த்து விட்டுக் கொண்டான் அவன். பிறகு மீண்டும் அவளை நோக்கி, ''ஆனால்... ஆனால் நீ அவனையே மணந்திருக்கலாமே... இந்த... இந்த மணிமேகலைக் கோலம் எதற்காக? என்னை ஏய்க்கவா?... சாரி, நீ எப்போதுமே அதேகோலம் தானே, ஆனால் நீ ஏன் அவனை மணக்கவில்லை?'' என்று வினவினான்.

கட்டிலை விட்டு இறங்கிச் சென்று ஜன்னல் ஓரமாக நின்று சற்றுநேரம் வெளியே வெறித்தாள் பாரதி.

உள்ளே திரும்பி, ''பாரதம் படித்திருக்கிறீர்களா? அதில் ஒன்று வரும். ஐவருக்கும் தேவியவள், அழியாத பத்தினி என்று. எனக்குப் பாஞ்சாலியாகப் பிரியமோ, அந்தத் தெய்வச் சக்தியோ இல்லை'' என்றாள் நிதானமாக.

''பாரதி!'' என்றான் அவன் வெகுவாக அதிர்ந்து போய்.

சட்டென அவள் கண்களில் கலவல் தெறித்தது. ''ஆமாம். ஐந்துபேர். 'காங்ரேப்'. ஆனால் அதற்கும் மேல் நான் பிழைத்துக் கொண்டேன். நினைவு திரும்ப மட்டும் ஒரு வாரம் ஆயிற்றாம். ஒரு மாதம் படுக்கையில் கிடந்தேன். என் முட்டாள் தகப்பனார் செய்த வேலை, கோர்ட்டுக்குப் போனார்...

''கேஸ் நடந்தது. நான் அடையாளம் சொன்ன காரும் ஆட்களும் அந்தச் சமயத்தில் வேறு ஊரில் இருந்ததாகப் பலபேர் சாட்சியம் சொன்னார்கள்.

''அந்தக் காரை அதேசமயம் ரிப்பேர் செய்து கொண்டு இருந்ததாகச் சத்தியம் செய்தான் அந்த ஊர் மெக்கானிக். அந்த வைலட்கலர் பெயின்டுக்காக அலைந்து திரிந்து வாங்கி வந்து அடித்ததால் நிச்சயமாய் நினைவிருந்ததாக் கிளைக் கதை வேறு என்ன?'' அவனிடம் அசைவுகண்டு கேட்டாள்.

''ஒன்றும் இல்லை: மேலே சொல்லு'' என்றான் அவன் கம்மிய குரலில்.

''அப்புறம் என்ன? நான்தான் அவர்களைச் சரசத்திற்கு அழைத்துப் பணம் கேட்டதாகவும், யாரிடமோ கவர்ச்சிக் காட்டி அவர்கள் அளவு மீறிவிட, இவர்களுடைய மாருதியை யும் பணத்தையும் பார்த்துப் பணம் பறிப்பதுக்காக இவர்கள் மேல் நான் பழி சொன்னதாகவும் முடிவாயிற்று...

மகளை ஒழுங்காக வளர்க்குமாறு அப்பாவுக்கு அறிவுரை வேறு...

மான நஷ்ட வழக்குப் போடாமல், அய்யோ பாவம் என்று விட்டு விட்டார்களாம்'' என்றாள் மீண்டும் ஒரு கசந்த முறுவலுடன்.



''இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்?''

''அறிந்தவர் அறியாதவர் என்கிற பேதமே இல்லாமல் அங்கே சூழ இருந்தோரின் குறுகுறு பார்வையை என்னால் தாங்க முடியவில்லை. என்னால் என்னைப் பெற்றவர்களும் தலைகுனிவதை எனக்கு சகிக்க முடியவில்லை. அத்தோடு இனி எதிர்காலமே இல்லை என்கிற எண்ணம் வேறு.

''இறந்துவிட வேண்டும் என்றுதான் வீட்டை விட்டுக் கிளம்பினேன். தாயுமானவர் என்னைக் கண்டு அழைத்துக் கொண்டு வந்தார்.''

''இந்தப் பிள்ளைகளைக் கண்டதும் வாழ்வில் பிடிப்பு வந்தது. ஆனால் வலிமை இல்லாமல் வாழக் கூடாது என்று கராத்தே கற்றேன்.''

''ஆசிரமத்திலேயே பிள்ளைகளோடு பிள்ளையாக இருந்துகொள் என்றுதான் அங்கிள் சொன்னார். எனக்குத் தான் நாம் வேறு சுமையாவதா என்று இயன்றவரை உதவி னேன்.

''புதிதாகவே பிறந்தது போல இங்கே வாழத் தொடங்கி னேன். நீங்கள் வந்தபோது... திருமணம் பற்றி நீங்கள் கேட்டபோது சொல்லிவிட வேண்டுமோ என்றுகூட யோசித் தேன். ஆனால் என்னைப்பற்றி என்னை விடவும் அதிகம் தெரிந்தவர்போல நீங்கள் பேசிய தோரணையில் சீற்றம் வந்தது. 'அத்தோடு' உங்களை அடியோடு இழக்க மனம் வராததாலும் சும்மா இருந்தேன்' என்று இப்போது சொல்வது சரியில்லை என்று தோன்றவும் நிறுத்திக் கொண்டாள் அவள்.

''உன் ஒதுக்கங்களை நான் கன்னிமையின் கூச்சம் என்று நினைத்துக் கொண்டேன், பாரதி. அது சூடுபட்ட பூனையின் ஒதுக்கம் என்று எண்ணிப்பாராதது பிசகு'' என்று வருந்தி னான் மதுசூதனன்.

''எண்ணிப் பார்த்திருந்தால் ஓடிப் போயிருப்பீர்களா?'' என்ற கேள்வி அவளது கண்டம் வரை வந்து அடங்கியது.

இதைக் கேட்கவேறு வேண்டாமா என்று மனது கசந்து வழிந்தது.

இவனது பாலினன் செய்த பிழைக்கு — குற்றத்துக்கு இவள் சிலுவை தூக்குவதா? அநியாயம் அல்லவா? என்று பிறந்த சீற்றமும் உள்ளேயே அடங்கிப் போயிற்று.

அன்பு மனதிலிருந்து வரவேண்டும். அதை வாதிட்டுப் பெறமுடியுமா? சட்டம் சொல்லும் நியாயத்தையே பெற முடியவில்லையே, இது எங்கே?

மீண்டும் மதுசூதனனே பேசினான், ''நீ திரும்பத் திரும்ப மறுத்தபோதுகூட அந்தஸ்து வேறுபாட்டை நினைக்கிறாய்; அல்லது நீ வித்தியாசத்தை எண்ணி அஞ்சக்கூடும் என்றெல்லாம் - அவைகளைக்கூட அலட்சியம் செய்யக்கூடிய சிறு அசட்டுக் காரணங்களாகவே எண்ணினேனே தவிர... பாரதி, தயவுசெய்து என்னை மன்னித்து விடு. இனிமேல் என்னால் உனக்கு எந்தவித வேதனையும் இராது. நம்பு'' என்று உறுதி கூறினான்.

ஆனால் இந்த உறுதிமொழியே அவளை வேதனைப்படுத்தக்கூடும் என்பதை அவன் அறியவில்லை.

தொல்லை இராது என்றால், இனி உன் வழியில் இருந்து விலகிவிடப் போகிறேன் என்று சொல்லாமல் சொல்கிறானா என்று மனம் கலங்கினாள் பாரதி.

அந்தக் கலக்கத்தை மேலும் அதிகரிப்பது போல மூன்றாம் நாள், ''நாலைந்து நாட்களில் திரும்பி வருகிறேன். ஜாக்கிரதையா இரு'' என்று பெட்டியுடன் கிளம்பிச் சென்றான் அவன்.

''கட்டாயம் வந்துவிடுவீர்களா?'' என்று கையைப்பற்றிக் கொண்டு கெஞ்ச வேண்டும்போல் துடித்த மனதை அடக்கிக் கொண்டு அமைதியாக விடை கொடுத்தாள் பாரதி.

ஆனால் அந்த ஐந்து நாட்களில் அவள் தவியாய்த் தவித்துப் போனாள்.

உண்ண முடியவில்லை; உறங்க முடியவில்லை; உலகம் எல்லாம் வெறிச்சிட்டுப் போயிற்று.



மதுசூதனனைத் தினந்தோறும் கண்ணாலாவது காணாமல் அவளால் வாழ முடியாது என்பது அவளுக்குத் தெளிவாகப் புரிந்து போயிற்று.

ஆனால் இனி அவன் ஏற்பானா?

ஐந்துபேர் அலைக்கழித்த உடல்.

நம்மிடையேதான் ஆயிரம் உவமானங்கள் உண்டே. கெட்டுவிட்ட பால், எச்சில் இலை... கடவுளே!

ஆனாலும் வருகிறேன் என்றானே, ஜாக்கிரதையாக இரு என்று அக்கறையோடு சொன்னானே.

நம்பிக்கையும் அவநம்பிக்கையுமாக ஆசையும் நிராசையுமாக அவள் தவியாய்த் தவித்து நடை தளர்ந்து உடல் மெலிந்த ஐந்து நாட்களின் பின்னராக ஆறாம் நாள் மதுசூதனன் திரும்பி வந்து சேர்ந்தான்.

தனியாக அல்ல.

அவனோடு ஒரு வயதானவரும்கூட வந்திருந்தார். கூன் விழுந்து, தலை நரைத்துக் கண்கள் பஞ்சடைந்து, நடக்கக்கூட முடியாமல் கை கால்கள் தளர்ந்து விட்ட முதியவர்.

மதுசூதனனின் கைத்தாங்கலில் காரை விட்டு இறங்கி உள்ளே வந்தார்.

கார் நின்ற ஓசை கேட்டு ஓடோடி வந்த பாரதி, கணவனுடன் வந்தவரைக் கண்டதும் வரவேற்பின் அடையாளமாய் லேசாக முறுவலித்துவிட்டு, விரைந்து உள்ளே சென்று சோபாவில் குஷன்களை வசதியாக வைத்தாள்.

ஆனால் அவர் உட்காரவில்லை.

பாரதியின் அருகே வந்து தன் பார்வை குறைந்த கண்களை இடுக்கி அவளைப் பார்த்தார். ''நீதானா அம்மா? மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொன்னாயானால் நிம்மதியாகப் போவேன் தாயே...'' என்றார் குரல் நடுங்க.

ஒன்றும் புரியாமல் பின்வாங்கி கணவனை நோக்கினாள் பாரதி.

''முதலில் உட்காருங்கள் சித்தப்பா'' என்று அவரை அமர வைத்தான் அவன்.

மதுசூதனனுடைய சித்தப்பா இவ்வளவு மூத்தவராக இருப்பது பாரதிக்கு வியப்பாக இருந்தது.

அந்த வியப்பையும் மீறி அவர் தன்னிடம் மன்னிப்பு கேட்டதன் காரணத்தைப் புரிந்துகொள்ளும் ஆவல் மிகுபடக் கண்களில் கேள்வியுடன் கணவனைப் பார்த்தாள்.

கேள்விபுரிந்து, ''உடனே ஏதும் சொல்லிவிடாதே பாரதி. அந்த வைலட் கலர் மாருதியில் வந்தவன் இவருடைய மகன்'' என்று விவரம் கூறினான் அவன்.

## 12

கணவன் திடுமெனச் சொன்ன சேதியில் ஒருகணம் காலின் கீழ் பூமி நழுவியது பாரதிக்கு.

மகன் அவளது உடலை அசிங்கப்படுத்த, இவர் அவளது பெயரை அசிங்கப்படுத்தியவர்.

வெறுப்பும் கொதிப்புமாக அவள் வெறிக்க, அவர் கையேந்தினார்.

விழிகளில் நீர்வழிய, ''அப்படிப் பார்க்காதே தாயே... அ... அவன் ஒரே பிள்ளை, முதலில் எதையும் மறுக்க முடியவில்லை; பிறகு வெறுக்க முடியவில்லை; கடைசியாக விடவும் முடியவில்லை. அப்போது அவனைத் தப்புவிக்க என் வக்கீலுக்கும் எனக்கும் வேறு மார்க்கமும் இல்லை. ஆனால் இங்கே தப்ப வைத்த அப்பனுக்கு அங்கே உயரே இருப்பவனிடம் ஒன்றும் கையாலாகவில்லை. அவன் வட்டி



யோடு வாங்கிக் கொண்டானம்மா. அதே மாருதியில் ஒரு விபத்தில் — இரண்டு மாதம், ஊசி மயக்கத்தில் இல்லாத நேரம் எல்லாம் கதறிக் கதறிச் செத்தான். அதுதாங்காமல் அவனுடைய தாயாரும் போய்விட்டாள்.

''நான் மட்டும்... நான் மட்டுமாக இருக்கிறேனம்மா உன்னிடம் மன்னிப்புப் பெற வேண்டுமல்லவா? அதற்காகவே ஒற்றைப் பிணமாக உலவுகிறேன், தாயே.''

''என் மகன் போனதும் அங்கே போய் உன்னைத் தேடினேன். துப்பே கிடைக்கவில்லை.''

''உன் தந்தைக்கு ஏதாவது செய்ய முயன்றேன். காரித் துப்பிவிட்டார், தெரியுமா? மானம் உள்ள மனிதர். வேறு என்ன செய்வார்? இருந்திருந்து என் பணத்தையா தொடுவார்? எவ்வளவோ மன்றாடியும் ஒரேயடியாக மறுத்துவிட்டார்.''

''ஆனால் மகளே, நீ என்னை மன்னிக்க வேண்டும் என் தாயே. நாலு ஆண்டுகளாக இந்தத் தவிப்பு என்னால் தாள முடியவில்லையே. என் அம்மா! உன் காலைப் பிடித்து கேட்கிறேன். என்னை மன்னித்துவிடு. என்னை மன்னித்துவிடு' என்று அந்த எண்பது வயது கிழவர் நடுங்கிய கரங்களை ஏந்தி அவளிடம் யாசித்தபோது பரிதாபத்தால் அவள் இளகிப் போனாள்.

தன் துயர் மறந்து, ''நடந்ததைக் கனவு என்று மறந்துவிடுங்கள்'' என்று அவரைத் தேற்றினாள்.

மார்பின் குறுக்கே கைகட்டிய வண்ணம் ஒதுங்கி நின்று இதையெல்லாம் பார்த்திருந்த மதுசூதனன் இப்போது அருகில் வந்தான்.

''அவள் மன்னித்து விட்டாள் சித்தப்பா. அல்லது மறக்கச் சொல்லுவாளா?'' என்று அவரது கைகளைப் பற்றி தடவிக் கொடுத்தான்.

அவர் சற்றே அமைதியுற்றதும் வீட்டு வேலைக்காரன் சகாயத்தை அழைத்தான்.

ஏதோ சைகை புரிந்தாற்போல வாயிற்புறம் இருந்து இன்னொருவனும் வந்தான்.

''கீழே கோடி அறையில் சித்தப்பாவைப் படுக்க வையுங்கள். மற்றபடி அவருக்குத் தேவையானவற்றை வால் சொல்லுவான். அதன்படி செய்து கொடு சகாயம்'' என்று கட்டளையிட்டான்.

இருவரின் தாங்கலிலுமாகத் தள்ளாடித் தள்ளாடி அவர் சென்ற திசையையே நோக்கினர் இருவரும்.

''இவருக்கு அறுபது வயதுகூட ஆகவில்லை என்றால் நம்பமுடிகிறதா? கடந்த நான்காண்டு மறுகலின் விளைவு'' என்றான் அவன்.

மறுகியது இவர் மட்டும் தானா?

தன் பெற்றோர்கூட சற்று அதிக மூப்பெய்தித் தோன்றியது பாரதிக்கு நினைவு வந்தது.

ஆனால் இவரைத் தாக்கியது குற்றக் குறுகுறுப்பும் கூட அல்லவா?

கூடவே ஒன்று தோன்றியது.

மாருதியில் விபத்து என்றாரே, அப்படியானால் மற்றவர்கள்?

நினைத்ததைக் கேட்டுவிட அவன் சொன்னான். ''இரண்டு பேர் இன்னமும் உயிரோடு இருக்கிறார்கள். ஆனால் இறந்தவர்கள் பாக்கியசாலிகள் என்கிற மாதிரி நிலைமை... உலகில் எல்லா இடங்களிலும் இது நடக்கிறது என்று இல்லை பாரதி. ஆனால் உன் விஷயத்தில் பிழை புரிந்தவர்களைக் கடவுள் சும்மா விடவில்லை.''



ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு கடவுள் இருப்பதாகத் தோன்றியது பாரதிக்கு.

சிறு அமைதியின் பின் தைரியத்தைக் கூட்டிக் கொண்டு ''உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்'' என்றாள் பாரதி.

''என்ன?''

''வந்து... பிறகு... அதாவது வந்து... விவாகரத்துக்குப் பிறகு நான் உங்களிடம் வேலை செய்யட்டுமா?'' என்று ஒருவாறு கேட்டு முடித்தாள்.

''விவாகரத்தா?'' என்று பெருமூச்சு விட்டான் அவன்.

''ஆனால் அதற்குப் பிறகு என்னிடம் வேலை செய்வது உனக்கு சாத்தியமா? கஷ்டமாய் இராதா?'' என்று வினவினான் தொடர்ந்து.

அரைகுறையாகத் தலையசைத்தாள் அவள்.

சிறு யோசனையுடன், ''பின்னேயும் ஏன் வேலை கேட்கிறாய், பாரதி?'' என்று விசாரித்தான் அவன்.

''....''

பதில் கூற தயங்கியவளை, ''ம். சொல்லும்மா'' என்று ஊக்கினான் அவன்.

மேலும் சற்று தயங்கிவிட்டு, ''உங்களை... உங்களை ஒரேயடியாகப் பிரிவது என்றால்... அது என்னால் முடியாது'' என்றாள் அவள் தீனமாக.

அருகில் வந்து எங்கோ திரும்பியிருந்த அவளது முகத்தை லேசாகப் பற்றித் தன்புறம் திருப்பி, ''என்னால் மட்டும் முடியுமா?'' என்று சன்னக் குரலில் கேட்டான் மதுசூதனன்.

தொண்டையில் அடைத்ததைச் சிரமப்பட்டு விழுங்கி ''உங்களுக்கு அருவருப்பாக இல்லையா?'' என்றாள் பாரதி.

''மரத்தடியில் செல்லும்போது தலையில் எச்சம் பட்டு விட்டால் தலையையா வெட்டிக் கொள்வார்கள் பாரதி?'' என்று அவன் கேட்கவும் அப்படியே அசைவற்றுப் போனாள்.

''உன்னைப் பிரிவது என்றால் எனக்கும் அப்படித்தான் ரதிம்மா. என் தலையையே இழப்பது போலத்தான்.''

உதடு துடிக்க, சமாளிக்கப் பார்த்துவிட்டு முடியாமல், அவன் மார்பிலேயே சாய்ந்து விசும்பலானாள் பாரதி.

லேசாக அணைத்து, அவள் முதுகை மெல்ல வருடிக் கொடுத்தபடி சொன்னான். ''பொயட்டிக் ஜஸ்டிஸ் என்பார் கள். அந்த மாதிரியான நியாயம் உலகில் வெகுவெகு அபூர்வமாக உன் வாழ்வில் காண முடிந்திருக்கிறது. இத் தோடு இந்த அருவருப்பை உன்னால் ஒதுக்கிவிட முடியாதா, ரதிம்மா? அத்தோடு, உலகத்தில் எல்லோரும் கதிர் போன்ற வர்கள் இல்லை. தெரியுமா? அவனைப் போல அமைவது வாழ்வில் நியதியும் இல்லை. ஆங்கிலத்தில் 'எக்ஸம்ப்ஷன்' என்பார்களே — அதுபோல ஒரு முரண்பாடு.''

''ஐந்து பேர், மது'' என்றாள் பாரதி விம்மும் குரலில்.

''எத்தனை ஆயிரம் கோடிப் பேர் பார்க்கிறாய் கண் ணம்மா?''

எதையோ யோசித்த அவளது விழிகள் லேசாகக் கலங் கின. ''மது, உங்கள் சித்தப்பாவின் சொத்து எதையும் நீங்கள் தொடமாட்டீர்களே?''

''சித்தப்பாவின் வீட்டுவழி முறைகள் எப்போதுமே எனக்குப் பிடித்தம் இல்லை ரதி. அப்பா இருக்கும் போதே



பிரிந்துவிட்ட குடும்பங்கள் தான். கதிர் இறந்த பிறகு ஒரு பரிதாபத்தினால் அங்கே போய் வருகிறேனே தவிர வேறு எந்தப் பந்தமும் இல்லை. அவராகச் சொத்தைத் தந்தால்கூட ஆசிரமத்தை விரிவு படுத்தக் கொடுத்துவிடலாம். சித்தப்பா நொந்துபோன ஒரு வயதான மனிதர். இரக்கத்தின் பேரில் அவருக்கு உதவுகிறோம் என்பது தவிர மற்றதை அடியோடு மறந்துவிடவேண்டும், கண்மணி.''

''முடியுமா மது?'' என்று சிறு கலக்கத்துடனேயே கேட்டாள் பாரதி.

''சர்வ நிச்சயமாய் முடியும்'' என்று உறுதியோடு பேசிய அவனது நம்பிக்கையின் முன்னே அவளது கலக்கமும் மறை யத் தொடங்கியது.

அவளது கைகள் மெல்ல உயர்ந்து அவன் கழுத்தில் மாலையெனக் கோத்தன.

முகத்தை அவனது கழுத்தடியில் மெல்லப் பதித்து ''அதற்கு எனக்கு உதவி செய்வீர்களா, மது?'' என்று சின்னக் குரலில் வினவினாள்.

ஒரு கணம் இறுகிப் போனான் அவன்.

பிறகு அவளது உச்சந்தலையில் மிருதுவாய் இதழ் பொருத்தி, ''கேட்க வேண்டுமா?'' என்றான்.

''நான்... நான் தெரியாமல் தப்பு செய்தாலும்...''

தன்னை மீறிக் கை நீட்டி விடக்கூடும் என்று அவள் அஞ்சுவது அவனுக்குப் புரிந்தது.

''என்னிடம் உனக்கு நம்பிக்கை இருக்கிறதல்லவா? உன்னுடைய விரல் நகத்துக்குத் தீங்கு வரக்கூட நான் விட மாட்டேன் என்கிற உறுதி இருக்கிறதல்லவா? அதை விடா

மல் மந்திரம்போலப் பற்றிக்கொள். எல்லாம் சரியாகவே நடக்கும். அதை அந்தக் கடவுள் பார்த்துக் கொள்வார்'' என்றான் அவன் திடமான குரலில்.

விழிகளை உயர்த்தி அவனை ஒரு தரம் ஆழப் பார்த்தாள் பாரதி.

பின் மெல்ல அவள் முகம் உயர்ந்தது — அவனுடைய ஏங்கிக் கிடந்த உதடுகளை நோக்கி.